

# முகவரி





## மண் கமழும் மங்கல விழாச் சிறப்பு மலர்





பட்டிப்பளைப் பிரதேச கலை
இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்
மட்டக்களப்பு - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி

- அஞ்சல் - 01

## மண் கமழும் மங்கல விழாச் சிறப்பு மலர்

இதழாசிரியர்
த.மேகராசா

வெளியீடு

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய
சமூக அபிவிருத்தி ஒன்றியம்
மட்டக்களப்பு
2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி

மீன் பாடும் தேனாடு என சிறப்பிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சிறப்புச் சேர்ப்பது படுவான்கரைப்பிரதேசம். இதில் வளமும் வனப்பும் நிறைந்த ஒரு பிரதேசக் கூறே மண்முனை தென்மேற்கு பிரதேசம்.

தாந்தோன்றி அப்பரும், தாந்தாமலை முருகனும், நாககட்டும் அமைந்த சிவபூமி நீண்ட கால வரலாற்று அடையாளத்துடன் தமிழர்கள் தனித்துவமாக வாழும் அன்னை தமிழ் மண், பரனில் இருந்து இயல்பாய் பாட்டிசைக்கும் உழவர்களால் பண்ணாகி பொன் என நெல்மணிகள் விளையும் வளமண்.

மண்ணில் தோன்றிய முன்தோன்றிக் கலைகளை கண்ணென மதித்து அவற்றுக்கு வணக்கோலமிட்ட கலைஞர்கள் பெருமளவில் வாழும் கலைப்பீடம் இம் மண்.

தமிழர்களுக்கென தனித்துவமான பண்பாடும் கலைப்பாரம்பரியமும் வரலாறும் உண்டு. அதே வேளை ஒவ்வொருவருக்கும் சிறப்பான அடையாளப்படுத்தல்கள் உண்டு. பட்டிப்பளைப் பிரதேசத்தின் அடையாளமாய் வாக்கு மூலமாய் வெளிவரவிருக்கும் இச் சஞ்சிகைக்கு முகவரி என பெயரிட்டுள்ளோம்.

**கணினி வடிவமைப்பு**
**அ.ஜெயலக்ஷ்மி**

**இதழாசிரியர்**
**த.மேகராசா (த.மேரா)**

## பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் நிருவாக உறுப்பினர்களின் பெயர் விபரம்

**தலைவர்**
திரு.த.மேகராசா

**செயலாளர்**
செல்வி மு.சுதர்ஷினி

**பொருளாளர்**
திரு.சி.ஜீவிதன்

**உப தலைவர்**
திரு.சி.கங்காதரன்

**உப செயலாளர்**
திரு.சு.பார்த்தீபன்

**நிருவாக உறுப்பினர்கள்**
திரு.அ.கருணாகரன்
திரு.கு.மகேஸ்வரமூர்த்தி
திரு.வா.சபாஸ்கரன்
திரு. தா.ஜெயராம்
திரு.ஆ.தனுஸ்கரன்
திரு.த.ஜெமஸ்கரன்
செல்வி.பு.சிவதயாளினி
செல்வி.க.தரணியா
செல்வி.வி.ரிருஷா
செல்வி.க.ஜெகதா
திரு.அ.தசரதன்
திரு.வெ.யோகேந்திரன்
செல்வி.ப.ஜீவலெட்சுமி
திரு.க.சுரேஸ்
திரு.க.பகிரதன்
திரு.பொ.கோணேசன்
திரு.அ.தேகதாஸ்
செல்வி.செ.நதியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

## "படுவானில் புது ஒளியாய் முகவரி"

பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் பிரதேச கலைகளைப் பேணும் வகையிலும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் பிரதேச கல்வி முன்னேற்றம் -சமூக அபிவிருத்தி என்பவற்றை அடையும் வகையிலும் பிரதேசம் தழுவிய வகையில் உறுப்பினர்களை உட்கொண்டு இயங்கிவரும் ஒரு பொது அமைப்பாகும். 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பினூடாக ஏலவே மெல்லப்பறத்தல் (கலை, இலக்கிய நூல்) ஆய்வரங்கக் கட்டுரைகள் - 2011 நூல்கள் வெளியிடப்பட்டிருப்பினும் சஞ்சிகை என்னும் வகையில் இதுவே முதல் முயற்சி.

காலமாற்றத்தில் பிற நாகரீகத்தில் மோகம் கொண்டு அதனையே போற்றுவதற்கும் அவையே தம் அடையாளம் என ஆக்குவதற்கும் பலர் முனைப்புக் காட்டுகிறார்கள். தாம் தனித்துவமான மொழியை - பண்பாட்டை - கலையை - இலக்கியத்தைக் கொண்டவர்கள் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இது வேதனைக்குரியது. நாம் வேறொரு கலாசாரத்தை - பண்பாட்டை பின்பற்றும் போது நாம் நாமாக இல்லாமல் வேறொரு இனத்தின் - சமூகத்தின் அங்கமாக மாறி விடுகிறோம் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். எந்நிலையிலும் நம் சுய அடையாளத்தை அழியாது பாதுகாத்தாலே உலக வரலாறு எம்மை அங்கிகரிக்கும்.

மட்டக்களப்பின் ஆன்மாவாக விளங்கும் படுவான்கரைப் பிரதேசத்தில் கூத்து,கரகம்,கும்மி போன்ற கலைகளுக்கு சிறப்பிடம் உண்டு. தான்தோன்றீச்சரம் பழமையின் வரலாறாக தெய்வீகம் பரப்பும் பீடமாக உள்ளது. இங்குள்ள தேர் சிற்பக்கலையின் மகிமை சொல்வதாக இருக்கிறது. மக்கள் பேசும் மொழி தனி அடையாளமாய் விளங்குகிறது. இவையே நம் முகவரிகள். இவற்றை பாதுகாக்கும் ஆவணமாய் முகவரி வெளிவர இருக்கின்றது.

தவிர இலக்கிய உருவாக்கத்தில் அதிகார பலம்மிக்க ஒரு சமூகமே முதன்மை பெற்றுவந்துள்ளது. 19ம் நூற்றாண்டிற்குப் பின் இந்நிலை மாறியிருப்பினும் வெளியீட்டு வசதிகள் பல்கிப் பெருகியிருப்பினும் இன்னும் எத்தனையோ பேர் அத்தகைய வெளியீட்டுத் தளம் இன்றியே இருக்கின்றனர். மாணவர்களை மொழியாளுமை மிக்கவர்களாக மாற்ற "முகவரி" அவர்களின் உணர்வுகளை - சிந்தனைகளை அஞ்சல் செய்யும்.

இந்நூலிற்கு நிதி அனுசரணை புரிந்த வேள்ட் விஷன் - பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தித்திட்ட முகாமையாளருக்கும் அவ்வமைப்புக்கும், ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய பெரியோருக்கும் ஆக்கங்கள் தந்தோருக்கும் மற்றும் அனைவருக்கும் நெஞ்சம் உவக்கும் நன்றிகள்.

த.மேகராசா
தலைவரும் இதழாசிரியரும்,
பட்டிப்பளைப் பிரதேச கலை
இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch) Batticaloa Centre.
Ashrama & Children Homes.

*Ramakrishnapuram, Batticaloa.*
*Phone - 0094 65 2222752*
*Email - rkmbat@gmail.com*

மட்டுமாநகரத்தின் நீர் வளமும், நெல்வளமும் ஒருங்கே அமையப்பெற்ற, பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம், இந்த ஆண்டு சிறப்பாக நடாத்தவிருக்கும் மண்கமழும் மங்கல விழாவின்போது வெளியிட உத்தேசித்துள்ள **"முகவரி"** சஞ்சிகைக்கு ஆசி வழங்குவதில் அகம் மகிழ்கின்றேன்.

**"நீர் ஊற்றிப் பிசைந்து சிலை செய்வதற்கு தயாராக இருக்கும் களிமண்ணைப் போன்றது இளம் சிறார்களின் உள்ளம்"** என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். சிறுவர், சிறுமியரையும், இளைஞர், யுவதிகளையும் உள்வாங்கி அவர்களது ஆக்கத்திறன்களை உள்ளடக்கியதாக வெளிவரவிருக்கும் மண்வாசனையோடு கூடிய இத்தகைய ஆக்கபூர்வமான சஞ்சிகையின் செயற்பாடுகள் உயர்ந்த உள்ளத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எமது இனத்தின் கலை மற்றும் கலாசாரம் போன்றவை உறுதியான ஆன்மீக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டவை. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடாத்தங்கள் மனித வாழ்வின் உயர் விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன. நமது இலக்கியங்களும் கலைகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. இப்படியான கலை, இலக்கியங்களோடு கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கற்றோர்கள் முன்மாதிரி காட்டி ஊக்குவிக்க வேண்டும்.

அந்த வகையில் இப்படியான சஞ்சிகைகள் பிரதேசங்கள் தோறும் வெளிவரவேண்டும். இச் சஞ்சிகையில் காத்திரமான எழுத்தாக்கங்கள் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.இதன் ஆக்கத்திறன்களை ஒழுங்குபடுத்தி முன்னெடுக்கும் சஞ்சிகைக் குழுவினர், அவர்களுக்கு வழிகாட்டும் பெரியோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இனிவரும் காலங்களிலும் "முகவரி" சஞ்சிகை ஆல்போல் தளைத்து, அறுகு போல் வேர் ஊன்றி, எழுத்தாற்றல் வளர்ச்சிக்கு சிறப்பாக பணியாற்ற வேண்டு மென, இந்த ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இணைந்துள்ள அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்கவேண்டுமென பகவான் ஸ்ரீராமகிருஷ்ண குருதேவரைப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்
சுவாமி கபாலீசானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலமாய் முகவரி

படுவான்கரை பெரு நிலத்தின் பண்புகளை பறை சாற்றும் அறிவாளிகளின் ஆளுமை விருட்சமாக “மண் கமழும் மங்கல விழா”

இவ்வருடம் கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் வெகு சிறப்பாக நடாத்துவதில் படுவான்கரையில் பிறந்தவன் என்ற வகையில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த விழாவின் இன்னுமொரு சிறப்பம்சமாக “முகவரி” எனும் முத்தமிழ் சஞ்சிகை பிஞ்சுகள் தொடக்கம் பெரியவர்கள் வரை அவர்களின் ஆக்கங்களுக்கு களம் அமைத்து கொடுத்திருக்கின்றன. இதில் உள்ள ஆக்கங்கள் அனைத்துமே அறிவுக் கூர்மையும் தமிழனின் சிறப்பும் பாரம்பரிய பண்பாட்டு கோலங்களையும் சித்திரித்துள்ளன.

ஒரு இனத்தின் வரலாறு நிலத்தில் தான் தங்கியிருக்கின்றது. நிலம் பறிபோகுமாயிருந்தால் அந்த இனத்தின் மொழி கலை பண்பாடு ஒழுக்கம் அனைத்துமே இல்லாமல் போகும். அந்த வகையில் மொழிக்காகவும் பண்பாட்டிற்காகவும், பாரம்பரியத்துக்காவும் உழைக்கும் நாம் எல்லோரும் எமது மண்ணையும் எமது மக்களையும் பாதுகாப்பதற்கும் அணிதிரள வேண்டும்.

வரலாற்றை மாற்றும் சக்திகளுக்கும் மண்ணை ஆக்கிரமிக்கும் சக்திகளுக்கும் பின்னால் அபிவிருத்தி என்ற மாயை வித்தைக்கு விலை போகாமல் இனத்தின் தனித்துவத்தையும் கலை பண்பாட்டையும் காப்பாற்றக் கூடிய உண்மையான சக்திகளை இனம் கண்டு அதன் பின்னால் ஒன்றினைவோம் அப்போது தான் நாம் நாமாக வாழ முடியும்.

“கடந்த காலத்தை அறியாதவனுக்கும், நிகழ் காலத்தைப் பற்றி அறியாதவனுக்கும் எதிர் காலமே கிடையாது”

பா. அரியநேத்திரன் (அரியம்)
பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு.
“இரதாலயம்”, அம்பிளாந்துறை, கொக்கட்டிச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"முகவரி சமூகத்தில் முத்திரை பதிக்கட்டும்"**

மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்ட பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமானது தனது இலக்கினை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணிப்போடும் ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் தொழிற்பட்டு வருவதையிட்டு மிகவும் மகிழ்சியடைகின்றேன்.

அதனுடைய பலதுறை சார்ந்த பயணநோக்கில் முகவரி இழந்து நிற்கின்ற இளம் எழுத்தாளர்களின் உள்ளார்ந்த எழுத்தாற்றலை "முகவரி" எனும் சஞ்சிகையூடாக சமூகத்தில் முத்திரை பதிக்கும் இந்த முயற்சியினை நான் வெகுவாகப் போற்றுகின்றேன்.

தனித்துவமான நம் இனத்தின் கலை கலாசார ஏனைய விழுமியங்கள் சார்ந்த இவ்வமைப்பின் அனைத்துச் செயற்பாடுகளும் சமூகத்தில் தடம்பதித்த நிகழ்வுளாக என்றும் வெற்றிபெற எனது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த.பேரின்பராசா
தவிசாளர்,
பிரதேசசபை,
மண்முனை தென்மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"முகவரி கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கும்"**

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் மூலம் நடாத்தப்படும் மண்கமழும் மங்கல விழாவின் போது வெளிவரும் முகவரி மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல கலைத்துறையைச் சார்ந்த கலைஞர்களையும் உள்ளடக்கி ஒரு கலைப்பிரதேசமாக விளங்கும் இப்பிரதேசத்தின் கலை கலாசார பாரம்பரியங்களை வெளிக்காட்டும் வகையில் இப்பிரதேசக் கலைஞர்களின் ஆக்கபூர்வமான கலைப்படைப்புக்களை உள்ளடக்கியதாக வெளியிடப்படும் இந்நூலானது இங்குள்ள கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுப்பதாக அமைகின்றது. இம்முயற்சியில் ஈடுபடும் கலைஞர்கள், இளைஞர்கள் தமது செயற்பாட்டின் மூலம் மனித வாழ்வில் இணைந்ததாக விளங்கும் கலை கலாசார பண்பாட்டு அம்சங்களை யாவருக்கும் வெளிக்காட்டுவதாக அமையும் இம்முயற்சி வரவேற்கத்தக்கதாகும்.

எமது பிரதேசமானது ஆலமர விருட்சம் போல் கலையையும், கலைஞர்களையும் வளர்த்து வருகின்றது என்பதனை உணர்த்துவதாக அமையும் பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் இப்பணியானது தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி. வா. அருள்ராஜா
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்
ம.தெ.மே.பட்டிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"மாற்றத்தை நோக்கிய பயணம்"**

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் பிரதேச கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களையும் கல்வி, பொருளாதாரம், சமூக வாழ்வியல் அம்சங்களையும் அடையாளப்படுத்தி, சிறுவர்கள், இளையோர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்கத்தை முதன்மைப்படுத்தி "முகவரி" சஞ்சிகையினை வெளியிடுவதையிட்டு நான் அகமகிழ்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியர்
திண்ணியராகப் பெறின்" - என்று வள்ளுவர் கூறுவதற்கமைய ஒன்றியத்தினர் மண்மகிழ மண்கமழும் மங்கல விழாவினை நடாத்தி முயற்சியுடன் வெளியிடும் முகவரி சஞ்சிகை சிறப்புடன் - மாற்றத்தை நோக்கிய பயணமாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ந.தயாசீலன்
கோட்டக்கல்வி அதிகாரி
ம.தெ.மேற்கு
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## "பாராட்டத்தக்க முயற்சி"

பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமானது, எமது பிரதேச மண்வாசனை தழுவும் வகையில் நடாத்தும் "மண்கமழும் மங்கல விழா" எனும் நிகழ்வில் வெளியிடும் "முகவரி" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதேச பண்பாட்டம்சங்களைப் பேணிப் பாதுகாத்துவரும் இளைஞர்களின் உயிரோட்டமான இவ்வாறான முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. பிரதேச எழுத்தாளர்களின் படைப்புக்கள் இதில் தடம் பதித்திருப்பதும் பிரதேச மண்வாசனைகளை வெளிப்படுத்தும் கருத்துக் களஞ்சியமாக வெளிவருவதும் பெருமைக்குரியதே.

ஒன்றியத்தின் எழுச்சி மிகு இச் செயற்பாடுகளும் ஆவணப்படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்து வளரவேண்டுமென்றும் இது போன்ற ஆற்றல் உள்ள செயற்பாட்டாளர்கள் ஒருங்கிணைந்து பிரதேச அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடவேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

ஜி.ஜே.அனுராஜ்
முகாமையாளர்
வேள்ட் விஷன் லங்கா
பட்டிப்பளைப்பிராந்திய
அபிவிருத்தித் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரிகள்..............

## கட்டுரைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. மண்முனை தென்மேற்குப்பிரதேசத்தின் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் | - ஜெ.ஜீவரதி | 01 |
| 2. மட்டக்களப்பு பண்பாட்டாய்வில் க.மகேஸ்வரலிங்கம் | - த.மேகராசா | 10 |
| 3. மரண வீடுகளில் மரணித்துப் போன நடைமுறைகள் | - வி.றிறுசா | 18 |
| 4.அசேத விவசாய முறையும் பாதிப்புக்களும் | - மு.சுதர்ஷினி | 23 |
| 5. முனைக்காடு அருள் மிகு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலயம் | - கு.மகேஸ்வரமூர்த்தி | 28 |
| 6. பட்டிப்பளை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரத்தியே கல்விச்செயற்பாடுகள் பற்றிய ஒரு தேடல் | - அருள் கருணா | 30 |
| 7.மண்முனை தென்மேற்கு பிரதேச கலைக்கழகங்கள் ஒரு பார்வை | - முருகு தயாநிதி | 34 |
| 8. அறிவியல் பார்வையினால் சமூக மாற்றம் | - பொ.வித்தியா | 40 |
| 9. பாலகப்போடி அண்ணாவியார் சில பதிவுகள் | - க.ஜெகதா | 41 |
| 10. கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களும், அவற்றிற்கான தீர்வுகளும் | - பா.சோபா | 43 |
| 11. 2011 மண்கமழும் மங்கல விழா ஏற்படுத்தியிருக்கும் மாற்றமும் மாற்றத்திற்காக சூழலும் | | 47 |


## கவிதைகள்


| | | |
|---|---|---|
| 1. முகவரி | - அம்பிளாந்துறையூர் அரியம் | 06 |
| 2. படுவான் புகழ் | - சோலையூரான் | 07 |
| 3. கறுப்பு வருஷங்கள் | - ஜீ.ஜெயகுகநந்தினி | 09 |
| 4. புறப்படு தோழா | - கோ.விறிகங்கா | 12 |
| 5. தேரு வருகிறது | - படுவான் பகீ | 13 |
| 6. தட்டிக் கொடுக்கிறது | - ச.துவாரகா | 13 |
| 7. எங்கள் தேசம் | - ஜெ.சோபிகா | 17 |
| 8. ஏழைகள் | - தி.சிந்துஜன் | 20 |
| 9. என் தாய் | - செ.நதியா | 20 |
| 10 ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும் | - மாரிமகன் | 22 |
| 11. எரிக்கிறது | - முனையூர் ஜீவி | 24 |
| 12. வேண்டும் | - படுவான் பகீ | 25 |
| 13. தேரிழுக்க வாரீர் | - சோலையூரான் | 27 |
| 14. சிந்திப்போம் | - அ.தேகதாஸ் | 39 |
| 15. அம்மா | - பே.யோகினி | 39 |
| 16. வைரையில் ஓர் குரல் | - சு.பார்த்தி | 42 |
| 17. விழித்தெழு மனிதா | - ப.பிறியாந்தி | 42 |


## சிறுகதை


| | | |
|---|---|---|
| 1. வேண்டாம் அம்மா இன்னுமொரு அகதி வாழ்க்கை | - ச.லோஜி | 08 |
| 2. ஏன் அவள் அப்படிச் செய்தாள் | - நா.பாஸ்க்கரன் | 14 |
| 3. முன்னால் செய்தது பின்னால் விளையும் | - க.அச்சோபனா | 21 |
| 4.வறுமையில் கல்வி | - பொ.வித்தியா | 26 |


## ஏனையவை


கலைஞர் கௌரவிப்பு 2011, 2012 41




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்முனை தென் மேற்குப் பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் - ஓர் நோக்கு -

ஜெ.ஜீவரதி

**அறிமுகம்:**

பெண்கள் தலைமைக் குடும்பங்கள் என்பது இலங்கையை பொறுத்தவரை ஒரு புதிய தோற்றப்பாடல்ல. ஏனெனில் வரலாறு முழுவதுமே பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டே இருந்து வந்துள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டில் நீடித்திருந்த யுத்தம், சுனாமி பேரலை மற்றும் பல நிகழ்வுகள் என்பன எமது சமூகங்களின் பாரம்பரிய சமூக பொருளாதார கலாசார சமயக் கட்டமைப்புகளை சீர் குலையச் செய்தன. இதனால் இடப்பெயர்வு, குடும்ப ஒருங்கிணைப்பு அற்றுப் போதல், வாழ்வாதாரச் சிதைவு, நடத்தைக் கோலங்களில் மாற்றம் என்பன குடுப்பக் கட்டமைப்பில் பல மாறுதல்களை ஏற்படுத்தின. இந்நிலையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்றொரு அம்சம் தற்போது நமது சமூகங்களில் முக்கிய மான ஒரு வெளிப்பாடாக பிரதிபலிக்க தொடங்கிய அதே நேரம் பெண்ணிலை வாதிகள் மற்றும் சமூக விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு விடயமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் என்பது "ஒரு பெண் அல்லது பெண்கள் குடும்பத் திற்கு வருமானத்தை ஈட்டி அவர்கள் வருமா னத்திலே வழிநடத்திச் செல்லும் குடும்பங்கள் எல்லாம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்" என வரைவிலக் கணப்படுத் தலாம். கணவனை இழந்தவர்கள் மட்டுமே பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் சேர்க்கப்படும் நிலைமை இன்று மாறி கணவனால் கைவிடப்பட்ட அல்லது விவாக ரத்து பெற்ற பெண்கள், குடுபத்தின் மூத்த ஆண் அங்கத்தவர் காணாமல் போதல் அல்லது அங்கவீனமுற்றவராக இருத்தல், வேறு காரணங்களுக்காக ஒரு குடும்பத்தை தலைமையேற்று நடத்தல் என்பன போன்ற பல்வேறு வகைக்குள் அடங்குபவர்களும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக் குள்ளே அடக்கலாம். உலகளாவிய ரீதியிலும் சரி, இலங்கையிலும் சரி பெண்கள் ஆண்களை விட சமூகப், பொரளாதார, கலாசார ரீதியாக பல பிரச்சினைகளை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். அதே நேரம் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பெண்கள் ஏனைய பெண்களை விட ஒரு படி மேலான புறக்கணிப்புக்கு உள்ளாகி அவர்கள் வாழுகின்ற சூழலில் உள்ள சமூக, பொருளாதார, கலாசார, சமயப் பின்னணிகளால் பல்வேறு பிரச்சினை களையும், சவால்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். பெண்கள் தலைமைக் குடும்பங்களை பொறுத்தவரை அவரது குடும்பத்திற்கு தேவையான பொருளாதாரம், தீர்மானம் எடுத்தல், பிள்ளை பராமரிப்பு போன்ற அனைத்துமே அப்பெண்ணிடமே காணப்படும்.

தொன்று தொட்டு நிலவி வரும் பால்நிலை அசமத்துவம் காரணமாக சாதாரண கிராம மட்டங்களில் உள்ள பெண்கள் தொடக்கம் நகர்ப்புறங்களிலுள்ள உயர் பதவிகளை வகிக்கும் பெண்கள் வரை சகலரும் ஏதோ ஒரு வகையில் பல சவால் களுக்கு மத்தியிலே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இவர்கள் எல்லோரையும் விட கணவன் இல்லாது குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்படும் பெண்கள் ஒரு படி மேலான நிலையில் சாவால்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் என்பதே யதார்த்தமாகும். இதற்கு காரணம் இவர்கள் மத்தியில் நிலவும் தாழ்வுச் சிக்கலும், ஏனையோர் இவர்களை ஒதுக்கி வைத்தலுமாகும். எனவே தான் குறிப்பிட்ட இவ்வாய்வு பிரதேசத்தில் உள்ள பெண்கள் தலைமைக்குடும்பங்கள் சமூகப்பொருளாதார கலாசார ரீதியாக எதிர் நோக்குகின்ற பல பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வுகளை முன்வைப்பதன் ஊடாக ஏனைய பெண்களைப் போல் இவர்களும் சமனான அந்தஸ்த்து சுயகௌரவத்துடன் வாழ வேண்டியவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

மட்டக்களப்பு வாவியானது இம்மா வட்டத்தை எழுவான் கரைப்பகுதி, படுவான் கரைப்பகுதியென இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கின்றது. இப்பிரிவினையில் மேற்கு புற மாக உள்ள பெரும் நிலப்பகுதி படுவான் கரையாகும் இப்பெரும் நிலப்பகுதியில் போரதீவு பற்று பிரதேசத்திற்கும் மண்முனை மேற்குப் பிரதேசத்திற்கும் இடையே காணப்படும் பகுதியே மண்முனை தென்மேற்குப் பிரதேசமாகும். இப்பிரதேசமா னது சுமார் 120 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது. இங்கு வாவியோரமாக சனத்தொகை கூடிய பல கிராமங்கள் காணப்படுகின்றன. அவையாவன கொக்கடிச்சோலை, முனைக்காடு, முதலைகுடா, மகிழடித்தீவு, படையாண்ட வெளி, பண்டாரியாவெளி, கடுக்காமுனை, அம்பிளாந்துறை, அரசடித்தீவு, பட்டிப்பளை, அருள்நேசபுரம் என்பனவாகும். இதனைவிட இப்பிரதேசத்தின் மேற்குப் புறமாக வயல்வெளிகளை அண்டி பல கிரா மங்கள் காணப்படுகின்றன.

மேலும் இப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களை விட பல வகையிலும் பாதிப்புக்குள்ளான ஒரு பிரதேசமாகவும் பல பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமா கவும் காணப்படுகின்றது. ஏனெனில் 20 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த யுத்தத்தின் தாக்கத்திற்குள்ளான ஒரு பிரதேசமாகும். இதனால் பெண்கள் தலைமைக்குடும்பங்கள் அதிகரித்து காணப்படுகின்றது. குறிப்பாக 1981ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் மகிழடித்தீவு இறால் வளர்ப்பு பண்ணை மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை, 1990ம், 1991ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் மற்றும் பல இராணுவ நடவடிக்கைகள் பல பெண்கள் தமது கணவன்மாரை இழக்க காரணமாயிருந்தது. அத்தோடு பல்வேறு பட்ட பாதுகாப்பு கெடு பிடிகளின் நிமிர்த்தம் பலர் இனம் தெரியாத வர்களால் கடத்தப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர். எனவே தான் யுத்தம் காரணமாகவே பல நூற்றுக்கணக்கான பெண்கள், குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றனர். இவை தவிர இயற்கையான மரணங்கள், நோய்வாய்ப் பட்டிருத்தல், விவாகரத்து போன்ற பல காரணங்களினாலும் பெண்கள், குடும்பங் களின் தலைமைப்பங்கை வகிக்கின்றனர். இப்பிரதேசத்தை பொறுத்தவரை குடும்பத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்று செயற்படும் பெண்கள் தமது வாழ்வாதார, பொருளாதார. சமூகத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலும். சமூகத்தில் தமது இருப்பை உறுதிப்படுத்தி கொள்வதிலும் பல சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

## ஆய்வுப்பிரதேசத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

### வறுமை:

இப்பிரதேச மக்கள் பெரும்பாலானோர் ஏழைகளாகவே காணப்படுகின்றனர். **1"விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களுமே பிரதான வருமானம் ஈட்டும் தொழிலாக காணப்படுவதால் குறிப்பிட்ட ஒரு சாராரை தவிர ஏனைய பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழுகின்ற னர்"** *(Vulnerability -Poverty profile, Batticaloa District, Manmunai South West(paddipalai), 2006.)* இந்நிலையானது பெண் தலைமைக் குடும்பங்களை பொறுத்தவரை ஒரு படி மேலானதாகவே காணப்படுகின்றது. அதாவது ஏழையாக இருந்த குடும்பங்கள் கணவன் இல்லாத விடத்து மிகவும் ஏழ்மை நிலைக்கு செல்கின்றனர். அந்தவகையில் பெண் தலைமை குடும்பங்களை பொறுத்தவரை வறுமை என்பது ஒரு பிரதான பிரச்சினை யாகும். உணவு, உடை உட்பட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்று வதில் நாளாந்தம் மிகவும் கஸ்டப்படுகின்றனர். ஏனெனில் நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக – பொருளாதார முறைமை காரணமாக உறவினர்களின் உதவியோ நிதி உதவியோ இன்றி இத்தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளனர். இதனால் சமூகத்தில் உள்ளவர்களுக்கும் ஏனையவர்களுக்குமான இடைவெளி அதிகரித்து காணப்படுகின்றது. அதாவது இன்று நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக இப்பெண்களின் குடும்பங்கள் எந்தவித உதவியும் இன்றி உறவினர்கள் உட்பட்ட சமூகத்தில் இருந்து அந்நியப் படுத் தப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இதன் காரணமாக பொது வாழ்வியலிருந்தும், சமூக வாழ்வியலிருந்தும் முற்றுமுழுதாக என்றில்லாமல் ஓரளவு ஒதுக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். நாளாந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு நாளும் கடுமையாக உழைக்க வேண்டியளவிற்கு பொருளாதாரச் சுமையை *(Economic Burden)* உடையவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

## நிரந்தரமான தொழில் இன்மை

இக்குடும்பங்களை பொறுத்தவரை வறுமைக்கும் தொழிலுக்கும் இடையில் தொடர்பு அதிகரித்தே காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடி என்பது எல்லா குடும்பங்களிலும் நிலவுகின்றது. இந்நிலையில் ஒரு குடும்பத்தில் கணவன் இல்லாதவிடத்து மொத்த நிதிச்சுமையும் அக்குடும்ப பெண்ணிடமே விழுகின்றது. ஆனால் இவர்களுக்கு என்று நிலையான ஒரு தொழில் இல்லாமை பாரிய ஒரு பிரச்சினையாகும். இப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் குடும்பங்களின் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள பெண்கள் தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்ற கைத்தொழில்களையே செய்து வருகின்றனர். உதாரணமாக நெல் குற்றி விற்றல், தயிர் போத்தல் விற்றல், இலைக்கறிவகை வியாபாரம், மாடு, ஆடு, கோழி வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், சிறுகடை வியாபாரம் போன்றவற்றையும் இதனோடு வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடு செல்லல் என்பனவற்றையும் குறிப்பிடலாம். இத் தொழில்கள் அனைத்துமே நிரந்தரமானவை அல்ல. ஏனெனில் இவற்றூடாக அவர்களது குடும்பத் தேவைகளை நிறை வேற்று மளவிற்கு வருமானம் கிடைத்தால் மாத்திரமே அத்தொழில்களை தொடர்ந்து செய்கின்றனர். இல்லாவிட்டால் வேறு வேறு தொழில்களையே செய்ய முற்படுகின்றனர். இத்தொழில்கள் அனைத்திலும் உடல் உழைப்பே அதிகமாக உள்ளதே தவிர அதனால் பெறும் வருமானம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு ஒரு சில பெண்கள் தவிர பெரும்பாலானோர் எதுவித தொழில்களும் செய்யாது காணப்படுகின்றனர். ஏனெனில் எந்தத் தொழிலை எப்படி செய்வது என்பது தொடர்பாக எந்த வித அறிவும் அற்றவர்களா கவும் அதே நேரம் சுயதொழில் ஒன்றை தொடங்குவதற்குரிய பொருளாதார உதவியும் அற்றவர்களாகவும் காணப் படுகின்றனர். இவர்களது வருமான வளம் என்பது சமுர்த்தி உணவு முத்திரை ஒன்றே என்று கூறலாம். எனவே பெண்கள் தலைமைக்குடும்பங்களில் நிலவும் ஏழ்மை நிலைக்கு நிரந்தரமான ஒரு தொழில் இல்லாமை பிரதான காரணம் எனலாம்.

## பிள்ளைகளின் கல்வித் தேவையை நிறைவேற்ற முடியாத நிலை:

பெற்றோர் என்ற வகையிலும், குடும்பத்தின் தலைவி என்ற வகையிலும் பிள்ளைகளின் கல்வி உட்பட்ட தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை இப் பெண்களுக்கு உண்டு. ஆனால் இவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார கஷ்டம் காரணமாக சாத்தியப்படாத ஒன்றாகவே இது காணப்படுகின்றது. இக்குடும்பங்களை சேர்ந்த ஒவ்வொரு பிள்ளைகளும் அவர்களது குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை தொடர முடியாதுள்ளனர். ஏனெனில் இக் குடும்பங்களில் நிலவும் வறுமை காரணமாக இப்பெண்கள் தமது தொழிலுக்கு உதவியாக தமது பிள்ளைகளை குறிப்பாக ஆண்பிள்ளைகளை சேர்த்துக்கொள்கின்றனர். அத்தோடு 16,17 வயதிற்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகள் இக்குடும்பங்களில் இருந்தால் அவர்களே அக்குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். மாறாக பெண்பிள்ளைகளாக இருந்தால் அவர்கள் இளவயதிலே திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றனர். இதனால் இப்பிள்ளைகள் கல்வியை இடையில் நிறுத்தி விடுகின்றனர். எனினும் குறிப்பிட்டு கூறக்கூடிய குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் இராமகிருஷ்ண மிஷன், அமெரிக்க மிஷன் போன்ற விடுதிகளில் தங்கி படித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் உயர்கல்வியை தொடர்வது என்பது கஷ்டமாகவே காணப்படுகின்றது. எது எவ்வாறாயினும் பெண் தலைமைக் குடும்பங்களை சேர்ந்த பெண்களின் இந் நிலையானது அவர்களை மேலும் பாதிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். எனவேதான் இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய குடும்பங்களைவிட இக்குடும்பங்கள் கல்வி ரீதியாகக் கூட பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

### போதிய சுகாதார வசதியும் போசாக்கின்மையும்

பெண் தலைமைக் குடும்பங்களில் நிலவும் வறுமை நிலையானது அவர்களுக்கு தேவையான போதிய சுகாதார, மருத்துவ வசதிகளை நிறைவேற்ற முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. 2,**"மலசலகூட வசதியின்மை, சுத்தமான குடிநீர் இன்மை, சிறந்த போசாக்கான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான வசதியின்மை போன்ற பலவற்றை இதனுள் குறிப்பிடலாம்".** *(Vulnerability -Poverty profile, Batticaloa District, Manmunai South West(paddipalai), 2006).* ஏழ்மையின் பிடியில் இவர்கள் சிக்குண்டிருப்பதால் இவர்களுக்கு கிடைக்ககூடிய வளங்களில் முக்கியமான ஒன்றான சுகாதார கவனிப்புக்கள் கிடைப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக உலக தரிசனம் என்னும் அரச சார்பற்ற நிறுவனம் மலசலகூட வசதிகளை இப்பிரதேசத்தில் அமைத்துக் கொடுத்து வருகின்றது. ஆனால் பெண் தலைமைக் குடும்பங்களைச் சேர்ந்த எல்லோருக்கும் கிடைக்காமை ஒரு குறைபாடாகும். ஏனெனில் இந்நிறுவனம் மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு முதல் இதற்கென தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் குறிப்பிட்ட ஒரு தொகைப்பணத்தை வங்கியில் வைப்பு செய்ய வேண்டும் என்ற விதி காரணமாக ஏழ்மை நிலையிலுள்ள இக்குடும்பங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இவர்களுக்கு இதற்கான மாற்று வழிகள் எதுவும் குறிப்பிட்ட நிறுவனத்தால் செய்து கொடுக்கப்படாமை ஒரு குறைபாடாகும். அத்தோடு போசாக்கான உணவின்மை எனும் போது இன்றைய நிலையில் நிலவும் விலைவாசி உயர்வு, வறுமை என்பன காரணமாக இவர்களது வீட்டிலே கிடைக்கக் கூடிய போசாக்கான உணவுகளையும் (பால், முட்டை, மரக்கறி, கீரைவகை) தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக விற்கின்றனர். மாறாக அதை சாப்பிடுவது என்பது குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் இப்பெண்களும் இவர்களது பிள்ளைகளும் ஆரோக்கியமற்றவர்களாகவும், இலகுவாக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

### பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுதல்

இப்பெண்களைப் பொறுத்தவரை வெளிப்படுத்த முடியாத ஒரு பிரச்சினையாக இது காணப்படுகின்றது. ஏதொவொரு வகையில் 3,**"ஒவ்வொருவரும் இப்பிரச்சினையை எதிரிகொள்கின்றனர். ஓரளவு வயது முதிர்ந்த பெண்களை விட இவர்களின் பெண் பிள்ளைகளும் இளம் பெண்களுமே கூடுதலாக இப்பிரச்சினைக் குள்ளாகின்றனர்"**(பெண்ணுரிமைகள் கண்ணோட்டம், 2002-2007 தொகுப்புகள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு.) பெண்கள் தலைமைக் குடும்பங்களை பொறுத்தவரை அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருப்பதே மேற்படி பிரச்சினைக்கு பிரதான காரணமாகும். வளர்ந்த ஆண்பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் தவிர ஏனைய இளம் பெண் தலைமைக் குடும்பங்கள் இப்பிரச்சினையைக் கடுமையாக எதிர் கொள்கின்றனர். ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டது சுற்றிவர உள்ள அயலவர்கள், உறவினர்களுக்கு தெரியுமிடத்து அக்குறிப்பிட்ட பெண்ணே கெட்டவள் என்று அவளை ஒதுக்கி வைக்கும் தன்மை இச்சமூகத்தில் காணப் படுகின்றது. இதனால் இக்குறிப்பிட்ட பெண் உட்பட அவளின் பிள்ளைகள் கூட ஏனையவர்களினால் ஒதுக்கி வைக்கப்பட்டு உள ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். உதாரணமாக இப்பிர தேசத்திற்குட்பட்ட ஒரு கிராமத்தில் தன் தாய் கெட்டவள் என்று சொல்லி அப்பெண்ணின் இரு ஆண் பிள்ளை களும் அப்பெண்ணை விட்டு பிரிந்து உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இச்சம்பவம் நடந்து ஏழு எட்டு வருடங்களாகியும் அப்பிள்ளைகள் இருவரும் தன் தாயுடன் கதைக்காமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு குறிப்பிட்ட சில ஆண்களால் இப்பெண்கள் பாலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாக்காரத்திற்கு உட்படுத்தப்படுவதால் அக்குறிப்பிட்ட பெண் மாத்திரமன்றி அப் பெண்ணின் பிள்ளைகளும் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுகின்றமை வேதனைக் குரிய விடயமாகும். இதனால் இக்குடும்பங்கள் மேலும் சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக கீழிறங்கியே செல்கின்றன.

## சமூகத்தில் கலாசார ரீதியாக ஒதுக்கிவைத்தல்

இன்றைய காலகட்டத்தில் கணவன் இல்லாத பெண்களை சமூகத்தில் நடைபெறும் பல முக்கியமான நிகழ்வுகளில் ஒதுக்கி வைக்கும் தன்மையில் ஓரளவு நெகிழ்வுத் தன்மை காணப்பட்ட போதிலும் கிராமப் புறங்களை பொறுத்தவரை இது அன்று தொட்டு இன்று வரை அதே நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு ஒதுக்கி வைக்கும் தன்மை காரணமாக இப்பெண்கள் தாங்களா கவே கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்ளாது ஒதுங்கி நிற்கின்றனர். குறிப்பாக திருமண நிகழ்வைக் குறிப்பிடலாம். இப்பிரச்சினை எல்லா இடங்களிலும் உள்ள பெண்களுக்கும் உள்ள ஒரு பொதுவான பிரச்சினையாகும். இந்நிலை காரணமாக இப்பெண்கள் ஏனைய கணவன் இருக்கும் பெண்களை விட தாங்கள் எப்போதுமே இரண்டாம் பட்சமா னவர்கள் தான் என்னும் தாழ்வுச்சிக்கல் இவர்கள் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

## சமூகத்தில் ஏனையவர்களை போல் தாங்களும் சிறப்பான அந்தஸ்த்து சுயகௌரவத்துடன் தமது வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ள முடிய வில்லையே என்ற உளத்தாக்கம்.

கணவன் இல்லாதவிடத்து குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்படும் பெண்களையும் அவர்களது குடும்பங்களையும் எடுத்துக் கொண்டால் சமூக, பொருளாதார, கல்வி கலாசார ரீதியாக ஏனையவர்களை விட இரண்டாம் பட்சமாகத்தான் காணப்படுகின்றார்கள். இதனால் உடலியல் உளவியல் ரீதியாக பல பிரச்சினைகளை எதிர் நோக்கிக் கொண்டி ருக்கின்றனர். குறிப்பாக இப் பிரதேசத்தை பொறுத்தவரை இக்குடும் பங்கள் எப்போதும் பொரளாதார ரீதியான ஒரு நிலைத்த பாதுகாப்பையே வேண்டி நிற்கின்றனர். இவ்வாறானதொரு நிலைமை காரணமாக ஏனையவர்களைப் போல் தானும் தனது பிள்ளைகளும் சுயமரியாதையுடன் அந்தஸ்துடனும் வாழ முடியவில்லையே என்ற உளத்தாக்கம் இவர்கள் மத்தியில் இருந்து கொண்டே இருக்கின்றது. இதற்காக வேண்டி இவர்கள் நாளாந்தம் தமது உடலை வருத்தி உழைத்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். ஆனால் நிரந்தரமான ஒரு தொழில் இல்லாமையினால் இது சாத்தியப்படாத ஒன்றாகவே காணப் படுகின்றது.

ஒரு சில குடும்பங்களைத் தவிர ஏனைய பல குடும்பங்கள் தமது உழைப்பின் மூலம் திருப்தி காணப்படாதவிடுத்து நமது குடும்பம் எப்போதுமே இப்படியே தான் இருக்குமோ என்று எதிர் காலத்தைப்பற்றிய பயம் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் எப்போதுமே உளவியல் தாக்கத்திற்குட்பட்டவர்களாகத்தான் காணப்படுகின்றனர்.

## தீர்வுகள்

பட்டிப்பளை பிரதேசத்தை பொறுத்த வரை பெண்கள் தலைமைக் குடும்பங்கள் கூடுதலாக காணப்படுகின்ற ஒரு பிரதேசமா கும். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங் களால் இவர்களுக்கென்று தனித்துவமான திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படாத நிலையில் அவர்கள் கல்வி, கலாசார, சமூக, பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றனர். பல வகையிலும் யுத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுகின்றமையினால் பொதுவாகவே பொருளாதார ரீதியாக பின்தங்கிய ஒரு பிரதேசமாக காணப்படுகின் றது.பொருளா தார ரீதியான பின்னடைவே ஏனைய பல பிரச்சினைகளுக்கு அடித்தளமாக இருக்கின் றது. இந்நிலையானது பெண்கள் தலைமைக் குடும்பங்களை பொறுத்தவரை ஒரு படி மேலானதாகவே காணப்படிகின்றது. எனவே தான் இவர்கள் எதிர்நோக்கும் மேற் படி பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வாக பின்வருவனவற்றை கூறலாம்.

01. சுயதொழில் முயற்சிக்கான கடன்வசதிகள் மற்றும் உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. நிறுவனங்கள் தொழில் வழிகாட்டல் மற்றும் பயிற்சி நெறிகளை வழங்க வேண்டும்.

03 ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பெண்கள் அமைப்பு மேற்படி திட்டங்களை செயற்படுத்த முன்வர வேண்டும்.

04. உதவி வழங்கும் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களில் பெண்கள் தலைமைக் குடும்பங்களுக்காக ஓரளவு நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும்.

05. இப்பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஏனைய குடும்பங்களைப்போல் இக்குடும்பங்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றதா என்பதை இத்திட்டங்களை முன்னெடுப்போரும் ஒவ்வொரு கிராமத்தின் கிராம சேவையாளரும் அவதானிக்க வேண்டும்.

06. இங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் எல்லாப் பெண்களைப் போல் இப்பெண்களுக்கும் முன்னுரிமை அளித்து விழிப் புணர்வுத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

07. இவை எல்லாவற்றையும் விட ஒவ்வொரு சமுதாயங்களிலும் உள்ளவாகள், கணவன் இல்லாத பெண்களும் ஏனையவர்களைப் போல் சமமானவர்கள் தான் என்பதை உணர வேண்டும்.

### முடிவுரை

பட்டிப்பளை பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் இங்குள்ள அனைத்துப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையில் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றனர். சமூக, கலாசார பிரச்சினைகள் என்பதை விட பொருளாதார ரீதியாகவே இவர்கள் அடிமட்ட நிலையில் காணப்படுகின்றனர். எனவே இக் குடும்பங்களில் பொருளாதார ரீதியான பிரச்சினைகளை தீர்குமிடத்து ஏனைய பல பிரச்சினைகளை அவர்களாகவே தீர்த்துக் கொள்ள முடியும். எது எவ்வாறாயினும் இச்சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை உள் வாங்கிய நிலையில் ஏற்படும் சமூக மயமாதலின் காரணமாக ஒவ்வொரு வரின் மனப்பாங்கு நடத்தைகளில் ஏற்படும் மாற்றத்தை பொறுத்தே பெண்கள் தலைமைக் குடும்பங்களில் பிரச்சினைகளுக்கு விடிவு காணலாம். என்பதோடு ஏனையவர்களைப் போல் அவர்களது நிலையான இருப்பையும் சமூகத்தில் உறுதிப்படுத்தலாம்.



## மு க வ ரி

அம்பிளாந்துறையூர் அரியம்"


மனிதனின் முகவரிகள் மண்ணின் மேல் உண்டு
மனிதத்தின் முகவரிகள் மண்ணுக்குள் ஏன்
உண்டு
இனவாத முகவரிகள் இறக்குமதி செய்வதனால்
என் மனத்தின் முகவரிகள் தாயகத்தில்அழிகிறது
சமாதானக் காற்று என்று கொக்கரித்து
சண்டாளர் வந்திங்கு சரித்திரத்தை மாற்றுகிறார்
சனங்களுக்கோ நீதி இல்லை நிம்மதியும்
தான் இல்லை
சாவுகளை சந்தித்து சாதனைகள் புரிந்த இனம்
சவக்குழியில் கூட முகவரிகள் இல்லை
சோதனைகள் கண்ட நாம்
தோல்வி அடையவில்லை
வேதனைகள் கண்டு விம்மி அழுதாலும்
விழுந்த நாம் எழுவோம் ஒரு நாள்
வீண்போகா நம்பிக்கை தான்
விடிவுக்கு உரித்துடையோர் நாம்
முடிவு கிடைக்கும் வரை முற்படுவோம்
வேலிக்கு ஓணான் சாட்சி போல
கூலிக்கு தலையாட்டும் கும்பல்களில்
கூக்குரல்கள் ஒழியும் கொட்டம் அடங்கும்.
எலும்புக்கு விலை போகா எம்மவரின் கொள்கை
எழுச்சியுடன் எழுவோம் திண்ணம்
எல்லோரும் சிரிப்போம் ஏற்றத்தை அடைவோம்.
எங்களுக்கு இம்மண்ணில் முகவரி உண்டு
என்பதை உலகிற்கு எடுத்துரைப்போம்.
கொடுங்கோல் உடைந்து கொடுமை அழியும்
கோத்திரம் ஓங்கி ஆட்சி செய்யும்
பொய்களும் போக்கிரி முகவரியும்
போலித்தனங்களும் மெய்களால் சாகும்
தாய் நிலத்தின் முகவரியில் தமிழ் வாழும்
தளராத உறுதியில் உண்மை வாழும்
தமிழன் என்ற முகவரிகள் என்றும் வாழும்
தமிழா நீயும் தமிழனாய் இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுவான் புகழ்

- சோலையூரான் -



படுவான் வானமும்
பழகிய காலமும்
கவிதையா கூற வந்தேன் - இல்லை
ஏன் இல்லை
கவிதைக்கு பொய் அழகு
நான் கூற வந்தது பொய் அல்ல.
பொய்யாகிப் போய் இருக்கின்ற உண்மைகளை
இனிப் பொய்யாகி விடக் கூடாது என்ற தன்மைகளை
“படுவான் கரை” என்றால் பல்லிளிப்பு பலருக்கு
வானத்து சூரியனுக்கு சோறூட்டி தூங்க வைக்கும் மண்ணிது
இந்த மண் யாருக்குச் சோறூட்டவில்லை.
சோறூட்டியவரை சொல்லப் போவதுமில்லை
ஆடலும் பாடலும் அரங்கேறிய
கூத்தும் கரகமும் கொடிகட்டிப் பறந்த
வேங்கையும் கழுகும் விரும்பி உறைகின்ற
தனித் தமிழ் மண்ணிது - என்றும்
தனித்துவமான மண்ணிது
சொல்லுவோம் இன்னும் கேளும்
சோர்ந்து விடாதீர் ஒரு நாளும்

சோலையூரிலே சுனையொன்று இருக்கின்றது
அந்தச் சுனையருகில் கதையொன்று மிதக்கின்றது
மகிழை மண்ணிலே மகத்துவம் உள்ளது
அந்த மகத்துவத்திலே பல தத்துவம் உள்ளது
அரசூரிலே ஐதீகம் இருக்கின்றது
அந்த ஐதீகத்திலே அம்மனின் அருள் பிறக்கின்றது
பண்டாரியா வெளியிலே பாம்பொன்று இருக்கின்றது
அந்தப் பாம்பின் படத்திலே பல கதை திறக்கின்றது
படையாண்ட வெளியிலே படை ஒன்று இருக்கின்றது
அந்தப் படையின் நகர்விலே பழமை தெரிகின்றது.
அம்பிளாந்துறையிலே ஆறு இருக்கின்றது
அந்த ஆற்று நீரிலே அடையாளம் தெறிக்கின்றது
கடுக்காமுனையிலே குளம் ஒன்று இருக்கின்றது
அந்தக் குளத்து அணையிலே குதூகலம் பிறக்கின்றது
முனைக் காட்டிலே முதுமை இருக்கின்றது
அந்த முதுமை நிலையிலே அனுபவம் கிடைக்கின்றது
முதலைக் குடாவிலே கொடை ஒன்று இருக்கின்றது
அந்தக் கொடையின் வழியிலே படுவான் சிவக்கின்றது
தாந்தா மண்ணிலே மலை ஒன்று இருக்கின்றது
அந்த மலையின் சரிவிலே மான்மியம் தெரிகின்றது

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு புதுமை - இந்த
ஊருக்கெல்லாம் உண்டு ஒரு பொது உடமை
“படலைவாய் நீ திறந்து பாதம் பதிக்கையிலே
உந்தன் குடலின் நிலையறிந்து கைகழுவும் சமூகமிது”
உறை இடமுண்டு உண்ணச் சோறுண்டு
அணிய உடையுண்டு அதைவிட இவற்றை
அருள் நிறைய அன்பு மனமுண்டு
பாவலர் படுவான் புகழ் பாட கோடி வேண்டும்
பாடினோம்... பாடுகின்றோம்..... பாடுவோம்
படுவான் புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் அம்மா இன்னுமொரு அகதி வாழ்க்கை



ச.லோஜி
அரசடித்தீவு, தரம் – 11 (2011)

குண்டுகளால் செவிப்பறை வெடிக்கும் வண்ணம் செல்மழை பொழிந்து கொண்டிருந்தது. கதிரவனும் தனது பொற் கதிர்களை மறைத்த வண்ணம் இருண்ட மேகங்கள் சூழ்ந்து கொள்ள அன்று காலை புலர்ந்து கொண்டிருந்தது. பறவைகளின் ஓசையும் மிருகங்களின் வீறிய ஒலிகளும் மௌனித்து போயின எங்கயோ இருந்து வந்த காகம் ஒன்று தனது சுற்றத்தை அழைத்துக்கொண்டு தூர இட மொன்றுக்கு சென்றுவிட வேண்டும் என்ற ஆதங் கத்தோடு கத்தி கொண்டிருந்தது. இவை அனைத் தும் ஏதோ ஒரு அவல சம்பவம் பின்னால் நடக் கப் போகிறது என்பதை முன்கூட்டியே கட்டியங் கூறி நிற்பதை போன்று நடந்து கொண்டிருந்தன.

எல்லாபக்கமும் புகை மண்டலமாக காட்சி தந்தது. தூரத்தில் கேட்ட வெடிச்சத்தங்கள் பொழுது புலரப்புலர பக்கத்தில் கேட்பதை உணர முடிந்தது. மூட்டை முடிச்சுகளோடு மக்கள் அணி அணியாக திரண்ட வண்ணம் வீதி எங்கும் அவல ஓசை இந்த நேரத்தில் தான் எனது வீட்டுக்கு அருகாமையில் அமைந்திருந்த மைதானத்தில் வீசப்பட்ட மல்டி பவறான பாரிய குண்டு ஒன்று வெடித்து மார்க்கண்டுமாமா இறந்த செய்தி காற்றோடு காற்றாக காதுகளை வந்து எட்டுகிறது. அந்த சம்பவம் இனியும் நாங்கள் தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் பாரிய உயிரிழப்புக்களை சந்திக்க நேரிடும் என்பதை விரைவுபடுத்தியது. கட்டிய பாவடையோடு தொட்டிலில் கிடந்த குழந்தையை சுமந்த வண்ணம் உறவுகள் சூழ்ந்து கொள்ள உயிர்பிச்சைக்காக அகதி என்ற போர்வையில் நகர்புறத்தை நோக்கி அடி எடுத்து வைத்தோம்.

சென்ற வழி எங்கும் செல்மழை சாரமாரியாக வீசப்பட்டுக் கொண்டிருந்தது. கால்நடைகளெல்லாம் சென்ற சென்ற இடமெல்லாம் செத்து போய்கிடந்தது. உறவுகளாய் 9பேர் சென்ற நேரம் வீசப்பட்ட எறிகணைக்கு இலக்காகி மாவற்குடா சந்தியில் மாமியையும் அவரது மூத்த மகளையும் இழந்தோம். இழந்து விட்ட துயரத்தோடு 7பேர் சகிதமாக எங்கள் உயிர்களை சுமந்த வண்ணம் தளர்ச்சி பெற்ற மனநிலையோடு கால்கள் தடுமாற கண்கள் நீர் சொரிய கவலை களையும் சுமந்த வண்ணம் பயணம் தொடர்ந்து கொண்டி ருந்தது. நகர்புறம் எங்களை அகம் குளர வரவேற்றாலும் அது நாலு ஐந்து நாட்கள் வரை நீடித்தது; நிற்க வில்லை. தாங் களும் தங்களுடைய உறவுகளும் என்கின்ற அளவுக்கு அவர்களுடைய மனநிலைகள் மாறுபடத் தொடங்கின. அவ்வாறு நடந்து கொண்ட செயல் குறை என்று கூட எண்ண தோன்ற வில்லை. குடும்பம் குடும்பமாக ஓடிச்சென்ற எங்களுக்கு அவர்களால் எத்தனை நாட்களுக்கு வைத்து தாக்குப்பிடிப்பது என்பதாலே குறை கண்டோர் பலர் இருக்க நிறைவாக ஏற்றுக்கொண்டோரும் இருக்கத்தான் செய்தனர்.

முகாம்களுக்குள் சென்றால் தொற்று நோய் பரவும் என்ற அபாயம், பாண் தொடக்கம் குழந்தைகளுக்கான பால்மா வரைக்கும் வரிசையில் நின்றால் தான் தரிசனம் கிடைக்கும். குடும்பம் ஒன்றுக்கு மூன்று நாட்களுக்கு முக்கால் கொத்து அரிசி 50g சீனி ஆளுக்கு என்ற கணக்கு அரைவயிறு கஞ்சோடு 60 நாட்களை கடத்தினோம். திராய்மடுவில் இருக்கும் மக்க ளுக்கு சீலை, சட்டை கொடுக்கின்றார்களாம் என்ற செய்தி காதுகளை எட்ட வந்த உடுப்போடு எத்தனை நாட்களுக்கு இருப்பது என்று எல்லோரும் கூற தந்தையையும் அழைத்துக் கொண்டு தவிக்க தவிக்க ஓடினோம். வெள்ளை பாலத்தடியில் சீறிக் கொண்டு வந்த உந்துருளி குறுக்கே சென்ற தந்தையை மோதிச் செல்ல 3 மாதங்கள் தந்தையார் மூச்சின்றி வைத்திய சாலையில் வாடிக்கிடந்த நினைவுகள் அகதி வாழ்க்கையில் அறையப்பட்ட சுவடுகள் கொலரா பிடித்து குழந்தைகள் பலர் அகதி முகாம்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம் செய்யப்பட்டன. வெள்ள அனர்த்தமும் விட்டபாடு இல்லை எத்தனை குடும்பங்கள் தண்ணீரில் தத்தளித்தன. வீட்டுக்குள் அடக்கப்பட்ட விலையுயர்ந்த பொருட்களை பார்க்க வந்த வடிவேல் மாமா படகு கவிழ்ந்து மாண்டு போன செய்தி மனங்களை விட்டு எப்படி மறையும். இன்று நாளை என்று சொல்லி இரண்டரை மாதங்களை அகதி வாழ்க்கை அடக்கி விட்டது. முகாம்களுக்குள் 30 நாள் உறவுகளோடு 9 நாள் நடை பிணமாய் நான்கு வாரம் இப்படி அகதி வாழ்க்கை ஆறாத வடுக்களை அகத்திலே பதித்தது.

மீண்டும் வந்து எங்கள் இல்லங்களை பார்த்தபொழுது வீட்டுக்குள் இருந்த பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டு கால்நடைகள் எல்லாம் போன இடமெங்கும் செல்விழுந்து செத்த பிணவாடை ஒரு புறம் மணவாளனை இழந்த மங்கையின் அவலம் ஒரு புறம் தாய், தந்தையரை இழந்து துடிக்கின்ற பிள்ளைகளின் அவல ஓசையும் அகதி வாழ்க்கையில் இருந்த நிம்மதியையும் முற்றாக இழந்து விடச் செய்தது. அந்த அவலங்கள் அனைத்தும் அந்த மக்களின் சொந்த வாழ்விலே அரங்கேறி இருக்கின்றது என்றால் அகதி வாழ்க்கையின் சுவடுகள் அவ்வளவு எளிதாக மனங்களிலிருந்து மாறுவதற்கு காளையர்கள் கொள்கின்ற காதலா? இல்லை மண்டை கனத்திலே அறையப்பட்ட ரவைகள் வேண்டாம் அம்மா இன்னுமொரு அகதி வாழ்க்கை.

காலம்
கழித்துப் போட்ட
தேதிகளை
சிரமப்பட்டுச்
சேர்க்கிறேன்.

அந்த நாம்மாண்டு
இருட்டின் கர்ப்பத்தில்
இருந்து
அன்று - எம் ஜனங்கள்
அழுக்கை ஆபரணம் என்று
அர்த்தப்படுத்திக்
கொண்டார்கள்.

ஒரு பழைய கலாசாரம்
முதலில் முகவரியையும்
பிறகு முகத்தையும்
தொலைத்து விட்டுத்
தூங்கி விட்டது

மொகலாயரின்
வாளை வணங்காத கலைகள்
வெள்ளையரின்
வியாபாரச் சந்தையில்
விலையாகிப் போயின

இலக்கியம் அன்று
ராத்திரியின் ரகசிய
வேகியம்.

மொழி உண்டு
முனக மட்டுமே

விழி உண்டு
அழ மட்டுமே

மனம் உண்டு
சோகம் சேர்க்க

கரம் உண்டு
ரேகை பார்க்க

ஜீ.ஜெயகுகநந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு பண்பாட்டாய்வில் க.மகேஸ்வரலிங்கம்

– த. மேகராசா –

சமூகவியல் தளத்தில் பண்பாட்டு வேர்களைத் துலக்கி குறிப்பிட்ட மக்கள் குழுமத்தில் வரலாற்று இருப்பைப் பாதுகாப்பதற்கு பண்பாட்டாய்வு அவசியமானதாகின்றது. இத்தகைய ஆய்வுமுறை பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட நவீன கல்வியினூடாகவே தமிழில் வளரத் தொடங்கியது. இத்தகைய ஆய்வினூடாக மக்களின் வாழ்க்கை, அவர்களின் பண்பாட்டம்சங்கள், கலைப்பாரம்பரியங்கள், சமய வழிபாட்டு மரபுகள் போன்றவற்றைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். இவ்வகை ஆய்வின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இருந்து ஆய்வு பணியாற்றிய க. மகேஸ்வரலிங்கம் குறித்து சிந்திப்பது சிறப்பானதாகும்.

க.மகேஸ்வரலிங்கம் (1942 - 2007) மகிழை மகேசன் என்றும் ஆர்.டீ.ஓ மகேசன் என்றும் எல்லோராலும் நன்கு அறியப்பெற்றவர். மட்டக்களப்பு மகிழடித்தீவில் பிறந்த இவர் அவ்வூரிலேயே திருமண வாழ்வையும் அமைத்துக்கொண்டார். பாடசாலைக் கல்வியை மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலம், மட்/முதலைக்குடா மகாவித்தியாலயம், மட்/சிவானந்தா வித்தியாலயம் என்பவற்றிலும் கற்ற அவர் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாக 1970ஆம் ஆண்டு வெளியேறினார். கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக தொழில் புரிந்த அவர் சமய, கலை, சமூகப் பணிகளை மேற்கொண்டதோடு இறக்கும் வரையும் பல்கலைக்கழகத்திற்கு வெளியே நின்று ஆய்வுப்பணி செய்தார். கலை, இலக்கியம், ஆய்வு, சமூக, சமயப் பணியென அகன்ற தடங்களை ஏற்படுத்திய அவரது அனைத்துச் செயற்பாடுகளுமே மட்டக்களப்பு பண்பாட்டியல் உருவாக்கத்திற்கு வளம் சேர்ப்பவையாகவே உள்ளன.

மகேஸ்வரலிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரைகளில் பெரும் பாலானவை மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் (2007) என்னும் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது. இது தவிர இந்நூலிற்கு முன்பு வெளிவந்த அவரது ஆய்வு முயற்சியில் அவரை முக்கியமான ஆய்வாளராக அடையாளப்படுத்திய "மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு'' (1996) என்னும் நூலும் முக்கியமானதாகும். வீர சைவம் பற்றி அவர் நீண்ட காலமாக மேற்கொண்டு வந்த ஆய்வுத்தேடல்கள் நூலுரு பெறும் போது அவரது மேலும் பல ஆற்றல்களை உணர்ந்து கொள்ளமுடியும்.

"மட்டக்களப்பு பண்பாட்டின் தனித்துவமான அம்சங்களை முதன்மைப்படுத்தி எடுத்துரைப்பு கட்டுரைகள் எழுதும் முறைமை மிகக் குறைவாகவே காணப்பட்டது இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்தவர்களுள் க.மகேஸ்வரலிங்கம் மிக முக்கியமானவர்." என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளது போன்று பண்பாட்டியல் நிலையில் க.மகேஸ்வரலிங்கம் அவர்களின் ஆய்வு முன்னோடியானதும் வழிகாட்டியானதும் ஆகும்.

'மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் என்னும் நூல் சமஸ்கிருதமயமாக்கப்படாத மட்டக்களப்பின் வழிபாட்டு மரபுகளுக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பண்பாட்டியலில் மத வழிபாட்டு அம்சங்கள் முக்கியமானவை. இந்நூல் பற்றி பேராசிரியர் செ.யோகராசா கூறும் கருத்து கவனிக்கத்தக்கதாகும்.

''மகேஸ்வரலிங்கத்தின் ஆய்வு முயற்சிகளுள் மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் என்ற நூல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றென்பதையும் வலியுறுத்த வேண்டியது அவசியம் அன்று ஏன் எனில் இதற்கு முன்னர் மட்டக்களப்பு பிரதேச சிறு தெய்வ வழிபாடு பற்றி உதிரியான கட்டுரைகள் தவிர ஆழமான ஆய்வுகள் எதுவும் நடைபெற்று இருக்கவில்லை. இவ்விதத்தில் இதுவே முதல் முயற்சியாகின்றது எனலாம். அது மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வவழிபாடும் சிறுதெய்வவழிபாடும், மட்டக்களப்பும் சிறுதெய்வ வழிபாடும்,பெண் தெய்வங்கள் ஆண் தெய்வங்கள் பெண் தெய்வங்களுள் சிறுதெய்வங்கள், பிதிர்வழிபாடு, பிறசமயத்தவரும் சிறுதெய்வ வழிபாடும், வழிபாட்டு முறைகள் என்ற விதத்தில் பரந்த அடிப்படையிலும் ஆழமாகவும் நுணுக்கமாகவும் மட்டக்களப்பு பிரதேச வழிபாடு பற்றி அணுக முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது."

'மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்' நூலில் அமைந்துள்ள பதினேழு கட்டுரைகளும் பெரும்பாலும் சமயம், கலைகள், சடங்குகள், பிரதேச வரலாறுகள் என்று மொத்தத்தில் பண்பாட்டுத்தளத்தில் நின்றே எழுதப்பட்டுள்ளன. இந்நூலில் முதலாவதாக அமைந்துள்ள "மட்டக்களப்பார் பண்பாட்டில் வீடும் வளவும்" கட்டுரை முதன்மையான முயற்சியாகும். வீட்டின் தேவை, ஊரும் வளவும், வீடு - அமைப்பு வீடமைப்பில் முக்கிய நிகழ்வுகள், குடும்ப தலைமையும் வீடு அமைக்கும் பொறுப்பும், வீட்டில் குடும்ப உறுப்பினர் வாழும் முறை, இறைவழிபாடும், சமய ஆசாரங்களை பேணுதலும் (தைப்பொங்கல், புதிர் எடுத்தல், புதிர் உண்ணுதல், சித்திரை புத்தாண்டு, சர்க்கரை அமுது கொடுத்தல், ஆடிப்பூரணை அமுது, பிதிர் வழிபாடு, கார்த்திகை விளக்கீடு, வாழ்க்கைச் சடங்கு நிகழ்வுகள்) வீட்டில் பெண்கள், ஊரும் வீடும் என்று ஆழமானதாகவும் வரிவானதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளமை சிறப்பானதாகும்.

இந் நூலில் அமைந்துள்ள பல கட்டுரைகள் மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டோடு இணைந்த வழிபாட்டு அம்சங்களையும் சமய சம்பிரதாய நெறிமுறைகளையுமே எடுத்துக் கூறுவன. இத்தகைய தன்மையான "மட்டக்களப்பின் பண்டைய சமயநிலை" என்னும் கட்டுரை, யக்ஷ வழிபாடு, நாக வழிபாடு, திராவிடத் தெய்வங்கள், ஆரியத்தெய்வங்கள், சுதேச தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், வேடர் வழிபாடு, கப்புகன் வழிபாட்டு முறை, கட்டாடி வழிபாட்டு முறை என்று பண்டைய கால வழிபாட்டு முறைகளை ஆராய்வதாக உள்ளமை சிறப்பானதாகும். இக்கட்டுரையில் வரும் வழிபாட்டு முறைகளை மேலும் விரிவாகக் கூறுவதாக "மட்டக்களப்பின் பாரம்பரிய வழிபாட்டு முறைகள்" என்னும் கட்டுரை அமைந்துள்ளது.

'வீர சைவ நிலையும் மட்டக்களப்பில் அதன் இன்றைய நிலையும்', 'மட்டக்களப்பு மானிலத்தில் வீரசைவம்' என்னும் இரு கட்டுரைகளும் வீரசைவத்தைப் பற்றி ஆராய்வனவாக உள்ளன. 'கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில்' என்னும் கட்டுரை க. மகேஸ்வரலிங்கம் அவர்கள் கூறுவது போன்று "கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் மட்டும் இன்று வீரசைவத்தை எண்ணிப்பார்ப்பதற்கு உதவுகின்ற ஓர் இடமான உள்ளது" என்னும் சிறப்புக்குரிய அதன் அமைப்பு, வழிபாடு, பரிபாலனம் என்ற பல அம்சங்களை எடுத்துக் கூறுகின்றது. 'கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச் சரத்தின் பூசைகளும் விழாக்களும்" என்னும் மற்றொரு கட்டுரையும் முற்கூறிய கட்டுரையோடு அதன் தொடர்ச்சியாக வைத்து எண்ணத் தக்கதாக உள்ளது. ஆக, க.மகேஸ்வரலிங்கம் அவர்கள் மட்டக்களப்பில் வீரசைவம் என்னும் விடயத்தில் ஆழமான பார்வையும் ஈடுபாடும் கொண்டிருந்த தோடு அதனூடாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் வரலாறு, வழிபாட்டு முறைகளும் பூசைகளும், குடிமுறைகள், தொண்டூழிய முறைகள் என்று பல விடயங்கள் தொடர்பாக புலமைத்துவம் கொண்டிருந்தார் என்பது வெளிப்படை.

மட்டக்களப்பில் பாரம்பரிய விளை யாட்டுக்கள் பற்றிய விடயத்தில் அவரது "கொம்பு விளையாட்டு விழாவின் மரபுகளும் நிகழ்வுகளும்" என்னும் கட்டுரை சிறப்பானது அவர் இக்கட்டுரையினை (1.) சமயநம்பிக்கையும் சேரிப்பற்றும், (2.) விளையாட்டுக்கு புறம்பான நிகழ்வுகள், (3.) விளையாட்டுக்கு வேண்டிய பொருட்கள், (4.) விளையாட்டு நிகழ்வுகள் என்று பகுத்து விரிவாக நோக்கியுள்ளார். க.மகேஸ்வரலிங்கம் 1997ம் ஆண்டு கொம்புமுறி விளையாட்டினை மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசார பேரவையினூடாக நடாத்தி 'கொம்பு' நூலினை வெளியிட்டி ருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் நூலில் தொகுப்படாத சித்திரலேகா மௌனகுரு பதிப்பித்த "வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலகங்களாக ................" என்னும் நூலில் உள்ள "மட்டக்களப்பு மரபு வழித்திருமணங்களில் காணும் தனித்துவத்தன்மைகள்" என்னும் கட்டுரை மட்டக்களப்பு பண்பாட்டாய்வில் முக்கியமான தாகும். திருமண வகைகள், மரபின் உருவாக்கம், சாதியின் செல்வாக்கு, உறவுமுறை, திருமணப் பருவம், சீதனம், திருமண ஏற்பாட்டு நிகழ்ச்சிகள், மணமக்களின் சம்மதம் பெறுதல், திருமண நிகழ்ச்சிகள், திருமணத்தில் ஊரவர் பங்களிப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் பின் என்று சிறந்த கட்டுக் கோப்புடன் அவர் இவ்விடயத்தை விளக்கி உள்ளமை தனித்துவமானதாகும். இது தவிர "மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவுப்பழக்க வழக்கங்கள்" என்னும் கட்டுரையும் விதந்துரைக்கப்படவேண்டியதே.

வெல்லாவெளிப்பகுதியில் நாதனை என்னும் இடத்தில் பல கிராமத்து மக்களும் ஒன்றிணைந்து நடாத்திய வழிபாட்டு நிகழ்வினை "நாதனை வில்லை கட்டுச் சடங்கு" என எழுதியுள்ளார். மகேஸ்வரலிங்கம் அவர்கள் பலருக்கும் எட்டாத விடயங்களையே ஆய்வு செய்துள்ளார் எனலாம். பேராசிரியர் செ.யோகராசாவின் பின்வரும் கூற்று இவ்விடத்தில் பொருத்தமானதாகும்.

"மட்டக்களப்பு பிரதேச பண்பாடு, சமயம், வரலாறு, சமூகவியல், மானிடவியல் முதலான சார்ந்த முக்கிய கூறுகள் சிலவற்றை முதன்முதலாக ஆய்வுக்குட்படுத்தியனவாகவும் சிலவற்றை தமிழில் முதன்முதலாக விரிவாக நோக்குவனவாகவும் மகேஸ்வரலிங்கத்தின் ஆய்வு முயற்சிகள் உள்ளமை விதந்துரைக்கப்பட வேண்டியது என்பதில் ஐயமில்லை."

மட்டக்களப்பு நவீன ஆய்வில் க.மகேஸ்வரலிங்கமும் தனித்துவமானவர் என்பதை மறுக்கமுடியாது. மட்டக்களப்பு பண்பாட்டியலை தன் எழுத்துக்களினூடாக வெளிக்கொண்டு வந்ததோடு கொம்புமுறி விளையாட்டினை முன்நின்று நடாத்தியும் வேட்டைத் திருவிழாவினை பொறுப்புடன் வழி நடாத்தியும் சமூக சமயபணி செய்த அவரை பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவது போன்று கௌரவிப்பது அவசியமானதாகும். "மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலை வெளியிட்ட எவ்.எக்.சீ நடராஜா அவர்களுக்கு கௌரவப்பட்டம் வழங்கிய கிழக்குப்பல்கலைக் கழகம் மகேஸ்வரலிங்கத்தின் சேவைகளை புறக்கணிக்க முடியாது என்றே கருதுகின்றேன். மகேஸ்வரலிங்கத்தை மறப்பதென்பது இன்றைய நிலையில் இதுவரை தெரியப்பட்ட மட்டக்களப்பின் உள்ளூர் வரலாறுகள் பற்றிய விபரங்களையும் ஆய்வுகளையும் மறப்பதாகவே அமையும்."

## புறப்படு தோழா

சிந்தனை சிற்றறைக்குள்
ஏதோ ஒரு நினைவு
நதியொன்று கவி பாடியது
எம் தமிழரின் வரலாற்றை
மூங்கில் அடைவிற்குள்
மூச்சு விடத்தெரியாத - எம்
இனத்தை நினைவில் கொண்டேன்
வேதனை
போதும் போதுமடா தமிழா
வரலாற்றுச் சங்கிலியின் வக்கிரங்கள்
உடைந்தெரிந்து சரித்திரம் படைக்க
புறப்படு தோழா!
உன்னை நீ அடிமையாக்கி
கைகட்டி, கால் விலங்கிட்டு
கொண்ட காலம்
கனவு போன்று போகட்டும்
காலிழந்த தோகை மயில்
கானகத்தில் நிற்பது போல்
நீ சுமந்த துன்பம் போதும்
உன் அடிமை சாசனம்
என்னோடு சமாதி வரட்டும்
தைரியமாய் எழுந்திடு தோழா
ஆயுதம் கொண்டு
போராடுவதற்கில்லை
எழுது கோல் கொண்டு
பூமியினை வெல்ல - எழுது
உன் எழுத்தில் ஆயிரம்
அர்த்தம் பிறக்கட்டும்
நாளை சரித்திரம் சொல்லட்டும்
உன் வரலாறு - மீண்டும்
தாய்மையின் கரு தமிலோடு
தவமிருக்கட்டும்
தமிழ் மகனை ஈன்றெடுக்க

கோ.விறிகங்கா
அரசடித்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரு வருகிறது

படுவான் பகீ

ஆண்டவன் படைத்த அகிலம் தன்னில்
அனைவரும் நாமும் ஒன்றல்லோ! - இதை
மதங்கள் என்னும் பிணங்கள் ஆள
மனிதா நீயும் மனிதன் அன்றோ!

பாரடா மானிடா!
பாரடா பார்! பார்!

ஒற்றுமை என்னும் இறைவனைத்தாங்கி
சத்தியத் தேரு வருகிறது
சமத்துவம் என்றும் பெரும் அருள் பொழிய
சம உடைமை தேரு வருகிறது

சமரசம் என்னும் வடம் தனைப் பூட்டி
சம உடமை தேரு வருகிறது
வெண்புறா ஆங்கே பண்ணிசை பாடி
பண்புறாவாகப் பறக்கிறது

பாரடா மானிடா! பாரடா பார்! பார்!
கேளடா மானிடா! கேட்டிடு இன்று
மதங்கள் பற்பல இருந்தாலும்
மனிதர்கள் நாமும் ஒன்றல்லோ!
'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'
என்றோர் வாக்கும் பொய்த்திடுமோ!

வாடா தோழா வடம் தனை இழுப்போம்
தோழா தோள்கொடு தொல்லைகள் துடைப்போம்

மனிதன் அடக்கும் மதம் இதுவும்
மனிதா உன்னை அடக்குவதோ!
தேசம் காக்கும் கரங்கள் இன்று
சேற்றை அள்ளிப் பூசுவதோ!

வாடா தோழா, வடம் தனை இழுப்போம்
தோிா தோள்கொடு தொல்லைகள் துடைப்போம்

எத்தனை ஜீவன் பல இருந்தும்
அத்தனைக்கும் நீ எஜமான்
எஜமான் நீயும் எரிந்து நின்றால் - சிறு
எறும்பும் கூட உனக்கெஜமான்

வாடா தோழா, வடம் தனை இழுப்போம்
தோழா தோள்கொடு தொல்லைகள் துடைப்போம்

மதத்தை மறந்து இனத்தை துறந்து
வடத்தை பிடித்து இழுத்திடுவோம் - ஆங்கே
மனிதம் காத்து புனிதம் வாழும்
மறு உலகை நாமும் படைத்திடுவோம்

வாடா தோழா, வடம் தனை இழுப்போம்
தோழா தோள்கொடு தொல்லைகள் துடைப்போம்

ஆறாம் அறிவை வரமாய் பெற்ற நீ
ஆயிரம் கதைகள் சொல்லி விடு
ஏழாம் அறிவை எழுப்பும் முயற்சியில்
இன்னோர் கிரகம் தொட்டு விடு

# தட்டிக் கொடுக்கிறது

தட்டிக் கொடுக்கும்
கருமேகங்கள்
சூழ்ந்த
வானில்
கடுகளவும்
ஒளியில்லை
பெருமழையும்
பெய்ய பிரயத்தனம்
செய்யும்

இடி, மின்னல்
காதை
பிறக்கின்ற
பிரளையந்தான்
வரப்போகிறது

பிளந்திடுமோ?
பூமியும், மலர்ச்செடிகளும்
மலைகளும்
மறைந்திடுமோ?

இனிமேல்
கொடுஞ்சினம்
கொண்டு
வீசுகிறதே
புயற்காற்று
மாண்டுபோன
மனித நேயங்களை
மனதில்
தோண்டும்
பளிகள்
ஆரம்பம்
தீண்டிடும்
ஒவ்வொரு
மழைத்துளிகளும்
மனப் பயத்தை
கொடுக்கிறது

கண்ணைத் திறந்து
கயமைகள் மறைய
எண்ணச்
சிறகுகள் அது
தட்டிச் செல்கிறது.

ச.துவாரகா
மட்/அம்பிளாந்துறை கலைமகள் ம.வி
13, கலைப்பிரிவு (2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் அவள் அப்படிச் செய்தாள்?

நாகராசி – பாஸ்க்கரன்
முனைக்காடு

எத்தனையோ வாகனங்களின் நெரிசலினிடையே தன்னுடைய கார் வண்டியினை ஓட்டிக் கொண்டிருந்த போதும் அவனுடைய மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. சற்று நேரத்திற்கு முன் தன் செவிகளை வந்தடைந்த செய்திகள் அவன், எண்ண அலைகளை எங்கெங்கோ இழுத்துச் சென்றன. அவற்றை மீண்டும் மீண்டும் நினைக்கும் போது அவன் காதுகள் அடைத்து, கண்கள் இருளடைந்தன. இவ்வாறு தோன்றுமளவிற்கு அவனுக்கு என்னதான் நடந்தது.

சில நிமிடங்களுக்கு முன் ஈழமணித் திருநாட்டின் மட்டக்களப்பு மாவட்டத்தின் எழில் கொஞ்சும் கிராமம் ஒன்றிலிருந்து ஓர் தொலைபேசி அழைப்பு சவுதி அரேபியா நோக்கிச் செல்கின்றது.

''கிணி, கிணி,கிணி, கிணி'' தொலைபேசி அழைப்புக் கேட்டு கமல் அதில் உரையாடத்தொடங்குகிறான்.

"ஹலோ!"

"ஹலோ, கமலா தம்பி!"

"ஓம், நான் தான்! நீங்காரு!"

"நான் தான் தம்பி பெரியம்மா, நீ சுகமா இருகியாப்பா?"

"பரவால்ல, பெரியம்மா நான் சுகந்தான். ஊருல எல்லாரும் எப்படி இருக்கியல்.."

"இஞ்ச பரவால்ல கமல், நான் உன்னிட்ட சொல்லனும், நீ இப்ப என்ன செய்றாப்பா?

"நான் கார் ஓட்டிக் கொண்டிருக்கள் பெரியம்மா, ஏன் என்ன விசயம்? "என்ற கமலின் குரலில் தன் பெரியம்மா சொல்லவிருக்கும் செய்தியைக் கேட்கவேண்டும் என்பதிலுள்ள ஆர்வம் தெரிகின்றது.

ஆனால் அவன் பெரியம்மாவின் குரலிலோ அவன் கேட்குமளவிற்கு கூறுவதற்கு ஆர்வம் இருப்பதகத் தெரியவில்லை. மாறாக தான் சொல்லக்கூடாத செய்தியொன்றை அவனிடம் கூறமுற்படுவதுபோல் ஒரு தடுமாற்றம் அவர் நாவை அடைக்கின்றது.

''இல்லப்பா....'' என்று இழுத்த பெரியம்மா "நான் சொல்றதக் கேட்டுக் கவலப்பட மாட்டியே கமல்'' என்று தட்டுத்தடுமாறிக் கூறுகின்றார்.

"ஏன், என்ன பெரியம்மா?

இப்போது கமலின் குரலில் காணப்பட்ட ஆர்வமானது அவனது பதட்டமடைந்த மனநிலையைக் காட்டுகின்றது. தான் ஏதோ கேட்கக்கூடாத செய்தியைக் கேட்க இருப்பதாகக் கமல் உணர்கின்றான்.

"இல்லப்பா, உன்ட மனிசி சத்தியா" என்றவர் மீதியைக் கூறி முடிப்பதற்குள் கமல் முந்திக் கொள்கின்றான்.

"என்ன? சந்தியாவுக்கு என்ன பெரியம்மா?"

என்ற கமலினுடைய நா வரல்கிறது, இதயம் படபடவென அடித்துக் கொள்கின்றது. அவனுடைய மனக்கண் முன் அவளுடைய வண்ண முகம் தோன்றுகிறது. உள்ளுணர்வோ தன் மனைவிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டதோ என்று ஏங்குகின்றது. இருந்தாலும் அவன் பெரியம்மா கூறவந்த முழுவதையும் கூறி முடிக்கவில்லை என்பதாலும் அவன் கேட்டதற்கு அவர் இன்னும் பதிலளிக்கவில்லை என்பதாலும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்கின்றான் கமல்.

"என்ன பெரியம்மா கதைக்கிறியல் இல்ல, சந்தியாவுக்கு என்னென்டு சொல்லுங்க பெரியம்மா!"

''இல்லப்பா நீ இனி அவளைப்பற்றிக் கவலைப்படக் கூடாப்பா! உனக்கென்ன நீ ஆம்புளப்புள்ள அவளுக்காக நீ மனதத்தளர விடாததம்பி!"

"என்ன பெரியம்மா. ஏன் அப்படிச் சொல்றியல். சந்தியாவுக்கு என்ன பெரியம்மா? அவள் இப்ப என்ன செய்றாள்?" கமலின் மனதில் துக்கம், பயம், தடுமாற்றம், எதிர்பார்ப்பு எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவனை உருக்குலையச் செய்கின்றன. தன் ஆசை மனைவி சந்தியாவிற்கு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்ததோ? அவள் என்ன ஆனாளோ? என்ற கவலை அவன் மனதை ஆட்கொண்டு விட்டது. அப்போது அவன் பெரியம்மாவின் குரல்,
"இல்லப்பா அவள்...."
என்றவர் தான் கூறவந்ததை முற்றாகக் கூறமுடியாமல் தவிக்கின்றார்.
ஆனால் கமலுக்கோ அவர் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் தன்னுயிர் தன்னைவிட்டு பிரிவது போன்ற பிரமை ஏற்படுகின்றது. பெரியம்மாவிடம் இருந்து செய்தியை வேகமாகப் பெற வேண்டுமென்ற நோக்குடன் அவசர அவசரமாகக் கேட்கின்றான்.

"பெரியம்மா கெதியாச் சொல்லுங்க, சந்தியாவுக்கு என்னெண்டு?"
"அவள் நல்லவளில்லப்பா. அவள் உனக்குத் துரோகம் செஞ்சித்தால்ரா தம்பி!

இதைக்கேட்ட கமலுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் பெரியம்மா என்னதான் கூறுகின்றார் என்பதை முற்றாகக் கேட்டுவிடுவதற்காக மௌனமாக இருந்தான். "தான் ஏதோ கெட்ட கனவு காண்கின்றோமோ" என்று அந்த நிமிடம் கமலுக்கு எண்ணத் தோன்றுகின்றது.

மறுபக்கம் கமலின் சத்தமேதும் இல்லாததால அவன் பெரியம்மா பதட்டத்துடன் ஹலோ தம்பி கமல்!" என்றழைக்கின்றார்.
"ஓ, சொல்லுங்க பெரியம்மா!"
எது வித உணர்வும் இல்லாதவகையில் இவ்வார்த்தைகள் கமலிடம் இருந்து வெளியாகின.

"அவள் இஞ்ச ஒருவனோட ஓடிப் போய்த்தாளுடா தம்பி!"
இனிமேலும் தாமதிக்கத் தேவையில்லை என்ற நோக்குடன் சட்டெனச் சொல்லிவிட்டார் அவன் பெரியம்மா. இது கேட்ட மறுகணமே "இடியோசை கேட்ட நாகம்போல்" ஆகி விடுகின்றான் கமல். அவன் மனம் "கடலிடைப் பட்ட துரும்பு போல" அலைபாய்கின்றது. அப்போது அவன் மனதில் தன் மனைவியுடன் அவன் இன்பமாய் வாழ்ந்த நாட்களெல்லாம் நினைவுக்கு வருகின்றன.

ஆனால் அவன் பெரியம்மா தொலைபேசி அழைப்பைத் துண்டிக்கவில்லை. அதனால் அவர் அவனைத் தேற்றுவதற்காக,
"தம்பி கமல் நீ கவலைப்படாதப்பா, உனக்கென்ன ஆம்புள்ளப்புள்ள, அவள் இல்லாட்டி இன்னொரு பெண் அவள் மட்டுந்தானா உலகத்தில பொம்புள உனக்கென்ன அழகில்லையா, பணம் இல்லையா நீ கவலைப்படாம இரப்பா..." என்று அவள் கூறிக்கொண்டிருக்கும் போதே கமல் அழைப்பைத் துண்டித்து விடுகின்றான்.

அவனுக்கு சந்தியா மேல் ஒரு வித உணர்வு ஏற்படுகின்றது. அது கோபமா, கவலையா, பொறாமையா, பழிதீர்க்கும் உணர்வா? எது என்று சொல்லத் தெரியவில்லை. அவளுடன் வாழ்ந்த நாட்கள் அவன் மனதை ஆட்கொள்கின்றன.

அன்றொரு நாள் அவர்கள் வாழ்விலே என்றென்றுமே மறக்க முடியாத நாள். கமல் சந்தியாவின் நினைவு வரும் போதெல்லாம் எண்ணியெண்ணி மகிழ்வடையும் நாள் எந்நாளோ அது? ஆம் அவர்களுக்கு திருமணமாகி நான்கு மாதங்களுக்குப் பின் தன் மனைவி தாய்மையடைந்துவிட்டாள் என்று கமல் அறிந்த நாள்.
"சீச் நீ எப்பதாண்டாப்பா நிம்மதியா இருக்கிற, எல்லா நாளும் வேல வேலெண்டு கொல்றானுகள்" கமல் முணுமுணுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைகின்றான்.
"என்னங்கது, என்ன தனியாக் கதச்சி வாறேல்."
"ஒண்டுமில்ல சந்தியா, இந்த கிழமபுள்ளா நின்டு உழவடிச்சிப்போட்டு வந்தா நாளைக்கு மண்னேத்தப் போக வரட்டாம். இந்தப் போடியாருட பாடு பெரும்பாடா இரிக்கி அலுப்புடன் கூறுகின்றான் கமல்.
"அதுதானே ஒரு கிழமையில ஒரு நாளைக் கெண்டாலும் லீவு தரலெண்டா என்ன மனிசனுகள் மனிசன்ட கஸ்ரம் தெரியாத முதலாளிமார் தன் கணவனுக்கு ஆறுதல் கூறுபவளாகவும் அதே வேளை தன் கணவன் வேலைசெய்யும் முதலாளியைக் கண்டித்துப் பேசுபவளாகவும் சந்தியா இவ்வாறு கூறுகிறாள்.
"அதிரிக்கட்டும் இந்தாங்க முதல்ல தண்ணி குடியுங்க கதைத்துக் கொண்டே கணவனின் தாகம் தீர்ப்பதற்காக தண்ணீர் கொண்டு கொடுக்கின்றாள். கமல் தண்ணீர் குடித்து முடித்தவுடன்
"என்னங்க....."
மெதுவாகக் கணவனை அழைக்கின்றாள்
"என்ன சந்தியா"
"இல்ல, நான் ஒன்டு சொல்லனும். ஆனா எனக்கு வெக்கமாயிருக்கு."
"என்னடா, புதிசா வெக்கப்படுறா? ஏன் நான் உன்ட மாமனாரா."
"சும்மா போங்க உங்களுக்கு எப்ப பார்த்தலும் பகிடிதான். நான் ஒரு சந்தோசமான விஷயம் சொல்லனுங்க."
"என்னடாக்குட்டி ஏன் என்னிடம் சொல்றதுக்கு என்னரிக்கு" கமல் சந்தியாவிடம் செல்லமாகக் கேட்கிறான்.
"இல்ல எனக்கிண்டைக்கு மயக்கம் வந்தது" சந்தியா கூறி முடிப்பதற்குள் கமல் முந்திக்கொள்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மயக்கம் வந்ததா? இதொனக்குச் சந்தோசமா? ஆஸ்பத்திரிக்கு போனயா. இல்லண்டா இப்பவே வெளிக்கிடு வெளிக்கிடு ஆஸ்பத்திரிக்குப் போவோம்." கமல் மனைவியைக் கதைக்கவிடாமல் கூறிமுடிக்கிறாள்.

"என்னயாம், ஏன் மயக்கம் வந்ததாம். நீ காலையில சாப்பிடல்ல போல" கமல் மனைவிக்கு மயக்கம் வந்ததிற்கான காரணத்தை ஊகித்துக் கூறுகின்றான்.

"அதெல்லாம் இல்லீங்க"

"அதில்லெண்டாப் பிறகென்ன?"

"நீங்க அப்பாவாகப் போறீங்களாம்" சந்தியா இவ்வார்த்தைகளைக் கூறியதுதான் தாமதம் தன் கணவனுடைய முகத்தைப் பார்ப்பதற்கு வெட்கமாக இருந்தமையால் வீட்டிற்குள் ஓடிவிட்டாள்.

கமலுக்கு அப்போது உச்சி குளிர்ந்தது. உள்ளம் மகிழ்வடைந்தமையினால் மனதிலிருந்து கவலை, வேலை செய்தமையினால் ஏற்பட்ட உடற்சோர்வு எல்லாம் எங்கோ பறந்து விட்டன.

அவன் மகிழ்ச்சி வெள்ளத்தில் அவளைத் தொடர்ந்து சென்று கட்டியணைத்து முத்தமிடுகின்றான். அவளும் தன் அன்புக் கணவனின் அரவணைப்பில் மகிழ்ந்தாள்.

"என்ட செல்லம், தான் இந்த உலகத்தில பிறந்ததுக்குரிய பலனை அடையச் செய்துத்தாடா எல்லாரையும் போல நானும் ஒரு ஆம்புள என்று சொல்ல வச்சித்தாடா குட்டி" என்று கமல் இன்ப வெள்ளத்தில் அவளிடம் இதமாகவும் பதமாகவும் பேசுகின்றாள்.

"என்னங்க நீங்க! என் வீட்டில எல்லாரும் என்ன வெறுத்து ஒதுகினப்ப என்னக் கலியாணங்கட்டி எனக்கு இப்படியொரு வாழ்வு தந்த உங்களுக்கு ஒரு பிள்ளையைப் பெத்துத் தரலெண்டா நான் பெண்ணில்லீங்க" சந்தியா கூறிக்கொடிருக்கும் போதே அவளுடைய கண்களால் கண்ணீர் வழிந்தோடுகின்றது.

"என்னடாச் செல்லம் இது கத்தாதகுட்டி" கமல் சந்தியாவின் கண்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்து விடுகின்றான்.

"இஞ்ச பாருங்க! நீங்க இல்லேண்டா நான் உயிரோட இருக்க மாட்டேங்க. எனக்குச் சொந்தம் எண்டு இருக்கிறதெல்லாம் நீங்க மட்டுந்தான். இத நான் என்ட வயித்துல வளருர நம்மட குழந்தமேல சத்தியமாச் சொல்றேங்க" உணர்ச்சிப்பெருக்கால் சந்தியா இவ்வாறு கூறுகின்றாள்.

"என்ன சந்தியா இது, நான் உன்ன விட்டு எங்க போகக் போறன். ஏன் இப்ப இப்படியெல்லாம் கதைக்கிறா" என்று கமல் சந்தியாவைத் தேற்றுகிறான்.

கமல், சந்தியா வாழ்வில் இச்சம்பவம் நடந்து முடிந்து இற்றைக்கு ஏறக்குறைய மூன்று வருடங்கள் முடிந்திருக்கும். இப்போது அவர்களுக்கு இரண்டரை வயது நிரம்பிய பெண்குழந்தை ஒன்றும் உள்ளது. கமலுக்கு சந்தியாவின் நினைவு வரும் போதெல்லாம் அவன் நினைவுகளைத் தொடுவது இச்சம்பவமே

அதே போன்று தான் இன்றும் இக்கணத்தில் சில வினாடிகள் கமல் இதை நினைத்துப் பார்க்கிறான். அவனுக்கு எது உண்மை எது பொய்யென்று தெரியவில்லை. தன் மனைவி பிழை செய்துவிட்டாளா? இல்லை பெரியம்மா பொய் கூறினாரா? இல்லை இருக்கவே இருக்காது. தன் தாய்க்கு அடுத்தபடியாக தன் பெரியம்மாவை கமல் நினைத்து வாழ்கின்றான். அவரும் அவ்வாறே தான் கமலை தன் பிள்ளையாகவே நினைத்துப் பாசம் காட்டுகின்றார். அதுமட்டுமல்லாமல் கமலின் பெரியம்மா சத்தியத்தின் இருப்பிடமாயிற்றே. ஒரு சிறு பொய்யாவது அவர் கூறியதாக கமல் அறிந்ததில்லையே.

"அப்படியென்றால் சந்தியாதான் பெரியம்மா சொன்னது போல் நடந்து விட்டாளா? அன்று சொன்னாளே "நீங்க இல்லேண்டா நான் உயிரோட இருக்கமாட்டேன்" என்று அவை அனைத்தும் என்னை மயக்க அவள் உரைத்த பொய் வாசகங்களா? ஐயோ எனைச்சுற்றி என்ன நடக்கிறது எனக்கு என்ன செய்வதென்றே தெரியலையே" இவ்வாறெல்லாம் கமலினுடைய மனம் பலவாறாகக் குழம்பிக் கொண்டிருந்தது. அவன் காதுகள் அடைக்கின்றன. கண்கள் இருளடைகின்றன. உதடுகள் மட்டும் "ஏன் அவள் அப்படிச் செய்தாள்" என்று உச்சரிக்கின்றன. கமல் தான் எங்கிருக்கின்றோம் என்பதை முற்றாக மறந்து விடுகின்றான். அவன் தன்னிலை மயங்குகின்றான்.

"ஐயோ என்ன இது, இது என்ன அநியாயம்", "பாவம் யார் பெத்த பிள்ளையோ" சனம் கூட்டமாகத் திரள்கின்றது. சவுதி நாட்டிலுள்ள பிரதான வீதியொன்றில் இச்சம்பவம் நிகழ்கின்றது. அக்கூட்டத்தில் இருந்த தமிழ் தெரிந்தவர்கள் இவ்வாறு கூறிக்கொள்கின்றனர்.

அக் கூட்டத்தின் நடுவே வீதியோரம் இருந்த கட்டிடம் ஒன்றில் கார் ஒன்று மோதி உடைந்து கிடக்கிறது. அதன் உள்ளே ஒரு மனிதனின் உருவம், உருவமற்றநிலையில் இருக்கின்றது. அருகில் சென்று பார்க்கும் போது தான் அது கமல் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

ஜெயசீலன் சோபிகா
தரம் - 11,
மட்/மகிழடித்தீவு,
சரஸ்வதி வித்தியாலயம்.

பொங்கும் அலைகடல் வந்து கழுவிடும்
எங்கள் இலங்கையிலே
நித்தம் இசையுடன் சிந்து படிக்குது
எங்கள் தேசத்து இளங்குயிலே

பட்டுக் கரங்களிலே
பட்டுத் தெறித்திடும் நெல்மணிகள்
காணும் மனங்களிலே
மொட்டு விரிக்குது தாமரைகள்

சோலை வனம் எங்கள் தேசம் - இங்கே
பாலை வனம் கிடையாது
காடுகள் மேடுகள் கனிகளெல்லாம்
செம்மையும் செழுமையும் கொண்ட தேசம்

தென்னை மரங்களில் மோதும் - இளந்
தென்றல் கவிதைகள் பாடும்
விண்ணைத் தொடுகின்ற கோயிற்கலசம் - இந்த
மண்ணின் பெருமையைக் கூறும்

மத்தள மேளங் கொட்டி
மங்கல தீபம் வைத்து
இறைவனைப் போற்றிடும் தேசம்
இசைச் சிந்துகள் பாடிடும் நேசம்

புதுயுகம் படைத்திடும் தேசம் - இதில்
பிறக்கட்டும் புதுப்புதுக் கானம்
உலகெனும் அரங்கினில் உயரட்டும் - எங்கள்
இளைஞர்கள் வீரர்கள் விளையாட்டும்

கார் மேகம் சிந்தும் நீர்த்துளிகள்
யார் மீதும் பேதம் இல்லாத் தேன்துளிகள் - அதுபோலே
பேதம் இல்லை எங்கள் மண்ணில்
நால் மதங்கள் வாழும் இன்ப வீட்டினிலே!

வாடிய காலங்கள் தேய்பிறையாக
வாழ்ந்திடும் காலங்கள் வளர்பிறையாக
சிந்திய வேர்வைகள் நெல்மணியாக
வந்தது கைகளில் நல்மணியாக!

தேசங்கள் எங்கும்
பேசிடும் வண்ணம்
ஓங்கட்டும் எங்கள்
தேசமது இன்னும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண வீடுகளில் மரணித்துப் போன நடைமுறைகள்

வி.ரிறுசா – கொக்கட்டிச்சோலை.

ஒரு மனிதனின் வாழ்விலே பிறப்பு எவ்வளவு உண்மையென்று நம்பப்படுகின்றதோ அதே போன்று இறப்பும் நிச்சயமானதொன்றாகும். ஒரு மனிதனின் பிறப்பை விட இறப்புத்தான் சமூகத்திலே பலமுனைதாக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு துன்பியல் நிகழ்வாக உள்ளது. ஒரு இனத்தின் தனித்துவமான கலாசார நெறிமுறைகளுக்கேற்ப மரணச் சடங்குகளின் செயற்பாட்டு நடைமுறையும் வேறுபட்டிருக்கும். ஏனைய சமூகங்களின் மரணச் சடங்கு செயற்பாட்டுக்கட்டமைப்பினை நோக்கும் போது எமது கலாசார நடைமுறையினை நாம் மதிக்காதவர்களாகவே இருக்கின்றோம். இவ்வாறுபட்ட எமது சமூக நடத்தைப் பிறழ்வினை தொட்டுக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## மரண அறிவித்தல்

மரண அறிவித்தல் செய்யப்படுவதன் நோக்கம் இறந்தவன் யார் என்பதை உற்றார் உறவினர்களுக்கும் சமூகத்துக்கும் தெரியப்படுத்து வதேயாகும். ஆனால் இன்றைய மரண அறிவித்தல்கள் இருக்கின்ற உறவுக்காரர்களை விளம்பரப்படுத்துவதற்காகவா அல்லது இறந்தவர் களின்அஞ்சலிக்காகவா செய்யப்படுகின்றது என்பது தெளிவு இல்லாமலேயே உள்ளது காரணம் இறந்தவர் யார் என்பதை அடையாளப் படுத்துவதற்கு போதுமாக இருக்கின்ற உறவுக்காரர்களின் பெயர்களுக்கு அப்பாலும் இரண்டு மூன்று தலைமுறையில் உள்ள குழந்தைகளின் பெயர்களையும் இணைத்து தேவையற்ற விதத்தில் அறிவிக்கப்படுகின்ற வையே ஆகும். இதனால் இவ் பிரசுரம் ஊர்பூராக வாசிக்கப்படுகின்றபொழுது இறந்தவர் யார் என்பதை கண்டு கொள்ள முடியாமல் உள்ளது ஆகவே எதிர்காலத்திலே இவ்வாறான பிரசுரங்கள் வெளியிடப்படுகின்ற பொழுது அவசியமற்ற பெயர்களை நீக்கி அனைவருக்கும் தெளிவாக விளங்கக்கூடிய வகையில் சுருக்கமாக வெளியிடப்படுவதற்கு சமூக முன்னோடிகள் அக்கறை செலுத்த வேண்டும்.

## கலாசார ஆடை

தமிழர்களின் கலாச்சாரத்தின் படி மரண வீடுகளுக்கு செல்லுகின்ற பொழுது அந்த துக்கத்தை நாமும் பகிர்ந்து கொள்வதற்கான வெள்ளை நிற ஆடை அணிந்து செல்வது மரபாகும். இதில் குறிப்பாக ஆண்கள் வெள்ளை நிறத்திலான வேட்டியும் வெள்ளை நிற மேல்லங்கியும், பெண்கள் வெள்ளை நிற சேலையும் அணிந்து செல்லவேண்டியது கட்டாயமாகும். ஆனால் இன்றைய எமது நடைமுறையில் இவ்மரபு மீறப்பட்டு விரும்பிய விரும்பிய நிறங்களில் ஆலயங்களுக்கு செல்வது போன்றும் களியாட்டங்களுக்கு செல்வது போன்றும் ஆடைகளை அணிந்து மக்கள் மரண வீட்டுக்கு செல்கின்றனர். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது நாம் அனைவரும் தவறு இழைத்தவர்களாகவே காணப்படுகின்றோம். ஆகவே இவைகள் திருத்தப்பட்டு ஒரு மரணவீட்டுக்கு உண்மையாகவே நாம் செலுத்துகின்ற மரியாதையை சிறந்த முறையில் பேணுகின்ற நடைமுறையை நாம் கடைப்பிடிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அது இன்றைய சமூகத்தின் அளப்பெரிய தேவையாகும்.

## மதுபாவனை

நாம் மரண வீடு செல்லுகின்ற நோக்கம் இறந்தவருடைய ஆன்மா முத்தியடைவதற்கு பிராத்திக்கின்ற அதே வேளை அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குடும்பத்தாரின் துன்ப துயரத்தில் பங்கெடுத்து அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகும். ஆனால் இந்த நோக்கம் தலைகீழாக மாறியுள்ளதைக் காணலாம். குறிப்பாக இறந்தவரின் உடலை அவர்களது உறவினர்கள் கட்டியணைத்து துன்பத்தில் கதறி அழுகின்ற அதே வேளை இந்த துக்கத்தை பகிர்ந்து கொள்ள சென்றவர்கள் சென்ற நோக்கத்தை மறந்து மது அருந்தி குதுகலமாக இருப்பதை மறுபுறத்தில் காண்கின்றோம். இதனால் மரண வீட்டுக்கு வருகின்ற வேறு சிலருக்கும் சிக்கல் ஏற்படுவதைக் காண்கின்றோம். எனவே மரண வீடுகளில் மதுபாவனையினை முற்றாக தடைசெய்யவேண்டியது இன்றைய சமூக முன்னோடிகளின் பிரதான கடமையாக உள்ளது. அப்போதுதான் நாம் நாகரீக வளர்ச்சிமிக்க ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

## இறுதி வணக்கம்

வீட்டில் இருந்து பிரதேசத்தை அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்வதற்கு முன்பு இறுதி இறையஞ்சலி செலுத்துவது ஒரு மரபாக உள்ளது. எனினும் ஏனைய மதங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது நாம் மிகவும் முரண்பட்டவர்களாகவே காணப்படுகின்றோம். குறிப்பாக கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் இந்த இறுதி வணக்கத்துக்காக தங்களுக்கென்று ஒரு பொதுவான பாராயணத்தையே பின்பற்றுகின்றார்கள். ஆனால் எமது மரண வீடுகளில் ஒரு இடத்தில் பட்டணத்தார் பாடலையும் இன்னொரு இடத்தில் பஞ்ச புராணமும் வேறு இடத்தில் சிவபுராணமும் இன்னும் சில இடங்களில் தேவாரம், திருப்புராணம், திருப்புகழ் இவ் மூன்றையுமே பாடுகின்றார்கள். ஆகவே எமது இந்து பெரியார்கள் கவனம் செலுத்தி எல்லா மரண வீடுகளுக்கும் பொதுவான பாடல்களை நிர்ணயம் செய்தால் ஒரு கட்டுக்கோப்புமிக்க நடைமுறைக்கு இது வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

## நாகரீகம் அடையாத நல்லடக்க நடைமுறை

எவ்வளவு தான் எமது சமூகம் இன்று அறிவு வளர்ச்சி பெற்று வந்தாலும் ஒரு பிரேதத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்கின்ற பொழுது ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதும் ஒருவரை ஒருவர் தள்ளி விடுவதும் மண்போடும் பொழுது ஒருவருக்கு முன் சென்று ஒருவர் ஒழுங்கற்று நடப்பதும் வெளிப்படையான சம்பவங்களாகவே உள்ளது. இவைகள் தவிர்க்கப்பட்டு ஒரு ஒழுங்கு முறையின் அடிப்படையில் விட்டுக் கொடுப்புடன் நாம் செயற்பட முற்படுகின்ற பொழுது தேவையற்ற வாக்கு வாதங்களையும் தவிர்த்துக் கொள்ளுகின்ற அதே வேளை நாம் உண்மையான நாகரீக செயற்பாட்டுக்குள் எம்மை இணைத்துக் கொள்ளமுடியும்.

ஒரு மரணச் சடங்கை பொறுத்த வரையில் மேலே சுட்டிக்காட்டப்பட்ட சம்பவங்கள் ஆய்வின் அடிப்படையில் உண்மையானதாகும் இவைகள் திருத்தப்படுகின்ற பொழுது எமது சமூகத்தின் ஏனைய சமூகங்களுக்கு முன் மாதிரியாக இருக்கும் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். ஆகவே இவ் நோக்கங்களை அடைவதற்கு நாம் அனைவருக்கும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டு ஒற்றுமையும் ஒழுக்கமுமிக்க சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப முற்படுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழைகள்

தி.சிந்துஜன் – அரசூரான்

நாங்கள் ஏழ்மைத் தாயின்
செல்லப் பிள்ளைகள்
வசந்தத்தையே காணாத
வானம் பாடிகள்

கதிரவனுக்குக் கூட எங்கள் மீது
கருணையில்லை
மரநிழலாகிய எங்கள் குடியிருப்பை
அடிக்கடி மாற்றி விடுகிறான்

இந்த உலகம் எங்களின்
உழைப்பாலே இயங்குகிறது
ஆனால் எங்கள் பயணம்
முடங்கியே கிடக்கிறது

நாங்கள் கட்டிய ஏழடுக்கு
மாளிகையில் மழைக்காக
ஒதுங்கிட ஓடினோம்
நாய்கள் எச்சரிக்கை என்ற
பலகையைக் கண்டோம்

எங்களை கற்களாக வைத்ததுதான்
ஜனநாயகக் கோட்டை
கம்பீரமாக கட்டப்பட்டுள்ளது.
நாளை எங்கள் பெயர் சொல்ல
பெற்ற பிள்ளைக்கு வைத்துள்ளோம் ராஜா
என்று
ஆனால் நிஜத்தில் ஏழைகளாக
உள்ளோம்.



# என் தாய்

தொட்டில் பருவத்தில் என்
தாயின் தாலாட்டைக் கேட்டு
பசியை மறந்து இசையில் மூழ்கி
இன்பம் கண்டு உறங்கி விட்டேன்

மழலை பேசும் பருவத்தில் என்
தாய் ஊட்டிய நிலாச் சோற்றை
வாய்க்குள் வைத்தபடி நிலவை தொட்ட
சந்தோஷத்தோடு உறங்கி விட்டேன்

தத்தை நடை நடக்கும் பருவத்தில்
நான் தடக்கி விழுந்து அழுதபோது
என் தாயின் ஆறுதல் வார்த்தையைக் கேட்டு
ஆனந்தத்தில் உறங்கிவிட்டேன்

பள்ளி செல்லும் பருவத்தில்
பட்டாம் பூச்சியை பிடித்து அடிக்க
அம்மா கூறிய ஆலோசனையில்
புழுதிச் சுகத்தில் உறங்கி விட்டேன்

கனவுகள் நிஜமாகும் பருவத்தில் என்
தாயை பிரிந்து எப்படி பெரிய
பள்ளிக்கு பட்டப்படிப்பு படிக்கச்
செல்வேன் மனம் கேட்கவில்லை.

இத்தனை இன்பங்களை விட்டு
அரைகுறை ஆடையோடு உறவு
முறையை மறந்து உலாவும் நகரத்துக்கு
நரக வாழ்க்கை வாழ நான் செல்லவில்லை

திண்ணையில் இருந்த என் அன்புத்தாய்
குத்து அரிசிச் சோறும் கட்டச்சம்பலும்
தந்தாள் அதை நான் சுவைத்தேன்
சுவை சுவர்க்கத்தை மிஞ்சியது

என் தாயை அரவணைத்து அன்பு
முகாங்களை நான் அள்ளி சொரிந்தேன்
உதடுகளில் ஒட்டி இருந்த கட்டச்சம்பல்
தாயின் கன்னத்தை ருசித்து விட்டது

அப்படியே என் தாயின் தோளில்
சாய்ந்து விட்டேன் சில் என்ற
தென்றல் பறவைகளின் இனிய
கீதங்கள் உறக்கத்துக்கு சுகம் தந்தது

என் தாயின் தோளில் நான் கிராமத்து
பெண்ணாக உறங்க என் தாய்
கிராமத்துக்கே தாயான
இன்பத்தில் இருக்கின்றாள்.

செ.நதியா, கல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.அச்சோபனா
முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.
தரம் –11

# முன்னால் செய்தது பின்னால் விளையும்

டிங் டிங் என கோயில் மணியோசை கேட்கிறது. பறவைகள கீச் கீச் என ஒலி எழுப்பிக் கொண்டு இருக்கின்றது. மாலா நித்திரையில் இருந்து கண்ணை விழித்தாள். மாலா படிப்பதற்கு ஆர்வமுள்ள ஓர் ஏழை வீட்டுப்பெண். இவளுக்குப் படித்துப் பெரியாளாகி தனது இரு தங்கைமாரையும் படிப்பிக்க வேண்டும் என்றொரு ஆசை. இவளுடைய தந்தை சிவராம் உழைப்பதையெல்லாம் குடித்து குடித்து அழிக்கும் ஒரு மனிதர். இவளுடைய தாய் வீட்டு வேலை செய்யும் சாதாரண ஒரு பெண். அவளுடைய பெயர் கமலா. கமலாவிற்கு தனது மூன்று மகள்மாரையும் படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்றொரு ஆசை.

மாலா தரம் 10ல் கல்வி கற்கிறாள். அவளுடைய தங்கைமார் முறையே தரம் 7இலும், 5இலும் கல்வி கற்கிறார்கள். மாலா ஒரு நாள் கமலாவிடம் பரீட்சைக்காகப் பணம் கேட்கிறாள். கமலாவோடு தனது கணவனான சிவராமிடம் சென்று மாலா பரீட்சைக்காகப் பணம் கேட்கிறாள் என்று கூறினார்.அதற்கு சிவராம் படிப்பு எல்லாம் ஒன்றும் தேவையில்லை. பேசாம வீட்டு வேலை செஞ்சிக்கிட்டு இருக்கச் சொல்லு என்று கூறி கமலாவிற்கு அடித்து விட்டுச் சென்றுவிட்டார்.

சிறிது நேரம் சென்ற பிறகு சிவராம் மிகவும் மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தார். அவர் கமலாவிடம் சென்று அடித்ததற்கு மன்னிக்குமாறு கூறி கமலா நமது மகளைப் படிப்பிப்பதற்கு பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தோம் அல்லவா இப்போது அந்தப் பிரச்சினையே இல்லை நான் மாலாவை பட்டணத்திற்கு அனுப்பி படிப்பிக்கப் போகிறேன் என்று கூறினார். கமலாவிற்கு ஆச்சரியமாக இருந்தது ஆனாலும் சிறிதளவு பயமாகவும் இருந்தது. கமலா சிவராமிடம் எப்படி பட்டணத்துக்கு அனுப்பப் போகிறீர்கள் என்று கேட்டாள். அதற்கு சிவராம் எனது முதலாளியை இன்று சந்தித்தேன். அவர் என்னிடம் தனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்று கூறினார் அவருக்கு ஒரு பிள்ளைகளும் இல்லையாம் நல்லாப் படிப்பித்து ஆளாக்குவாரு என்று கூறினார். கமலா சிவராம் கூறியவற்றை கூறினாள். மாலாவிற்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சிவராம் கமலாவிடம் மாலா செல்வததற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறினார். கமலா மாலா செல்வதற்குரிய ஏற்பாடுகளை அன்றிரவே செய்து முடித்தாள். அடுத்த நாள் சிவராம் மாலாவைக் கூட்டிக்கொண்டு பட்டணத்திற்குச் சென்றான். இருவரும் முதலாளியின் வீட்டை நோக்கிச் சென்றார்கள். அங்கு பிள்ளைகளின் சத்தம் கேட்டது. அப்போது மாலா சிவராமிடம் என்ன அப்பா உங்கட முதலாளிக்குப் பிள்ளைகள் இல்லை என்று கூறினீர்கள். ஆனால் இங்கு பிள்ளைகளின் சத்தம் கேட்கிறதே என்று கூறினாள். அதற்கு சிவராம் பரவாயில்லை வா என்று சமாளித்துக்கொண்டு முதலாளியின் வீட்டிற்குச் சென்றார்கள்.


அப்போது தான் மாலாவிற்கு உண்மை விளங்கியது தனது தந்தை தன்னைப் படிப்பிப்பதற்கு கூட்டி வரவில்லை பத்தாயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு முதலாளியின் வீட்டில் வேலை செய்வதற்காக விற்றுள்ளார் என்பது. சிவராம் பத்தாயிரம் ரூபாவை வாங்கிக் கொண்டு மாலாவை அங்கு விட்டு விட்டு ஊருக்கு திரும்பி வந்து விட்டார்.

மாலாவை அந்த வீட்டு முதலாளி அம்மா, வீட்டிலுள்ள அனைத்து வேலைகளையும் செய்யுமாறு கூறினார். மாலா ஒரு சில வேலைகளையே மிகவும் கஷ்டப்பட்டு செய்து முடித்தாள். அந்த வீட்டு முதலாளி அம்மா, மாலா முழு வேலைகளையும் செய்யாததனால் மாலாவிற்கு அடித்து பல துன்பங்களைச் செய்தார்.

அன்று இரவு எல்லோரும் நித்திரையாகி விட்டார்கள். மாலா அவ்வீட்டை விட்டு இரவோடிரவாக வெளியே தப்பித்து ஓடி வந்தாள். அப்போது அவளை வீதியில் கண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் மாலாவிடம் ஏன் இங்கு நிற்கிறாய் என விசாரித்தார். மாலா நடந்தவற்றையெல்லாம் கூறினாள். அடுத்தநாள் காலையில் மாலாவும் பொலிஸாரும் மாலாவின் வீட்டிற்குச் சென்றார்கள். மாலாவின் தந்தையை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். சிவராம் தான் முதல் செய்தவற்றை எல்லாம் நினைத்துக்கொண்டு சிறையில் உள்ள கம்பிகளை ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டு சிறையில் வாழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும்

கண்ணீரோடு ஊர் வாய்கள் கதை சொல்லித்திட்டியும்
ஒரு பணப்பேயும் நாலைந்து அடியாட்களும்
ஓயவில்லை என்றனர் பலர்
பிறந்தோர் யாவரும்
இறப்பவர் என்பதால் ஊரார் மொழி
காதில் இனித்தது

என்னாசை மண்ணாசை என்று தெரிந்தும்
பொன்னாசை என்னை விடவில்லை
என்காலில் விழுந்து என்சொல் கேட்டுத் தோள்
கொடுக்க துணையாய் நின்றனர் சிலர்

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தலென்று
பாரதி புகன்ற மொழியும்
ஊரார் அழுத கண்ணீர் உருத்துமென்னும் சொல்லும்
என் மூளைப்பள்ள இடுக்கில்
மரணித்துப் போயின.

மாரிமகன்

இரவு தூங்கினும்
மூளை தூங்கஆசை விடவில்லை
யுத்தம் வெள்ளம் புயலென
நித்தம் கொடுமைகள் வந்தன மக்களுக்கு

துன்பக் கனலில் விழுந்து உழலும்
மக்கள் பெயரில்
இன்பம் காண மனம் பின்னிக்கவில்லை

போலிக் கையொப்பங்கள் பொலிவாய்க் கிடைத்தன.
பொலி பொலி
தம்பிரான் பொலியென பொலிந்தது பணம்
நிறைந்தது பண மூட்டை
கேலி செய்து புட்டிசம் அடித்தனர் பலர்.
எனினும் யாமிருக்கப் பயமேன் என்று
வேலியாய் மேல் அதிகார அருள் காத்தது என்னை

என் செயல் அநீதியென
வாயில் பலர் முணுமுணுத்தாலும்
காட்டிக்கொடுக்கவும்
முன் வந்து நிருபிக்கவும் முயலவில்லை யாரும்

இரகசியங்கள் அந்தரங்கமாய் தூங்கின.
என்னாட்சி நிலைக்க அதிகார அருள் பரிசளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசேதன விவசாய முறையும், பாதிப்புக்களும்

மு.சுதர்ஷினி

மனிதனுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட மிகப்பெரிய கொடை இயற்கை வளங்கள் ஆகும். இவ் இயற்கை வளத்தைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கவேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமை. ஆரம்பக் காலத்தில் வாழ்ந்த எமது மூதாதையர்கள் இயற்கையை நேசித்த, இயற்கையுடன் பிண்ணிப் பிணைந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து, ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்ததுடன் இயற்கையைப் பேண வேண்டிய அடுத்த பொறுப்பை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர். எனினும் 18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து இயற்கையைப் பேணி, இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. இதில் பிரதானமானது இயற்கை வழி விவசாயத்தில் செய்யப்பட்ட மாற்றமும் அவற்றுக்கு அடிமையாகியுள்ள மனித வாழ்வும் ஆகும். இதன் விளைவுகளை இன்று வாழ்கின்ற நாம் அனுபவிப்பதுடன் எமது அடுத்த பரம்பரைக்கு இட்டுச் செல்ல தயாராகின்றோம்.

எமது அன்றாடத் தேவைகள் முதல் அத்தியாவசியத் தேவைகள் வரை அனைத்திலும் நாம் இயற்கையைப் புறக்கணித்து செயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம்.





இவற்றுள் முக்கியமான ஒன்றாக உணவு உற்பத்தி காணப்படுகின்றது. இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டு செல்வதனால் வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மைச் செய்கை மூலமும், பயிர்ச்செய்கை மூலமும் நாம் நஞ்சூட்டப்பட்ட உணவுகளையே உட்கொள்கின்றோம். பயிர்ச் செய்கையாயினும், வேளாண்மைச் செய்கையாயினும் கிருமிநாசினி பாவித்து 14 நாட்களின் பின்னரே அறுவடை செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி ஆனால் இன்றைய வர்த்தக நோக்கிலான பயிர்ச்செய்கையினால் கிருமிநாசினி பாவித்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுதினமே அறுவடை செய்யப்படுகிறது. இதனால் அவற்றை உணவாக உட்கொள்ளும் எமது அடுத்த சந்ததிக்கு ஏற்படப்போகும் விளைவுகள், பாதிப்புக்கள் பற்றி நாம் சிந்திப்பதில்லை. அத்துடன் கிருமிநாசினிகள் அதன் விற்பனையாளர்களால் கலப்படம் செய்து விற்பனை செய்யப்படுவதனால் அதீத விளைவுகளை எமது உடலிலும், நிலத்திலும் ஏற்படுத்துகின்றது. இயற்கை வளங்களுள் ஒன்றான மண்வளம் இன்று அதிகளவான இரசாயன வளமாக்கிகள் மற்றும் கிருமி நாசினிகளின் பாவனையினால் தனது வளத்தை இழந்து செயற்கை முறைக்கு அடிமையாக்கப் பட்டுள்ளது. இதனால் விவசாயிகளின் தோழர்களாக செயற்படும், விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய மண்ணை வளப் படுத்துகின்ற நுண்ணுயிர்கள் அழிக்கப்படுகின்றன. அத்துடன் காலப்போக்கில் நிலக்கீழ் நீர் பாதிக்கப்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே இன்றைய காலகட்டத்தில் செயற்கை வழி விவசாயத்துடன் இணைந்த மனித வாழ்க்கை முறையினை நோக்கு வோமானால் மனிதனின் ஆயுட்காலம் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு குறைவடைந்து செல்வதுடன் புதிய நோய்களும் மனிதனைத் தாக்குகிறது. பரம்பரையாக மனிதனைத் தாக்கும் புற்றுநோய் இன்று பரம்பரை என்பதை விட்டு அனைவரையும் தாக்குகிறது. இதிலும் இளம் பருவத்தினரை அதிகமாகத் தாக்குகிறது. அத்துடன் அங்கவீனமான குழந்தைகள் பிறத்தல், சிறுநீரகம் பாதிப்படைதல் போன்ற நோய்களும் இன்று அதிகளவில் காணப்படுகிறது. இவற்றுக்கு காரணம் நாம் உட்கொள்ளும் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தும் இரசாயன வளமாக்கிகளும், கிருமிநாசிகளும் என ஆய்வுகளில் இருந்து தெரியவருகிறது.

எனவே 21ம் நூற்றாண்டில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இயற்கையுடன் பின்னிப்பிணைந்த, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது அவசியமானதாகும். இதன் அடிப்படையில் தான் இன்று நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம். என்ற தொனியில் இயற்கை வழி விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகிறது. எமது மூதாதையர்களால் பயன் படுத்தப்பட்டு வந்த இயற்கை வழிவிவசாய முறை இன்று பல ஆய்வுகளுக்கு மத்தியில் நவீனமயப் படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. அவை இயற்கை வளமாக்கியாக கூட்டெரு, இயற்கை கிருமிநாசினியாக பஞ்சகாவியா, அக்னி அஸ்திரம், இஞ்சி, பூண்டு மிளகாய் கரைசல், மீன்பாகு என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. இவற்றை எமது சூழலில் இயற்கையாகவும், குறைந்த செலவிலும் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு தயாரிக்க முடியும். இவற்றைப்பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது ஆரோக்கியமான உணவு முறையை நாம் கடைப்பிடிக்கும் அதே நேரம் மண்வளத்தையும் பேண முடியும் என்பது உறுதியாகும்.

---

முனையூர் ஜீவி

சூதுக்காரனின் உள்ளம் போல்
சூடான கொடூர வெயில்
எரிக்கிறது
அன்றும் இன்றும் -
வியர்வையும் புழுக்கமும்
திருமணம் முடித்து
தேனிலவு கொண்டாட எரிக்கிறது

பயணத்தில் சந்தையில் சூரிய
கதிரொளி பாரில் உடல்களை
உருக்கிறது
குறிவைத்து சுடும் கனரக ஆயுதமாய்

வாகனத்தில் ஏறினால் நாவடிக்கும்
உடல் வியர்க்கும் உள்ளம் அழும்
எண்ணத்தில் எரிக்கிறது
எத்தனை தூரத்தில் இருந்தாலும்
வாயு எமை விடுமா?
தீயாய் எரிக்கிறது

## எரிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

எழுதி வைத்த
என் பேனா முனை
எழுது என்றது
சிந்தித்தேன் சிறு நேரம்
அப்போ!
என்
வெற்றுக்காகிதம்
'வேண்டும்'
என்று சொல்லி
கவிச்சித்திரம் தீட்டியது

வேண்டும் வேண்டும்
மீண்டும் வேண்டும்
முலைப்பால் அருந்தி
சிறு கழைப்பால் அயர்ந்த
என்
தாய்மடி சுகம் வேண்டும்
நீ!
படிப்பாய் என்று சொல்லி
அகரத்தை தொட்டு
சிகரம் ஏற்றும்
உண்மை
நல்லாசான் வேண்டும்

இன்னும் வேண்டும்
மக்கள் உடன் பிறப்பு
மக்கள் உயிர் மூச்சு
மக்கள் துயர் துடைப்பு
என்றும்
மக்கள் சிகரம் காப்பு
சிந்தை கொண்ட
சிறந்த நல்லாட்சி வேண்டும்.
அகிம்சையின் தந்தை
அர்த்தமுள்ள அண்ணா
வேட்டையின் சுபாஷ்
எம்
கோட்டையின் செல்வா
இத்தனை போல் எத்தனையோ
ஏணிகள் எழ வேண்டும்
அவையத்தனையும்
அரசியலின்
அரசுகளாக வேண்டும்.

பாட்டறிந்த பாரதி வேண்டும்
கேட்டறிந்த குடிகள் வேண்டும்
பாட்டாளியை கூட்டாளி போல்
கொஞ்சுகின்ற கோன் வேண்டும்

உடல் விற்று
உயிர் காக்கும்
உறவுகள்

உயிர் விட்டு
உடல் காக்கும்
"உயிரினம்"
ஆக வேண்டும்.

வேரினை மதிக்கும்
விழுதுகள் வேண்டும்
பாரினைக் குடிக்கும்
நோயினைக் கொல்ல
அரும்பெரும் மூலிகை
அத்தனையும் வேண்டும்

மூளையின்
முன்நாண் அதனில்
சொல் நாண் பூட்டி
தமிழ்
கொல்வான் நெஞ்சை
கொல்வாய்
என்றேவும்
அருந்தமிழ் ஏடுகள்
பற்பல
அம்புகளாய் எழவேண்டும்

இன்னும் வேண்டும்
தேரினில் ஈசன்
ஏறிவரும் போதும்
தெருக்களின் பிள்ளை
அவன் புகழ்
ஓத வேண்டும்
சட்டங்கள் கரத்தில்
பட்டங்கள் கிடைக்க வேண்டும்
அப்போ குற்றங்கள் யாவும்
முற்றுப்பெற வேண்டும்

ஈழத்தமிழ் என்றொருவன்
இன்றும் இருக்கான்
என்று சொல்லி
அவன்

காணி நிலத்தில்
காளி அன்னை
காவல் செய்யும்
தனிச் தேசம் வேண்டும்

இத்தனை போல்
எத்தனையோ வேண்டும்
அத்தனையும் இல்லாவிடில்
இறுதியாக ஒன்று வேண்டும்
'வெண்ணிறக் கொடியேற்றி
எம்
வித்துக்கள் யாவும்
விண்ணில் செல்ல
ஓர் வெண்புறா வேண்டும்"

படுவான் பகீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையில் கல்வி



பொ.வித்தியா
தரம் 11
மகிழடித்தீவு

கமலா அவளுடைய அம்மா, அப்பா, தங்கை என்பர்கள் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அன்று மாலை நேரமாகின்றது கமலாவின் அப்பா போதையுடன் சத்தமிட்டுக் கொண்டு வருகின்றார். வந்தவுடன் கமலாவின் அம்மாவுடன் சண்டை பிடிக்கிறார்கள். இதன் போது கமலாவும் அவளுடைய தங்கையும் பயத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தின் பின் அப்பா உறங்கிவிட்டார். எல்லோரும் உறங்கிவிட்டார்கள்.

மறு நாள் காலையில் கமலா பாடசாலைக்குச் செல்வதற்கு தயாராகிவிட்டு வருகின்றாள். அப்போது அவளுடைய அப்பா கமலாவை அழைத்து நீ இன்று பாடசாலைக்குச் செல்ல வேண்டாம். நாம் இருவரும் ஒரு இடத்திற்கு சென்று வருவம் என கூறினார். கமலா படிப்பில் நல்ல கெட்டிக்காறி. "எங்க அப்பா நாம் செல்ல" என்று கேட்டாள். அதற்கு கமலாவின் அப்பா "உன்னை ஒரு நல்ல பாடசாலையில் சேர்த்து விடுவதற்கு நான் உன்னை நிற்கச் சொன்னேன்" எனக் கூறினார். இதை உண்மை தான் என நம்பி கமலா அப்பாவுடன் செல்கின்றாள்.

அவர் அப்போது பாடசாலைக்கு அழைத்து செல்லவில்லை ஒரு வீட்டிற்குள் அழைத்துச் சென்று கமலாவை அவர்களிடம் காட்டுகின்றார். கமலா பயந்து போய் நிற்கின்றாள். சிறிது நேரத்தின் பின் கமலாவை விட்டுவிட்டு அவளுடைய அப்பா சென்றுவிட்டார். கமலா பயந்து அப்பாவின் பின் ஓடினாள். அவளை வீட்டுக்காரர் விடவில்லை. கமலா ஏன் என்னைபிடித்து வைத்திருக்கின்றீர்கள் எனக்கேட்டாள். உன்னுடைய அப்பா எங்களிடம் பணத்தை வாங்கிவிட்டு உன்னை விட்டு விட்டுச் செல்கின்றார் எனக்கூறினார். கமலா ஏன் என்னை இங்கு விட்டார் எனக் கேட்டாள். எமது வீட்டுவேலைகளைச் செய்வதற்கு வேலைக்கார் ஒருவர் வேண்டும் என கூறினோம் அவர் உன்னைக் கொண்டு வந்து விட்டார் என அவர்கள் கூறினார்கள்.

கமலா தான் இருக்கும் இடம் கூடத் தெரியாமல் அவர்களுக்கு வேலை செய்கின்றாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. கமலா தான் சமைத்து அனைவருடைய ஆடைகளையும் கழுவி பல வேலைகளை செய்தாள்.

ஒருநாள் கமலாவுடன் இரண்டு பிள்ளைகளையும் விட்டுவிட்டு அவர்கள் ஓர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு சென்றுவிட்டார்கள். அப்போது கமலாவை இரண்டு பிள்ளைகளும் விளையாடுவதற்கு கஷ்டப்பட்டு அழைத்து கூட்டி வந்து மூவரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள் அப்போது வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்கள். கமலாதான் பிள்ளைகளை விளையாடக்கூப்பிட்டு விளையாடினாள் என ஈவுஇரக்கம் இல்லாமல் கமலாவின் கையில் சூடுவைத்தார்கள்.

கமலா அழுது கொண்டே நித்திரை கொண்டுவிட்டாள். பின்னர் இக்காயத்துடன் அவளால் வேலை செய்யமுடியவில்லை ஆனால் அவர்கள் கமலாவிற்கு அடித்து வேலையை செய்யச் சொல்வார்கள். சிறிது நாட்கள் கமலா அங்கு வேலை செய்தாள்.

ஒருநாள் இரவு நேரமாகின்றது. கமலா இவர்களுடன் இருப்பதற்கு பயந்து மதிலால் ஏறிகுதித்து ஒரு மரத்தின் கீழ் நின்று எங்கு செல்வதென்று தெரியாமல் அழுகின்றாள். அப்போது வழிப்போக்கன் ஒருவர் கமலாவைக் கண்டு என்ன செய்யலாம் என சிந்தித்தான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல அவ்வழியால் ஒரு 'சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்' வந்தார். கமலாவின் நிலையை அறிந்து கொண்டார். கமலா கல்வித் தாகத்துடன் 'எங்கு சென்று படிப்பதற்கும் தயார்' என தனது சம்மதத்தைத் தெரிவிக்கும் நேரம் வானத்தில் மின்னலொன்று வெட்டி அணைகிறது.

# தேரிழுக்க வாரீர்



கல் மாடு புல்லுண்ட தலமையா
எங்கள் கண்ணீரைத் துடைக்கின்ற இடமையா
சொல்லாட்சி வளமிக்க சோலையிலே
நல்லாட்சி புரிய வந்த நாயகனே

வாவி மகள் பின்னிருக்க
வயல்களெல்லாம் சூழ்ந்திருக்க
கூவும் குயில் பாட்டிசைக்க
உந்தன் கோயில் மணி ஓசை கேட்டு

வெள்ளையனை விரட்டி விட்டு
துள்ளி வந்து நீ அமர்ந்து
வெள்ளை மனம் கொண்ட மக்கள்
வேதனையைத் தீர்ப்பவனே

தேரோடும் அழகைக் காணப் - பல
கோடிக் கண்கள் வேண்டுமென்பர்
"தேரோட்டம்" காண வந்த
பக்தர் கூட்டம் உண்மையாக்கும்

தேசத்து கோயில் மக்கள்
தெருவெலாம் விழாக்காணும்
"தேரோட்டம்" என்றால் மட்டுமே
இத் திருவிழா நடந்தேறும்

தான்தோன்றி அப்பனாக
தரணியில் வந்த நீயும்

மீன்பாடும் தேனாட்டில்
மிடுக்காக அமர்ந்தவனே

கொக்கட்டிமர நிழலில்
குருதி பொங்க நீயும் வந்து
திக்கெட்டும் ஒளி பரப்ப
தினமும் நாம் தொண்டு செய்வோம்

பார்புகழும் ஈசனுக்கு
தேரிழுக்க வாரீர் போவோம்
ஊர் முழுதும் சேர்ந்து நிண்டு
ஒற்றுமையால் இழுத்தால் தான்
சீர் பெருகும் ஏர் உழுதும்
சீர் பெருகும் ஏர் உழுதும்
சிவமயமேயாகும்
அன்பே சிவம்

சோலையூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முனைக்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலயம்

கு.மகேஸ்வரமூர்த்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் "முனைக்காடு" என்றும் "காப்புமுனை" என்றும் அழைக்கப்பட்டுத் தற்போது முனைக்காடு என்று அழைக்கப்படுகின்ற பழம்பெரும் பதியில் சுடுகாட்டிற்குக் கிழக்கில் வீரபத்திரர் சுவாமி கோவில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

வீரபத்திரர் சுவாமியை ஓர் வீரத் தெய்வமாக சைவ மக்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர். முழுமுதல் கடவுளாகிய சிவபெருமானை மருமகனாகவும் உலக மாதாவாகிய உமாதேவியை மகளாகவும் தவப்பலத்தால் ஆக்கிக்கொண்ட தக்கன் தானே முதல்வன் எனக் கர்வம் கொண்டான். இதனால் தான் செய்த யாகத்திற்கு தன் மகளான உமாதேவியையும் மருமகனான சிவபெருமானையும் தவிர யாவரையும் அழைத்துச் கொண்டான். இதன் காரணமாகக் கோபமடைந்த சிவபெருமான் தக்கனது யாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரரைத் தோற்றுவித்தார். என்று புராணங்கள் கூறுகின்றன. இவ் வீரபத்திரர் வழிபாடு சோழர் காலத்தில் இருந்து தமிழர் மத்தியில் சிறப்புற்றுக் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரபத்திரர் வழிபாடு மிகப் பழமையானதாக இருந்து வந்துள்ளது. இம் மாவட்டத்தில் ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு நகர், தேற்றாத்தீவு, முனைக்காடு ஆகிய இடங்களில் வீரபத்திரர் சுவாமி ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெற்று வருகின்றது.

கொக்கட்டிச்சோலை திருத்தான் தோன்றீஸ்ரர் ஆலயத்துடன் தொடர்புடையதாக உள்ள முனைக்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் மிகப் பழமையானது என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

கொக்கட்டிச்சோலை திருத்தான் தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேரோட்டத்தை அடுத்து "திருவேட்டை" அல்லது "சூகர வேட்டை" எனும் நிகழ்ச்சி இவ்வாலயத்திலேயே நடைபெறுகின்றது. சிவபெருமான் ஐந்தொழில்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலைக் காட்டும் திருவேட்டை நடைபெறும் இடத்தில் சங்காரமூர்த்தியாகிய வீரபத்திரருக்கு ஆரம்பத்தில் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மன்னன் தருமசிங்கன் தான்தோன்றீஸ்வரர் ஆலய திருப்பணியை நிறைவேற்றிச் சோழ நாட்டிலிருந்து மூன்று இரதங்களை வரவழைத்து இரதோற்சவம் நடத்தினான். என்றும் இரதோற்சவத்தைத் தொடர்ந்து தான்தோன்றீஸ்வரர் பெருமான் இவ் ஆலயத்திலேயே திருவேட்டையாடினார் என கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹா கும்பாபிசேக சிறப்புமலரில் (1998.பக்.36) அ.கனகநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசையினையும் தொண்டுழியத்தினையும் மகோன் (1215 - 1236) திட்டம் செய்ததாக மட்டக்களப்பு மான்மியமும் மரபு வழியான செய்திகளும் கூறுகின்றன. அத்தோடு தான்தோன்றீஸ்வரப் பெருமான் திருவுலாவரும் சித்திரத்தேர் இரண்டாவது பாண்டியப் பேரரசின் காலத்திற்குரியது என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும் இவையெல்லாம் கொக்கட்டிச் சோலை திருத்தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த உற்சவம் 800 வருடங்களுக்கு மேல் பழமையானது என்றும் முனைக்காடு அருள்மிகு வீரபத்திரர் சுவாமி ஆலய வழிபாட்டிடமும் இவ்வளவுகால அளவு பழமையானது என்றும் கூறலாம் என க.மகேஸ்வரலிங்கம் "மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (1996.பக்.59)

தான்தோன்றீஸ்வரப் பெருமானின் திருவேட்டைத் திருவிழாவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் குடுக்கை கூறும் நிகழ்ச்சியிலும் கண்டி மன்னனாகிய விமலசூரியன் (1592 - 1604) ஒரு முறை கலந்து கொண்டதாக மட்டக்களப்பு மான்மியத் திருப்படைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

அச்சான்றுகளை எல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது முனைக்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலயம் மிகப் பழமை வாய்ந்த ஆலயமாகத் திகழ்கின்றது.

இத்தகைய பழமை மிக்க ஆலயத்தை 1815ம் ஆண்டிலிருந்து முனைக்காடு கிராம மக்களே பராமரித்து பரிபாலித்து வருகின்றனர். ஆரம்பத்தில் இவ் ஆலய வழிபாட்டிடத்தில் வீரபத்திரசுவாமிக்குப் பந்தல் அமைத்துப் பந்தலிலே வழிபட்டு வந்துள்ளனர். இப்பந்தல் அருகே இருந்த நிலத்தைத் தோண்டி மரக்கொட்டுப் பதித்து நீர் வசதியினை ஏற்படுத்தியுள்ளனர். இந்த மரக்கொட்டுப் பதித்து இருந்த இடத்தில் கட்டப்பட்ட கிணறே இன்று நாள் வரைக்கும் வீரபத்திரர் சுவாமியின் தீர்த்தக் கிணறாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1965ம் ஆண்டு வீரபத்திரசுவாமியின் பந்தல் இருந்த இடத்தில் ஆகம முறைசாராத வகையில் கல்லில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன கட்டப்பட்ட துடன் விநாயகர், நாகதம்பிரான், ஆதிவைரவர், சுடலை வைரவர் போன்ற பரிவாரத் தெங்வங் களுக்குப் பந்தல் அமைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

கடந்த 2006ம் ஆண்டு இவ்ஆலயம் முற்றாக உடைக்கப்பட்டு ஆகம முறைசார்ந்து முலஸ்தானம், அர்த்தமண்டபம், மஹாமண்ட பங்கள் கட்டப்பட்டதுடன் விநாயகர், நாகதம்பிரான், ஆதிவைரவர், சுடலை வைரவர் போன்ற பரிவாரத்தெய்வங்களுக்கு சிறிய கோயில்களும் கட்டப்பட்டு 2011ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகக் கிரியையும் இடம்பெற்றது.

இவ் ஆலய வழிபாட்டு முறையானது ஆகம முறைசாராத கிராமிய வழிபாட்டு முறையாகவே இருந்து வந்துள்ளது. ஆரம்பகாலத்தில் வருடத்தில் ஒரு நாள் மட்டும் வீரபத்திரர் சுவாமிக்குப் பூசை செய்து வந்துள்ளனர். அக்காலப்பகுதியிலிருந்தே பலர் வீரபத்திரர் உருக்கொண்டு தெய்வமாடி வந்துள்ளனர். இன்றும் இவ் ஆலயத்தில் வீரபத்திரர், வீரம்மாகாளி, ஆதிவைரவர், சுடலைவைரவர், அனுமார் ஆகிய தெய்வங்களுக்கு உருக்கொண்டு தெய்வமாடி வருகின்றமையைக் காணலாம்.

1940களின் பின்னர் இவ்வாலயத்திற்கென ஓர் நிருவாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு மாரியம்மன் சடங்கு நிறைவு பெற்று தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய கொடியேற்றத்திற்கு இடைப்பட்ட காலத்தில் வரும் புதன் கிழமை திருக்கும்பம் வைத்து தொடர்ந்துவரும் வெள்ளிக்கிழமை இரவு பள்ளயச் சடங்கு மறுநாள் கும்பம் சொரிந்து சக்கரை அமுது கொடுத்து மூன்று நாள் சடங்கு நடைபெற்றுள்ளது.

1998ம் ஆண்டின் பின்னர் தான்தோன்றீஸ்வரர் பெருமானின் திருவேட்டைத் திருவிழா நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து வரும் புதன்கிழமை ஆரம்பமாகி சனிக்கிழமை நிறைவடையும் வகையில் மூன்று நாள் சடங்கு நடைபெற்று வந்தது.

2011ம் ஆண்டு (கரவருடம் ஆனித்திங்கள் 28ம் நாள்) நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தினை அடுத்து இவ்ஆலய வருடாந்த சடங்கு ஆனிமாதப் பௌர்ணமியை அடுத்து வரும் சதுர்த்தசி திதியை பள்ளயச் சடங்காகவும் மறுநாள் அமாவாசைத் திதியில் சர்க்கரை அமுதுடன் நிறைவடையும் வகையில் ஐந்து நாள் சடங்கு நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் மக்கள் தினமும் நேர்த்தியாக மது வைத்தல் வட்டாமடை வைத்தும் வழிபட்டு வருகின்றமையைக் காணலாம்.

நித்திய பூசை வருடாந்த சடங்கு திருத்தான்தோன்றீஸ்வரர் பெருமானின் திருவேட்டைத்திருவிழா இவற்றைவிட சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைக் கதை, வைகாசிப் பூரணை, ஆனி உத்தரம், ஆடி அமாவசை, ஆவணி சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை விளக்கீடு, மார்கழித்திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், மஹாசிவராத்திரி, பங்குனி உத்தரம் போன்ற நைமித்திய பூசைகளும் இடம்பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிப்பளை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரத்தியேக கல்வி செயற்பாடுகள் பற்றிய ஒரு தேடல்

அருள் கருணா



சிறுவர்களும் இளைஞர்களும் தம் வாழ்க்கையில் இலட்சியங்களையும் சவால்களையும் எதிர்கொள்வதற்கு கல்வி அவசியமானதாகும். மாணவர்கள் ஒவ்வொருவரும் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியின் வளங்களாவர். ஆரோக்கியம் மிக்க சமூகத்தின் வளர்ச்சியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை ஒழுங்கு படுத்தப்பட்ட வாழ்வியலுக்கு கொண்டு செல்ல முயற்சிக்கும் அரச திணைக்களங்கள் போன்று இன்று வலிந்துதவு தொண்டர் அமைப்புக்களும் பிரதேச ரீதியாகவும், கிராம ரீதியாகவும் பிரசவித்துள்ளன.

போரியல் இல்லாத வாழ்வியலை எந்தவொரு சமூகத்திலும் கண்டுகொள்ள முடியாது. இதன்படி கடந்த 2007ம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழல் எம்மக்களின் வாழ்வியலில் பல சோகங்கள் படிந்த கதைகளை எமக்கு சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றது. கல்வி ரீதியான முன்னேற்றமே சிறந்த சமூக உருவாக்கத்தின் அச்சாணி என்பதே அக்கதைகளின் பின்னால் உள்ள சாரமாகும். இப் பின்னணியில் கடந்த 2008ம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்குமுள்ள பிரத்தியேக கல்வி செயற்பாடுகள் இங்கு முக்கியமாக தேடப்படுகின்றன. சமூக மட்ட பிரதிநிதிகளின் ஒருங்கிணைந்த பங்கேற்பின் மூலம் இடம் பெறுகின்ற பிரத்தியேகக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான இத்தேடல் பிற்கால சந்ததிக்கு ஓர் அனுபவமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆரம்பகாலங்களில் எமது பிரதேசத்தில் பிரத்தியேக கல்வி செயற்பாட்டு மையங்கள் தனியார் கல்விக் கூடங்கள் இல்லாத நிலைமைகளின் போது பிரதேசம் தழுவிய ரீதியில் ஒளிக்கல்லூரி என்னும் அமைப்பு பல்வேறுபட்ட கல்விச் செயற்பாடுகளையும், ஆன்மீகச் செயற்பாடுகளையும், சமூக விருத்தி சார்ந்த செயற்பாடுகளையும் செயற்படுத்தி வந்துள்ளது. பிரதேசம் தழுவிய செயற்பாட்டாளர்கள் தொண்டர் அடிப்படையில் தமது சேவையை வழங்கியிருந்தனர். இவை தவிர கிராமங்கள் சிலவற்றில் 'கல்வி வட்டம்' எனும் அமைப்புக்களை உருவாக்கி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்து வந்துள்ளனர். இவற்றுள் சிறப்பாக மாலை நேரங்களில் பெற்றாரின் உதவியுடன் வீடுகளுக்குச் சென்று மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகளை கண்காணித்தும் வீட்டுச் சூழலை கற்கும் நிலைக்கு ஆரோக்கியப்படுத்தியும் வந்துள்ளனர்.

தனியார் கல்வி நிலையங்களும் எமது பிரதேசத்தில் குறிப்பாக கிராமங்களில் தமது சேவையை வழங்கி வந்துள்ளன. இதன்படி 1996ம் ஆண்டு காலப்பகுதியில் விக்னேஸ்வரா கல்வி நிலையம் அரசடித்தீவிலும், அதற்குப் பின்னர் 2000ம் ஆண்டுகாலப் பகுதிகளில் பிரம்ம கல்வி நிலையம் அம்பிளாந்துறையிலும் இயங்கி வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து இடப் பெயர்வின் பின்னர் 2008ம் ஆண்டு அரசடித்தீவில் விக்னேஸ்வரா படிப்பகமும், பட்டிப்பளையில் ஒரு தனியார் கல்விக்கூடமும், அம்பிளாந்துறையில் அப்டா அக்கடமியும், முதலைக்குடாவில் நான்கு தனியார் கல்வி நிலையங்களும் பண்டாரியா வெளியில் 'அறிவாலயம்' என்னும் கல்விக் கூடமும் 2011ல் அரசடித்தீவில் கலைவாணி படிப்பகமும் இயங்கி வருகின்றன. ஆய்வுத் தேடலின் பரப்புக் கருதி தனியார்களினால் நடைமுறைப்படுத்தி வருகின்ற கல்விக்கூடங்கள், செயற்பாடுகள் பற்றி விபரிக்கவில்லை. மாறாக கிராமத்தில், பிரதேசத்தில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து பொது நோக்கினைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தி வருகின்ற செயற்பாடுகள் பற்றியே தேடப்படுகின்றன.

இத்தேடலில் இரண்டு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று கிராம மட்டங்களில் கல்விப் பணிகளை முன்னெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் மற்றையவை பிரதேச ரீதியாக ஒழுங்கமைந்த கல்விச் செயற்பாட்டு அமைப்புக்கள் என்பனவாகும். இதில் கிராம முன்னோடிகள் வலிந்துதவு தொண்டர்களாய் தாமாக முன்வந்து கிராமங்கள் தோறும் அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலமாக கல்வி அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## விக்னேஸ்வரா கல்வி அபிவிருத்தி ஒன்றியம் - அரசடித்தீவு
## Vigneswara Education Development Association - VEDA

VEDA அமைப்பானது கடந்த 2009ம் ஆண்டு 9ம் மாதம் 21ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அரசடித்தீவு கிராமத்தில் வசிக்கும் வலிந்துதவு தொண்டர்கள் ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு அச்சாணியாக இருப்பது கல்வி என்பதை உணர்ந்து தாமாக முன்வந்து 'விக்னேஸ்வரா கல்வி அபிவிருத்தி ஒன்றியம்' எனும் அமைப்பினை உருவாக்கியிருந்தனர். இதில் யுத்த சூழல் காரணமாக தம் கற்றல் செயற்பாடுகளை இடைநடுவில் விட்டுச் சென்ற இளைஞர், யுவதிகளின் உள்ளக் கிடக்கைகளின் வெளித்தோன்றலாகவே இவ் ஒன்றியம் உருவாக்கப்பட்டிருந்தது. இதன் செயற்பாடுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

### I. மாலைநேர கற்றல் செயற்பாடு :-

இது தரம் 9,10,11 மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களை உள்ளடக்கியது. இச்செயற்பாடு பெற்றோர்களின் முற்றுமுழுதான ஒருங்கிணைந்த பங்கேற்பின் மூலமே இடம் பெறுகின்றன. அவ்வப்போது பெற்றார் விழிப்புணர்வுச் செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இச் செயற்பாட்டுக்கு பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் உதவுகின்றமை முக்கிய விடயமாகும்.

### II. வார இறுதி நாட்களிலும் விடுமுறை தினங்களிலும் இடம்பெறும் செயற்பாடுகள் :-

இது மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாட்டு அமைப்பின் (BEDO) நிதி அனுசரணையுடன் VEDA வினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுவதோடு மதிப்பீட்டுப் பரீட்சைகள் உடனுக்குடன் வைக்கப்பட்டு பின்னூட்டல்களும் இடம் பெற்று வருகின்றன. இச்செயற்பாட்டில் மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் பயிலுகின்ற ஏழு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இதில் தரம் 8,9,10 மாணவர்கள் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### III. புலமைபரிசில் மாணவர்களுக்கான செயற்றிட்டம்:-

இச் செயற்றிட்டம் தரம் 5 புலமை பரிசில் தேசிய பரீட்சையினை முன்னிட்டும், சிறந்த இலக்குகளை தெரிவு செய்யக்கூடிய மாணவர்களை உருவாக்கும் பொருட்டும் 2011ல் இருந்து செயற்படுத் தப்பட்டு வருகின்றது.

### IV. மொழி தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் :-

இத்திட்டம் கடந்த 2011ம் ஆண்டு உள்ளூர் வளங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் சிறிதளவான முன்னேற்றமே ஏற்பட்டிருந்தன. இவ்வருடம் (2012) புதிய முறையில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் தரம் 1,2,3,4 வகுப்புக்களை சேர்ந்த மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

* தமிழில் நன்கு மாணவர்களை எழுத வாசிக்க உறையாடப் பயிற்றுவித்தல்.
* ஆங்கிலத்தில் எழுத வாசிக்க பேசப் பழக்குதல்.
* உளவிருத்தி செயற்பாடுகளின் மேம்பாடு.
* சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளின் மேம்பாடு

இது போன்ற பல விடயங்களை அடிப்படையாக கொண்டு இந் நிகழ்ச்சித் திட்டம் இடம் பெற்று வருகின்றது.

### V. பாடசாலையுடன் இணைந்த செயற்பாடு :-

பாடசாலை பௌதீக வளத்தில் அக்கறை கொண்டு செயற்படுவதுடன் மனிதவள பற்றாக்குறை. ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இணைந்து செயற்படுகின்றனர்.

## துளி அருவி - முனைக்காடு

முனைக்காடு கிராமத்தின் அபிவிருத்தி பற்றி சிந்தித்த கிராம முன்னோடிகள் கல்வி அபிவிருத்தியின் அடிப்படையிலேயே கிராம ரீதியான அபிவிருத்தி சாத்தியமாகும் என்பதை உணர்ந்து கல்வி அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியையும் இலக்காகக் கொண்டு 2010.04.15ம் திகதி உருவாக்கிக் கொண்ட அமைப்பே துளி அருவி அமைப்பாகும். முனைக்காட்டில் வசிக்கும் வலிந்துதவு தொண்டர்களும், அக்கிராமத்தைச் சேர்ந்த வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களினதும் கூட்டு முயற்சியால் உதயமானதே இத்துளி அருவி அமைப்பாகும்.

கிராம அபிவிருத்தியை கல்வி அபிவிருத்தி மூலம் துரிதப்படுத்த முடியும் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டுவரும் 'துளி அருவி' அமைப்பானது

I. கல்விப்பணி

II. கலைப்பணி

III. சமூகப்பணி என தன் நோக்கினை விரிவுபடுத்தி செயற்பட்டு வருகின்றது.

**கல்விப்பணி :**

தரம் 9,10,11 மாணவர்களுக்கான மாலை நேர கற்றல், கற்பித்தல் செயற்பாடுளை நடாத்தியும், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களிலும் மேற்படி மாணவர்களை வலுவூட்டி வருகின்றனர். மாதாந்தம் மாணவர்களுக்கு பரீட்சைகளை நடாத்தி பரீட்சை முடிவுகள் பற்றி மாதாந்தம் பெற்றாருடன் பேசி பெற்றாரை விழிப்புணர்வு ஊட்டியும் வருகின்றனர். வருடாந்த பரிசளிப்பு விழாவினை நடாத்தி மாணவர்களை கௌரவித்து வருகின்றனர். பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் அனுசரணையுடன் தமிழ், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் கற்பிக் கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சமூகப்பணி :**

ஆலய முன்றலில் கலை நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றனர். இத்தோடு இளைஞர்களை வலுவூட்டும் வண்ணம் சித்திரை விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியும் வருகின்றது. இடைவிலகல் மேம்பாடு கருதியும் சேவையாற்றுவது இதன் சிறப்பாகும்.

### பழைய மாணவர் சங்கம் - மகிழடித்தீவு

இவ் அமைப்பானது கடந்த வருடங்களில் மாலைநேரக் கற்றல் செயற்பாடுகளை செயற்படுத்தி வந்துள்ளன. இவ்வருடம் இச்செயற்பாடு இடம் பெற்று வருகின்றது. மேலும் பாடசாலை சமூகத்துடன் இணைந்து இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றனர்.

### மட்/கொக்கட்டிச்சோலை இ.கி.மிஷன் வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - கொக்கட்டிச்சோலை

இவ் அமைப்பானது 2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்துள்ளது. பின்னேர வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி செயற்பட்டு வந்த இவ் அமைப்பானது பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக இடைநடுவில் செயலிழந்தது. பின்னர் புதிய நிருவாகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி 2010ம் ஆண்டு 02.15ம் திகதி செயற்பட ஆரம்பித்தது. இவ் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வரும் மாலைநேர வகுப்பானது மாபெரும் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. 2010ம் ஆண்டு 27 மாணவர்களை மாத்திரம் வைத்து ஆரம்பித்த இத்திட்டம் கடந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 17 மாணவர்கள் உயர்தர வகுப்புக்கு செல்லும் வாய்ப்பை வழங்கியிருந்தது.

மேலும் இவ்வமைப்பானது பாடசாலை சார்ந்த பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடன் இச் சங்கமும் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையில் சிரமதானப் பணிகளை செய்தல், விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்தல், பரிசளிப்பு விழா, ஆசிரியர் தின விழா என்பவற்றினையும் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இச்செயற்திட்டத்தின் மற்றுமொரு சிறப்பான விடயம் என்னவெனில் பெற்றார் விழிப்புணர்வு செயற்திட்டமாகும். இதன்போது பெற்றோர்கள் பெரும் பங்கேற்பில் தமது ஒத்துழைப்பை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலையில் மாலைநேர வகுப்பில் தரம் 9,10,11 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தரம் 1,2,3,4 மாணவர்களுக்கான மொழித்தேர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றுமோர் அம்சமாகும். கடந்த வருடம் மேற்படி மாணவர்களின் நலன்கருதி செயற்படுத்தப்பட்டது. மாணவர்களின் இடைவிலகலை முடிந்த வரையில் குறைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

### இளந்தளிர் கல்விக்கூடம் - முனைக்காடு

இவ் அமைப்பானது 2011இல் ஆரம்பிக்கப்பட்டது. இது முற்பட்ட காலங்களில் நாகசக்தி கல்விக் கூடம் என்றேஅழைக்கப்பட்டு வந்தது. தற்போது தரம் - 6-8 மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. சிறுவர்களின் ஆக்கங்கள் அடங்கிய "தளிர்" சஞ்சிகையினை வெளியிட்டுள்ளமை சிறப்பானதாகும். மேலும் பெற்றாறை வலுவூட்டியும் கலை இலக்கியங்களை பேணியும் வளர்ந்து வருகின்றது.

### SEDO - அம்பிளாந்துறை

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி அமைப்பு (SEDO) ஆனது 2011ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகின்றது. மாலைநேரக் கற்றல் செயற்பாடே இதன் முக்கிய நோக்கமாகும். பெற்றாரின் ஒத்துழைப்புடன் செயற்பட்டுவரும் இவ் அமைப்பில் கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்புக்களில் உள்ள பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிகளின் ஒருங்கிணைந்த பங்கேற்பின் மூலமே இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்போது கற்றல், கற்பித்தல், சுயகற்றல் மற்றும் பெற்றோர் விழிப்புணர்வு போன்ற அம்சங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

### நண்பர்கள் ஒருங்கிணைப்பு - அம்பிளாந்துறை

அம்பிளாந்துறை கிராமத்தில் நண்பர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து நீண்ட காலமாக கல்வி மற்றும் சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். தரம் - 5 தேசிய மட்ட பரீட்சைக்காக மாணவர்களை பயிற்றுவித்தல், இலக்கை அடைந்த மாணவர்களை கௌரவித்தல், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை தயார்படுத்தல் செயற்திட்டங்களை சிறந்த வளவாளர்களை கொண்டு செயற்படுத்தி வருகின்றது. இவ் அமைப்பினால் சமூகப் பணிகளும் செயற்படுத்தப்பட்டு வருகின்ற. இதன்படி பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வீதியில் நடப்பட்டிருக்கும் வாகை மரச்சோலை, மற்றும் அம்பிளாந்துறை துறையடியில் நடப்பட்டுள்ள வாகை மரங்கள் என்பன சிறப்பான செயற்பாடுகளாக தேடலில் இடம் பிடித்துள்ளன. இத்தனை செயற்பாடுகளும் அவர்கள் தம் சொந்த உழைப்பின் மூலம் கிடைக்கும் பணத்தினைக் கொண்டே செயற்படுத்தி வருவது தனிச்சிறப்பாகும்.

### நாகர் கல்வி அபிவிருத்தி ஒன்றியம் - பண்டாரியாவெளி

இவ் அமைப்பானது 2010ம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகின்றது. கடந்த வருடம் தரம் 5,6,7,8,9 வகுப்பு மாணவர்களுக்கான மாலைநேரக் கற்றல் செயற்பாடுகளை செயற்படுத்தி வந்துள்ளது. பாடசாலை இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் இதன் பங்களிப்பு சிறந்ததாக காணப்பட்டு வருகின்றது. பெற்றோரின் பங்கேற்புடன் இடம் பெறும் இத்திட்டத்தில் O/L மாணவர்களுக்கான செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை சிறப்பாகும்.

### பழைய மாணவர் சங்கம் - முதலைக்குடா

மேற்படி அமைப்பானது 2011ம் ஆண்டில் இருந்து மாலைநேர வகுப்பை சிறிதுகாலம் நடாத்தியிருந்தது. இவ்வருடம் தரம் 11 மற்றும் A/L மாணவர்களை உள்ளடக்கி பாடசாலை அதிபரின் ஆலோசனையின் பேரில் செயற்படுத்தி வருகின்றது. தம் கிராம முன்னோடிகளை ஒழுங்கு படுத்தி செயற்படுத்தும் இத்திட்டத்தில் பெற்றார்களின் பங்களிப்பு சிறப்பாக இருந்து வருகின்றது. இதை தவிர பாடசாலை இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

### பிரதேச மட்ட அமைப்புக்களின் பணி

இவ்வாறாக கிராமமட்ட அமைப்புக்களின் செயற்பாடுகள் அமைந்திருந்த போதிலும் பிரதேச அமைப்புக்களும் பிரத்தியோக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன்படி 'பாஸ்' அமைப்பு, சங்கமம், கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் போன்ற அமைப்புக்களைக் குறிப்பிடலாம். இவற்றுள் சங்கமமானது மகிழடித்தீவை மத்திய நிலையமாகக் கொண்டு O/L மாணவர்களை பரீட்சைக்கு ஏற்ற வகையில் தயார்படுத்தி வெற்றிகண்டு வருகின்றது. தற்போதைய நிலையில் கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமானது எமது பிரதேசத்தில் கடந்த 2009ம் ஆண்டிலிருந்து கல்விப் பணியினை மேற்கொண்டு வருகின்றது. ஒன்பது மத்திய நிலையங்களை தளமாகக் கொண்டு மாலைநேர வகுப்புக்களுக்குரிய வளவாளர்களை வழங்கியும், பின்னேர வகுப்புக்கள் மற்றும் விடுமுறை நாட்களில் இடம்பெறும் வகுப்புக்களுக்கு வளவாளர்களை வழங்கியும் நிதியுதவி வழங்கியும் செயற்பட்டு வருகின்றது. ஒரு இணைப்பாளரின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டம் மூலம் மாவடிமுன்மாரி, நாற்பது வட்டை, கொல்லநுலை, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, அரசடித்தீவு, கடுக்காமுனை போன்ற இடங்களை மத்திய நிலையமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

மேலும் இவ் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'ஆளுமை விருத்திச் செயற்பாடு' இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதன்போது

* ஆவணப்படக் காட்சிகளின் ஊடாக மாணவர்களை புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.

* கதை சொல்லல் திட்டம் மூலம் எழுத்தாற்றல் திறன், கற்பனைத்திறன் என்பவற்றைப் பேணுதல்.

* சுயகற்றல் மேம்பாடு எனப்பல விடயங்கள் இதில் முக்கியம் பெறுகின்றன. கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் இவ் கல்விச் செயற்பாடுகளுக்காக ஜேர்மன் உதவி நெற் அனுசரணை வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி தொண்டர் அமைப்புக்களின் கல்வி செயற்பாடுகளுக்கு சகல துறை சார்ந்தவர்களின் உதவிகள் கிடைக்கும் போது எமது சமுதாய விருத்தி என்பது நிலைத்திருக்கும் என்பதே இத் தேடலின் சாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனை தென்மேற்குப் பிரதேச கலைக்கழகங்கள் ஒரு பார்வை

– முருகு. தயாநிதி –

கலை, நுண்கலை சார்ந்தவை, நுண்கலை சாராதவை என அமையும். நுண்கலைப் பிரிவில் கட்டிடம் இலக்கியம், ஆடல், கூத்து, இசை, ஓவியம், சிற்பம் முதலியன அடங்குமெனவும் நுண்கலையல்லாதவற்றுள் மந்திரம், கைவினை, விளையாட்டு என்பன அடங்குமெனவும் கூறுவர். கலை பற்றி பலர் பலவாறாகக் கூறியிருந்தாலும் உருசியப் பேராசிரியர் டால்ஸ்ராய் கூறும் விளக்கம் பொருத்தமுடையதாகும். அவர் "கலை மனிதனுடைய செயல்களில் ஒன்றாகும். ஒருவன் தான் அனுபவித்த உணர்ச்சிகளைச் சில வெளிக்குறிப்புக்கள் மூலம் பிறருக்கு வெளியிட்டு அவர்களிடம் இந்த உணர்ச்சிகள் பரவி அவர்களும் அவனைப் போல் அனுபவித்தால் அது கலையாகும். என்றார். கலைஞனது மனமும் அதில் பதிந்த வடிவமுமே கலைவடிவமாகின்றது என்று பௌத்தம் கூற, கலைஞனும் கலையும் ஒன்றுதல் வேண்டும் என்று இந்துக்கள் கூறுகின்றனர்.

இந்திய மக்கள் மிகத் தொன்மையான காலந்தொட்டு நுண்கலைகளைப் பொன்னெனப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர். இக்கலைப் படைப்புக்கள் உலகையே வியக்க வைக்கும் அளவிற்கும் கலைத்துவம் மிக்க அற்புதமான படைப்புக்களாக விளங்குகின்றன. இந்த கலைமரபு ஈழத்திலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. அவற்றுள் நுண்கலைகளுள் ஒன்றாக நாடகக் கலை இப்பிரதேசத்தில் உள்ள கலைக்கழகங்களூடாக வெளிப்படுத்தப் படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கி.பி 1950களுக்கு முன்னர், அதாவது கி.பி.1901ம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பிற்கும், திருகோணமலைக்கும் பல நாடகக் கம்பனிகள் இந்தியாவில் இருந்து வந்து நாடகங்களை மேடையேற்றின. கலையரசு சொர்ணலிங்கம் தனது குரு, பம்பல் சம்பந்த முதலியாரை பின்பற்றி பல நாடகங்களை நாடகங்களை மேடையேற்றுகின்றன. சமுதாயப்பிரச்சினைகள் நாடகங்களின் உள்ளீடாக இருந்தது.

மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளைப் பிரதேசத்தில் கி.பி.1970களில் கலைக் கழகங்கள் தோற்றம் பெற்றன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு கலைக்கழகங்கள் என்று அக்காலப்பகுதியில் எழுந்து நாடகங்களை ஆற்றுகைக்கு உட்படுத்தியது. இக்காலப்பகுதியில் தான் இலங்கையில் நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பமானதோடு, அவைக்காற்றுக் கலைக்கழகங்களும் தோற்றம் பெற்றன. அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடக முயற்சி, கலைக்கழக தமிழ், சிங்கள நாடகக் குழுக்கள், நவீன நாடக அரங்கு என்பன செயற்படத் தொடங்கியது. எனவே, மண்முனை தென்மேற்குப் பிரதேச கலை எழுச்சியும் இப்பிரதேசத்தில் எழுந்த கலைக்கழகங்கள் ஊடகச் சிறப்பும் பெற்றன.

கலைக்கழகங்களின் எழுச்சியினையும் செயற்பாடுகளையும் அந்தந்தக் கிராமங்களில் எழுந்த கலைக்கழகங்கள் அவதானிக்க முடியும்.

## அம்பிளாந்துறை

**1. கதிரவன் கலா மன்றம் (1970)**

நாடகங்கள் சிறப்பாக மேடையேற்றினர். நவீன கதைக்கருக்கள் சமுதாய சீர்கேட்டை மையமாகக் கொண்டு எழுந்தது. வேறு இடங்களில் இருந்து நாடகங்களை மேடையேற்றினர். கல்முனையிலிருந்து 1980ம் ஆண்டு காலப்பகுதியில் கல்முனை சிவா இசைக்குழுவைக் கொண்டு இசை நிகழ்ச்சியைச் செய்தனர்.

**2. இளங்கதிர் கலா மன்றம் (1973)**

பொன்னம்பலப் போடியார் எனும் நவீன நாட்டுக் கூத்தினை மேடையேற்றினர். சிறப்பாகப் பாராட்டப்பட்ட இந்தக் கூத்து பிரதேசத்தில் பல மேடையேறியது. "சுந்தரிக்குச் சுகமில்லை" எனும் சமூக சீர்திருத்த நாடகம் மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குப் பெற்றது. சமூகப் பண்பாடு பிறலாமல் நாடகங்களை மேடையேற்றினர்.

**3. இளஞ்சுடர் - 1980**

அன்று சமூக சீர்திருத்த, நகைச்சுவை, புராண இதிகாச நாடகங்களை மேடையேற்றிய இக்கழகம் 1986ம் ஆண்டு கவின்கலை கலைக் கழகமாகவும், நாவலர் கலைக்கழகமாகவும், முருகுதயாநிதி தோற்றம் பெற்றன.

**4. கவின்கலை கலைக்கழகம் 1986**

இந்தக் கழகம் 1990ம் ஆண்டு கண்ண தாசன் கலைக்கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றுள் ளது. இன்று வரையும் நகைச்சுவை நாடகங்களை சிறப்பாக மேடையேற்றுகின்றனர். அத்தோடு சமூக சீர்திருத்தம் மற்றும் புராண இதிஹாச நாடகங்களையும் மேடையேற்றுகின்றனர்.

தங்கள் கழகத்தில் இருந்து ஒருவர் திருமணம் செய்தால் அவருக்கு 5000 ரூபா வரை பணம் கொடுப்பது வழக்கம். அத்தோடு, பிறந்தநாள், சாமர்த்தியக் கலியாணம் என்பவற்றுக்கு அழைப்பு விடுத்தால் 3000 ரூபா வரை பணம் அல்லது பரிசில் பொருள் கொடுப்பது வழக்கம். ஒருவர் மரணமடைந்தால் அவருக்கு அஞ்சலி விளம்பரம் அச்சிடுவதும் வழக்கமாகும். கிராமத்தின் முன்னோடிகளைக் கௌரவித்து வாழ்த்தியும் வருகின்றனர். தும்பங்கேணி, காந்திபுரம், முனைக்காடு என்று பல இடங்களில் மேடையேற்றியுள்ளனர்.

**5. நாவலர் கழகம் - 1986**

கலை நிகழ்வுகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் இவர்கள் கிராமச் சிரமதானம், கல்வி முன்னேற்றச் செயற்பாடுகள், கிராம முன்னோடிகளை கௌரவித்தல், மரண வீட்டுக்கு உதவுதல் போன்ற நிகழ்வுகளையும் மேற்கொள்கின்றனர்.

**6. நாகேஸ் கலைக்கழகம் - 1985**

நகைச்சுவை நாடகத்தினைத் தடம் புரலாமல் கொண்டு சென்ற கழகம். சமூகக் காசிய நாடகங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றி ருந்தது. 2003ம் ஆண்டு வரையும் சிறப்பாகச் செயற்பட்டனர். அக்காலங்களில் இந்தக் கழகமே கிராமத்தில் சிறப்புப் பெற்றிருந்தது.

**7. சிவாஜி கலைக் கழகம் - 1986**

இக்கழகம் பின்னர் மக்கள் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. சமூக சீர்திருத்தம், புராண இதிகாச நாடகங்களை மேடையேற்றினர். மேலும் விவாத அரங்குகளும் சிறப்புப் பெற்றன. 2007ம் ஆண்டு வரையும் சிறப்பாகச் செயற்பட்டு பின்னருள்ள மூன்று வருடங்கள் நிகழ்வுகளைச் செய்யவில்லை. 2010ம் ஆண்டிலிருந்து வேறு இடங்களில் இருந்து நிகழ்ச்சிகளை எடுத்து மேடையேற்றுகின்றனர். 2007ம் ஆண்டு ஊரில் உள்ள வயது முதிர்ந்த 10 பேருக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்தனர்.

**8. கலைப்பூக்கள் கலைக்கழகம் - 1990**

கலை நிகழ்வுகளை வினைத் திறனுடை யதாக மேடையேற்றிய கழகம் அவற்றுள் புராண இதிஹாசம், சமூக சீர்திருத்தம், வரலாறு, நகைச்சுவை நாடகங்களும், கரகாட்ட நிகழ்வினை மேடையில் ஏற்றி சிறப்புப்படுத்திய கழகம் நாட்டின் அவல நிலைகளைச் சித்தரித்து பல கரகங்கள் கண்ணீர் விதைகளாக மேடையேற்றின. 'வந்த வரத்தென்ன போன போக்கென்ன' எனும் தாளலயம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. 2000ம் ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து நவீன நாட்டுக்கூத்துக்கள் மேடையேறுகின்றன.

கலைக்கு அப்பால் மூத்த கலைஞர்க ளைக் கௌரவித்தல், ஊர்களில் சேவை செய்த பல்வேறு திறந்தாரைக் கௌரவித்தல், மரண வீட்டுக்கு விளம்பரம் அடித்தல், மரணமடைந்த கலைஞர்களின் பிள்ளைகளுக்கு ரூபா 5000 வங்கியில் வைப்புச் செய்தல், கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு ரூ.20000 பெறுமதியான புத்தகத்தினை வாங்கிக் கொடுத்தமை என்று பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றது. 2010ம் ஆண்டு பிரதேச மட்டத்தில் சிறந்த கலைக் கழகமாகத் தெரிவாகிய இக்கழகத்திற்கு மாகாணசபையால் பரிசில்களும், பாராட்டும் வழங்கப்பட்டது. கொக்கட்டிச்சோலை, போரதீவு, பழுகாமம், களுவுத்தன்வெளி, பாலையடிவட்டை, பாண்டிருப்பு, கிரான்குளம், புதூர், கல்லடி என்று பல இடங்களில் நிகழ்வுகளை மேடையற்றியுள்ளனர்.

**9. தங்க நிலா கலைக்கழகம் - 1990**

பக்தி நாடகங்களைச் சிறப்பாக மேடையேற்றிய இந்தக்கழகம், சமூகத்தின் சீர்கேடுகளையும் நாடகத்தின் ஊடாக களைய முனைந்தது. 2007ம் ஆண்டுக்குப் பிறகு செயற்பாடு இல்லாமல் உள்ளது.

**9. கலைஞர் கலைக்கழகம் - 1990**

நாடகங்களைச் சிறப்பாக மேடையேற் றிய இக்கழகம் 2000ம் ஆண்டுக்குப் பிறகு செயற்பாடு இல்லாமல் உள்ளது.

**10. நியுவெல்டன் கலைக்கழகம் - 2008**

கலை நிகழ்வுகளைச் சிறப்பாக மேற்கொண்டது. இன்று செயற்பாடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. முத்தளிக் கலைக்கழகம் - 2010**

தங்கநிலா, கலைஞர், நியுவெல்டன், நாகேஸ் கலைக்கழகங்களின் தலைவர்கள் இணைந்து இக்கழகத்தினை உருவாக்கிச் செயற்படுகின்றனர்.

**12. கண்ணன் கலாமன்றம் - 1994**

கலை நிகழ்வுகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். சமூக பண்பாட்டுத் தளச் செய்திகளை மேடை நாடகங்கள் மூலம் தருகின்றனர். இவற்றுக்கு அப்பால் சமுதாயத்தில் இடம் பெறும் சாமர்த்திய, திருமண, மரண வீட்டு நிகழ்வுகளுக்கு உதவுதல், மரண வீட்டுக்கு பதாதை மற்றும் விளம்பரம் அச்சிடல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.

## அரசடித்தீவு

**1. இளங்கதிர் கலா மன்றம் - 1976**

பாரம்பரியக் கலைவடிவங்களை மேடையேற்றினர். 1976ம் ஆண்டு காலப்பகுதியில் 'நாளை நமதே' எனும் கவியரங்கு காசியானந்தன் தலைமையில் மேடையேறின. இவருடன் திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், செ.குணரெத்தினம் போன்றோர் கவிதை படைத்தனர். மரபுவழிக் கலைஞருடன் நவீன அம்சங்களையும் புகுத்தி கலை படைக்கின்றனர். புராண இதிஹாசக் கதைகளை நவீன முறைகளில் நாடகமாக நடிக்கின்றனர். அண்மைக் காலமாக குரல் பதிவுகளைச் செய்து இறுவெட்டுக்களைத் துணையாகக் கொண்டு மேடை நாடகங்களை மேற்கொள்கின்றனர். இறுவெட்டுக்கல் மூலம் நிகழ்ச்சிகளை மேற்கொள்வதில் விமர்சனங்களும் இருக்கவே செய்கின்றன.

இவர்கள் 1979ம் ஆண்டு வீதி புணரமைத்தது, தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், கலைஞர்களை கௌரவித்தல், மரண வீட்டுக்கு விளம்பரம் அச்சிடல், பிரத்தியேக வகுப்புக்களை ஊக்குவித்தல், விளையாட்டை ஊக்குவித்தல், 2010ம் ஆண்டு பிரதேசத்தில் சிறந்த கலைக் கழகமாகத் தெரிவுசெய்யப்பட்டு மாகாண சபையால் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டது. போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர். களுவுந்தன் வெளி, சொரவணையடி ஊற்று, தும்பங்கேணி, திக்கோடை, கல்லடி, நெல்லிக்காடு, வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலும் மேடையேற்றியுள்ளனர்.

## முனைக்காடு

**1. கலைக்கதிர் கலா மன்றம் - 1970**

கலை நிகழ்வுகளை மேடையேற்றுகின்றனர். சமூக, சமய, பண்பாட்டுத் தளச் செய்திகளை மேடை நாடகங்களின் ஊடாக மேற்கொள்கின்றனர். சமூக சேவைகளையும் ஆங்காங்கே மேற்கொண்டு வருகின்றனர். பொன்னாடை போர்த்தல், நிகழ்வினைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

**2. நாகசக்தி கலா மன்றம் - 2008**

இன்று சிறப்பாக கலையையும், கல்வியையும் ஒரே போர்வையின் கீழ் தருகின்ற கழகம் இது. 2009ம் ஆண்டு இக்கழகம் இளந்தளிர் கலாமன்றம் எனப்பெயர் மாற்றம் பெற்றுள்ளது. கூத்து, நாடகம், கரகம், வசந்தன் நிகழ்வுகளைச் சிறப்பாகத் தருகின்றனர்.

கல்வியை வளர்க்கும் நோக்குடன் தரம் 6 தொடக்கம் 9 வரையுள்ள மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர். மேலும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை 'தளிர்' எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிடுகின்றமை இக்கலாமன்றத்தின் வினைத்திறனை வெளிப்படுத்துகின்றது.

**3. சிவசக்தி இந்து இளைஞர் கலா மன்றம் - 2001**

கலை நிகழ்வுகளை வருடாவருடம் மேடையேற்றுகின்றனர். புராண இதிஹாச, சமூக, நகைச்சுவை நாடகங்களைச் சிறப்பாக ஆற்றுகைக்கு உட்படுத்துகின்றனர்.

## பண்டாரியாவெளி

**1. ஸ்ரீ முருகன் கலைக்கழகம் - 1992**

இக்கழகம் 1997ம் ஆண்டிலிருந்து நாகர் கலைக்கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது மரபு வழி வடமோடிக் கூத்துக்களைச் சிறப்பாக மேடையேற்றுகின்றனர். புராண, இதிஹாச, வரலாற்று நாடகங்களை மரபு மாறாமல் மேடை யேற்றுகின்றனர். சமூக நாடகங்கள், மற்றும் நகைச்சுவை நாடகங்களையும் மேடையேற்றுகின்றனர்.

மரண வீடுகளில் பந்தல் போடுதல், கழகத்தின் உறவினர்கள் மரணமானால் விளம்பரம் அடித்தல், தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களை வழங்குதல், 2009ம் ஆண்டிலிருந்து கிராமங்களுக்காகச் சேவை செய்தோரை நினைவு கூருதல், சிரமதானம் மேற்கொள்ளுதல் என்று பல்வேறு சேவைகளை மேற்கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரதீவு, கொத்தியாபுல, கடுக்காமுனை, முனைக்காடு, பழுகாமம், கொக்கட்டிச்சோலை, என்று பல இடங்களில் நிகழ்வுகளை மேடையேற்றி வருகின்றனர்.

## படையாண்டவெளி

**மாருதம் கலைக்கழகம் - 2009**

இக்கழகத்தினர் கலை நிகழ்வுகளைச் சிறப்பாக மேடையேறுகின்றனர். அண்மைக் காலமாக கலைக் கழகத்தினர் கிராம முன்னேற்றச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலைக்குடா

**1. முத்தமிழ் கலைக் கலா மன்றம் - 1990**

சமூகப் பண்பாட்டுத் தளத்தில் நிகழ்வுகளை மேற்கொள்ளும் இக்கழகம் புராண இதிஹாச, சமூக, நகைச்சுவை நாடகங்களைத் தருகின்றனர். அத்தோடு வில்லுப்பாடல், கரகம், ஏகதந்தனின் ஏழு கேள்வி, விவாதம், இசையறிந்து பாடுதல் போன்ற நிகழ்வுகளையும் மேற்கொள்கின்றனர்.

கல்விக்காகவும் உழைக்கும் இக்கழகம் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் கொடுத்து ஊக்குவித்தல், மரண வீடுகளுக்கு உதவுதல் போன்ற நிகழ்வுகளையும் சிறப்பாக மேற்கொள்கின்றனர்.

**2. காளி கலைக் கழகம் - 2008**

பண்பாட்டுத் தளத்தில் அண்மைக் காலமாக கலை நிகழ்வுகளை மேடையேற்றுகின்றனர் அத்தோடு சமூகச் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.

## பட்டிப்பளை

**வெண்ணிலா கலைக்கழகம் - 2004**

புராண, இதிஹாச, சமூக, நகைச்சவை நாடகங்களை மேடையேற்றும் இவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை ஊக்குவித்தல், பொன்னாடை போர்த்து கௌரவித்தல், 2011ம் ஆண்டிலிருந்து கிராம முன்னோடிகளைக் கௌரவித்தல், பொன்னாடை போர்த்தல், மரண வீட்டுக்கு விளம்பரம் அச்சிடல் போன்ற செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.

## கொக்கட்டிச்சோலை

**ஈஸ்வரா கலைக்கழகம் - 2010**

கிராமியப் பண்பாட்டுத் தளத்தில் நிகழ்வுகளை மேற்கொள்ளும் இக் கழகம் 1988ம் ஆண்டுக்குப் பிறகு நிருவாகம் இல்லாமல் இருந்து 2010ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. பனையறுப்பான், பன்சேனை, காஞ்சிரங்குடா போன்ற இடங்களிலும் நிகழ்ச்சிகளை மேடையேற்றியுள்ளனர். சமூகத்தின் பல பணிகளை சிரமதான அடிப்படையில் மேற்கொள்கின்றனர்.

## மகிழடித்தீவு

**கண்ணகி கலைக் கலா மன்றம் - 2002**

இக் கழகம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் சிவனெறிக்கழகம், அறநெறிப் பாடசாலை, ஆலய பரிபாலன சபை எனும் அமைப்புக்கள் நிகழ்வுகளை மேடையேற்றின. மரபு வழிக் கூத்துக்கள் வருடா வருடம் மேடையேறுகின்றன. கண்ணகியம்மன் கோயில் கதவு திறந்து இரண்டாம் நாள் கூத்து (களரி) இடம் பெறும். சமூகப் பண்பாட்டுத் தளத்தினைச் சித்திரிக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. ஆலய நிருவாகம் மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி பரிசளிப்பு விழாக்களை நடாத்தி வருகின்றது.

## கடுக்காமுனை

**1. ஆதவன் கலா மன்றம் - 1987**

மேடை நிகழ்வுகளைச் சிறப்பாக மேற்கொண்டனர். 'சாந்தியடையாத உள்ளங்கள்' எனும் முதல் நாடகத்துடன் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்புப் பெற்றது. சில காலம் நிகழ்ச்சிகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டது. பின்னர் 2011ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டு நிகழ்வுகளை மேடையேற்றுகின்றனர்.

**2. நியு ஸ்டார் கலைக் கழகம் - 1995**

கலை நிகழ்வுகளை பண்பாட்டுத் தளத்தில் மேற்கொண்டு வரும் இவர்கள் 2010ம் ஆண்டிலிருந்து சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர். இவர்களும் குரல் பதிவுகளைச் செய்து நாடகங்களை மேடையேற்றுகின்றனர். அத்துடன் கலையுடன் கல்வியையும் வளர்க்க முற்படுகின்றனர்.

**3. சக்தி கலைக்கழகம்**

கலை நிகழ்வுகளைச் சிறப்பாக மேடையேற்றும் இவர்கள், அண்மைக் காலமாகச் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

## தாந்தா மலை

**முத்தமிழ் கலா மன்றம் - 1993**

இக்கலாமன்றம் 2009ம்ஆண்டுக்குப் பிறகு அம்மன்கலைக் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. மரபு வழிக் கூத்துக்களை சிறப்பாக களரியில் நிகழ்த்தும் இவர்கள், ஏனைய நாடகங்களையும் கரகங்களையும் மேடையேற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு வருடங்களாக மரபு வழிக் கூத்துக்கள் ஆடப்படவில்லை.

## மாவடிமுன்மாரி

**சிவசக்தி முத்தமிழ் கலா மன்றம் - 2008**

இக்கழகம் பற்றி அறிவதில் சிரமமாக உள்ளது. ஆனால் விநாயகர் கலைக்கழகம் நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதாக அறியமுடிகிறது. விடுதிக்கல் கிராமக் கலைஞர்களும் இக்கழகத்தில் இணைந்துள்ளதாக அறியக் கிடக்கின்றது.

## பாடசாலையும் கலை முயற்சியும்

இன்றைய காலகட்டத்தில் கலைக்கழகங்கள் எனும் பெயரைப் பெறாவிட்டாலும், பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் இணைந்து கலைகளை சிறப்பாக மேடையேற்றுகின்றனர். சடங்கு நிகழும் காலங்களில் ஒரு இரவு நிகழ்ச்சிகளைச் செய்கின்றனர். அம்பிலாந்துறை கலை மகள் ம.வி, கடுக்காமுனை வாணி வித்தியாலயம், அரசடித்தீவு விக்கேஸ்வரா மகாவித்தியாலயம் முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம், முதலைக்குடா ம.வி, மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம், கற்சேனை அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகள் அண்மைக் காலங்களில் நிகழ்வுகளை மேடையேற்றி வருகின்றனர். இத்தகைய முயற்சி பாராட்டுக்குரியது. மேலும் தமிழ்த்தினப் போட்டிக்காக நாடகம், கூத்து, கும்மி, விவாதம், தமிழறிவு, கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல், குறு நாடகம் எழுதுதல் போன்ற நிகழ்வுகளைச் செய்வதினூடாகவும் கலை வளர்க்கப்படுவது சிறப்புக்குரியதே.

## கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள்

கலைக்கழகங்கள் கலையினை வளர்க்க முடியாமல் போனமைக்கான காரணங்கள் பல, அவற்றுள் மேடை அமைப்பதில் சிரமத்தினை எதிர் நோக்கினர். உழவு இயந்திரப் பெட்டியால் மேடை அமைத்து நாடகங்களை ஏற்றுவது சிரமமான காரியமாகும். இந்த மேடையினைக் கூட கழகங்களே அமைக்க வேண்டியிருந்தது. ஒலி, ஒளி, ஒலி வாங்கி என்பன சரியாகக் கிடைப்பதில்லை. நாடகப் பிரதிகளை எழுதக்கூடிய திறன் வாய்ந்தவர்கள் குறைந்து கொண்டு சென்றமை, கலைக் கழக நிருவாகத் தெரிவில் பொருத்தப்பாடு இல்லாமை. மற்றும் அவர்களுடைய தான்தோன்றித்தனமான செயற்பாடு, சமூகச் சிக்கல்களை அதிகமாக நையாண்டிக்கு உட்படுத்துகின்றமை, கலைஞர்கள் நடிப்பதில் அக்கறை காட்டாமல் விடுதல், மக்கள் கலையினை இரசிக்கக் கூடிய மனோநிலையில் இல்லாமல் இருத்தல் போன்ற பல காரணங்கள் குவியப்படுத்தப்பட்டுள்ளதனால் கலைக் கழகங்கள் மீண்டெழுவதில் தடைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இத்தகைய சிக்கல்களுக்குத் தீர்வுகள் கிடைக்குமாக இருந்தால் கலைக்கழகங்களும் கலைகளும் வினைத்திறனுடையதாக மாற்றமடையும்.

ஆரம்பத்தில் கலைக்கழகங்கள் ஊருக்கு ஒன்று எனத் தோற்றம் பெற்று இன்று கலையின் பரிணாம வளர்ச்சியினால் பல கலைக்கழகங்கள் எழுந்துள்ளன. இவற்றுள் சில கலைக்கழகங்கள் இயங்கு நிலையற்று உள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது. ஆரம்பத்தில் எழுந்த கலைக்கழகங்கள் தரவுகளைச் சரியாகப் பேணாததினால் வேறு கலைக் கழகங்கள் எழ வேண்டிய தேவை ஏற்பட்டன. பொதுவாகக் கலைஞர்களுக்கான மேடை அமைப்புமுறை இல்லாத குறைபாடு கிராமங்கள் தோறும் நிலவுகின்றது. அத்தோடு 15 வருட காலமாக இப்பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவினால் கலை நிகழ்வுகள் எதுவும் வைக்கப்படவுமில்லை. பிரதேச பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்கக் கூடிய ஆவணங்கள் பாதுகாக்கப்படவுமில்லை. புத்தகமாக வெளி வரவுமில்லை. 1997ம் ஆண்டு மகிழை மகேசன் அவர்களின் அயராத முயற்சியினால் வெளிவந்த கொம்பு எனும் சஞ்சிகை தவிர இப்பிரதேச செயலக வரலாற்றில் எதுவித முயற்சியும் மேற்கொள்ளப்படாதது யாருடைய குறைபாடு? இவ்வாறான நிலை காணப்படும் போது கலைக்கழகங்கள் கலை, சமூக செயற்பாடுகளுக்கு அப்பால் பிரதேசத்தின் தனித்தன்மையினை வெளிக்காட்டக் கூடிய ஆவணங்களைப் பாதுகாக்க பதிப்பு முயற்சியில் ஈடுபட வேண்டிய கட்டாயக் கடப்பாடும் உள்ளது. பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் செயல்நெறி பிரதேசத் தேடலின் திறவு கோலாக அமைந்திருப்பது இப்பிரதேசத்தின் ஆய்வுக் கண்ணைத் திறந்து, அகலப்படுத்தியிருப்பது போற்றுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

சின்னஞ்சிறு வயதில் எனக்கு நிலாவைக் காட்டி
சோறூட்டி விட்டவள் என் அம்மா
பாட்டுக்கள் பாடி கதைகள் சொல்லி – மண்
பாசமூட்டித் தூங்க வைப்பவள் என் அம்மா
என் அன்புத்தாயை விட
சிறந்தது ஒன்றுமேயில்லை
எல்லாமே அம்மா – இந்த
அகிலமும் அம்மா

பத்துமாதம் சுமந்து பெற்றவள் என் அம்மா
பாராட்டி சீராட்டி வளர்த்தவள் என் அம்மா
என்னைக் கண்கலங்காது நாள் தோறும்
சீராட்டி வளர்த்தவள் என் அம்மா
ஆசைகளைக் காட்டி பாசத்தைக் காட்டும்
என் அன்புத் தாயை விட
எனக்குச் சிறந்த செல்வம் ஒன்றுமேயில்லை

பே.யோகினி (தரம் – 11)
மட்/முனைக்காடு விவேகானந்தா
வித்தியாலயம்

# சிந்திப்போம்

அ.தேகதாஸ்
முதலைக்குடா

சிந்திக்க வேண்டுமே - நாம்
சிறக்க வேண்டுமே

சுற்றித் திரியும் இவர்கள் யாரோ
அறிவொளி வீசும் நம் மண்ணில்

எதற்கு வேண்டாத வேலை
பள்ளிக் கூடப் படிப்பை
பாதியிலே விட்டு விட
பார்ப்பதற்கு யாருமில்லை



பல அறிவுரை பேசும் நாம்
கண்டும் காணாதவர் போல்
கல்வியை இடை நடுவே விட்ட
நாளைய தலைவர்களை
வீட்டு வேலைக்கு என்று
வியாபாரம் பேசி
வெட்டவும், கட்டவும், கழுவவும்
ஏன் இன்னும் பல............

ஏழைச்சிறுவர் அறிவை
உயர்த்தவே பல நிறுவனம்
இன்னும் பலன் இல்லையே
இவர்கள் வாழ்க்கையில்

ஏன் மௌனம்
ஏன் பொறுமை
பொங்கி எழுவோம்
சிறுவர் கல்வியை உயர்த்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் பார்வையினால் சமூக-மாற்றம்

பொன்னுத்துரை – வித்தியா
தரம் – 11, மகிழடித்தீவு.

நாளுக்கு நாள் உலகம் மாறுகிறது. இவற்றுள் சனத்தொகை மாற்றம், சுற்றாடல் மாற்றம், மக்களின் தேவை, நவீன தொழிநுட்ப உபகரணங்கள் போன்றவையாகும். இதனால் 'இன்றைய உலகம் நாளை வேறுவடிவில் காட்சி யளிக்கும்' வண்ணம் மாற்றமடைந்துள்ளது. இவ்வாறு மாறுவதால் சமூகம் மாற்றமடைந்துள்ளது.

தொழிநுட்பம் எமது மண்ணுக்கு புதியவை. உதாரணமாக முதலில் மருந்திற்காக பல வகையான மூலிகைத் தாவரங்களை பயன்படுத்தி நோய்களை சுலபமாக்கினார்கள். ஆனால் தற்போது தொழிநுட்ப கண்டுபிடிப்புக் களினால் வைத்தியசாலை கட்டி புதிய புதிய மருந்து வகைகளை எல்லாம் கண்டுபிடித்து புதிய இயந்திரங்களை எல்லாம் உருவாக்கி ஒரு நொடிப் பொழுதில் நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கின்றனர்

இது மட்டுமல்ல முதலில் விவசாயம் செய்வதற்கு முதல் நிகழ்வாக உழவு செய்வர். அதற்கு மாட்டில் ஏர் பூட்டி உழவு செய்வர். பின் நாற்றுநட்டு பசளையாக எருமைசாணம் போன்றவற்றை இட்டும் கிருமிநாசினிகளாக சாம்பல், வேப்பை இலைச் சாறு என்பவற்றை பயன்படுத்தினர். கையால் அறுவடைசெய்து மாடுகளால் சூடு மிதிப்பர். தற்போது உழவு இயந்திரத்தால் உழவடித்து பலபல வகையான பசளைகளை இடுவர். பலவகையான கிருமிநாசினிகளையும் இட்டு வேளாண்மை விளைந்ததும் ஒரு நொடிப்பொழுதில் அறுவடை செய்து நெல்லைப் பணமாக மாற்றுகிறார்கள். இவ்வாறு இலகுவாக வேளாண்மை செய்கின்றமைக்கெல்லாம் காரணம் தற்போதைய தொழிநுட்ப வளர்ச்சி தான்.

நமது சமுதாயம் பரந்த அளவில் இன்னும் அறிவியல், தொழில் நுட்பச் சிந்தனையின் அணுகுமுறையின் அறிவினை பெறவில்லை நம்பிக்கையையே அடிப்படையாக வைத்து செயல்பட வேளாண்மை நாகரீக வரம்புகளைத் தாண்டி வெளிவரவில்லை. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றன. அவற்றுள் சில பிரகாசமாகவும் இருக்கலாம். ஆனால் அவை பரவலாக எங்கும் ஒளி வீசும் முழு நிலவு போன்று இல்லை.

தொழிநுட்ப வளர்ச்சியினால் கணினி, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, தொலைபேசி, மற்றும் கேஸ் அடுப்பு போன்ற பல உபகரணங்களை பயன்படுத்தி வேலைகளை இலகுவாக செய்து வாழுகின்றனர்.

உதாரணமாக கணனியை எடுத்துக் கொள்வோமானால் முதலில் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பர். தற்போது 'ஆங்கிலமும் கணனியும் கண்ணெனத்தகும்' என்பர். இதற்கு காரணம் தொழிநுட்ப வளர்ச்சி தான். கணனியால் பல செயல்களை உடனே செய்து நேரத்தை மீதப்படுத்திக் கொள்கின்றனர்.

அடுத்ததாக குளிர்சாதனப் பெட்டியை எடுத்துக் கொண்டால் குளிர்சாதனப் பெட்டியால் மக்கள் பல வகையில் நன்மை அடைகின்றனர். உதாரணமாக உணவுகளை பழுதடையாமல் வைத்து நீண்டநாட்களுக்கு பயன்படுத்த முடியும். மற்றும் நீரை வெப்பமான காலத்தில் குளிராக பருகுவதற்கும் உதவும். இவ்வாறு நன்மை கிடைக்கும் பொழுதும் தீமையும் கிடைக்கின்றது. எவ்வாறு என்றால் குளிர்சாதனப்பெட்டியால் வெளிவரும் குளோரோபுளோரோ காபனால் ஓசோன் படை ஓட்டை அடைகின்றது. இதனால் நோய்களை மக்கள் அனுபவிக்கின்றனர்.

இது மட்டுமல்லாமல் போக்குவரத்துக்கு பல வாகனங்களை பயன்படுத்துகின்றனர். இவ்வாகனங்களை பயன்படுத்துவதற்கு காரணம் தொழிநுட்ப வளர்ச்சி தான். இதனால் போக்குவரத்தை இலகுவாக செய்கின்றனர். அதே வேளை வாகனங்களால் வெளிவரும் புகையினால் காற்று மாசடைகிறது. இதனால் மக்களுக்கு தீமை ஏற்படுகின்றது.

இவ்வாறான பல தொழிநுட்ப சாதனங்களால் சமூகம் பெரியளவுக்கு மாற்றமடைந்துள்ளது. அதேவேளை இதனால் தீமைகளும் ஏற்படுகின்றது. தீமை ஏற்படாத வண்ணம் தொழிநுட்பத்தை நமது நாட்டில் பரப்புவது எமது தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகப்போடி அண்ணாவியார் – சில பதிவுகள் –

செல்வி. க. ஜெகதா

மக்கள் தங்கள் எண்ணங்களையும் சிந்தனைகளையும் வாழ்வியல் நெறிமுறைகளை யும் கலை அளிக்கைகளினூடாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். கூத்து இவ்வகையில் முக்கியமானது. இதில் அண்ணாவியார் பாத்திரமே முதன்மையானது. அண்ணாவியம் என்பது பல்துறை ஆற்றல் ஆழுமைகளின் சங்கமம். இதன் தகைமையை அந்தந்தச் சமுதாயங்களே அடையாளம் காணுகின்றன, அங்கீகரிக்கின்றன. இன்று கூத்துக்கலை வடிவமானது சமூக ஒன்றிணைவிற்கான அரங்க வடிவமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கூத்துக்கலையை முன்னெடுத்து வழிநடத்திய பாலகப்போடி அண்ணாவியார் பற்றிய சில பதிவுகள் இங்கே தரப்படுகின்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் வாவி அருகிலுள்ள கன்னங்குடா என்னும் பழம்பெரும் பகுதியில் 1944ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ம் திகதி சின்னப்போடி மாரிமுத்து தம்பதியினருக்கு மகனாக பாலகப்போடி பிறந்தார். சிறுவயதிலிருந்தே இவர் கூத்துக்கலையில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இதனால் பக்கத்து வீட்டுக் கலைஞரான கணபதிப்பிள்ளை பாடி எழுதுகின்ற போது பாலகப்போடி அண்ணாவியார் அவற்றை அவதானித்துக் கொண்டிருப்பார். அதனை அடிப்படையாகக் கொண்டே மத்தளம் அடிக்கப் பழகியிருக்கிறார். அதன் பிறகு இவர் நாகமணிப்போடி அண்ணாவியாரை தனது குருவாகக் கொண்டு வடமோடி - தென்மோடி கூத்துப்பாடல்கள், ஆட்ட நுணுக்கங்கள், தாளக்கட்டுக்கள் போன்றவற்றைக் கற்றிருக்கின்றார்.

பாலகப்போடி அண்ணாவியார் 1965ம் ஆண்டு காலப்பகுதியில் முழுமைபெற்ற அண்ணாவியாராக திகழத் தொடங்கியுள்ளார். அவர் கூத்துக்களைப் பழக்கியது மட்டுமல்லாமல் கூத்துக்களை ஆடியும் உள்ளார். 17ம், 18ம் போரில் விஜய கண்ணன் பாத்திரத்திற்கும் சாம்பேந்திரன் நாடகத்தில் பிராமணர் பாத்திரத்திற்கு ஆடியுள்ளார். பாலகப் போடி அண்ணாவியார் வடமோடி, தென்மோடிக் கூத்துப் பாடல்களை அதன் மெட்டு வேறுபாடுகளிற்கு ஏற்ப படிக்கும் தன்மை கொண்டவராகவும் ஆடுபவர்களின் கால் தாளத்திற்கு ஏற்ப மத்தளம் அடிப்பவராகவும், பாடல்களின் தொனிவேறுபாடுகளுக்கு ஏற்ப மத்தளம் அடிப்பவராகவும் திறமை பெற்றிருந்தார்.

பாலகப்போடி அண்ணாவியார்

1. குருக்கேத்திரன் போர்
2. கிராம நாடகம்
3. பவளக் கொடி நாடகம்
4. விராடபர்வம்
5. சித்திரசேனன் சண்டை
6. 17ம், 18ம், போர்
7. பப்பிரவாகன் நாடகம்
8. லவகுசா நாடகம்

என்னும் வடமோடிக் கூத்துக்களையும்

1. அல்லி நாடகம்
2. வாள பீமன் நாடகம்
3. அலங்கார ரூபன் நாடகம்
4. அனுருத்திரன் நாடகம்
5. புவனேந்திரன் நாடகம்
6. சாரங்கரூபன் நாடகம்
7. மயில் இராவணன் நாடகம்
8. சாம்பேந்திரன் நாடகம்
9. மதுர வாசகன் நாடகம்
10. செட்டி வர்த்தனன் நாடகம்

என்னும் தென்மோடிக் கூத்துக்களையும் பழக்கியுள்ளார்.

பாலகப்போடி அண்ணாவியாரைப் பற்றி உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழுவின் 'மூன்றாவது கண்' வெளியீடாக வந்த ப.ராஜதிலகன் எழுதிய நூலில் குறிப்பிடப் பட்டுள்ள பின்வரும் கூற்று அவரது செயற் திறத்தின் தன்மையினை தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

"கன்னங்குடாக் கிராமத்திலே பல அண்ணாவிமார்கள் உள்ளனர். அவ் அண்ணாவிமார்களுள் சிறப்பானவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்படுபவரே பாலகப்போடி அண்ணாவியார் ஆவார். இவர் காலணித்துவம் கட்டமைத்த சிந்தனைகளுக்கு உட்படாது அவற்றில் இருந்து விடுபட்டு பாரம்பரிய கலைவடிவங்களையும் பாரம்பரிய விவசாய முறைகளையும் பாரம்பரிய சமூகக் கட்டமைப்பு முறைகள் என பலதரப்பட்ட விடயங்கள் மூலமாக எமது அடையாளங்களையும் பண்பாட்டையும் பாதுகாத்து செயற்பட்ட அண்ணாவியாராக விளங்கினார்."

பாலகப்போடி அண்ணாவியாரின் திறமைகளைப் பாராட்டி அவருக்கு விருதுகளும் கௌரவங்களும் அளிக்கப்பட்டன. 2000ம் ஆண்டு கலாவித்தகர் விருதும் 2006ம் ஆண்டு கலாபூசணம் விருதும் வழங்கப்பட்டது. பல வகையிலும் சிறப்புப் பெற்று விளங்கிய இவர் தனக்கென தனித்துவமான முத்திரையைப் பதித்து 2011ல் உலகை விட்டுப் பிரிந்தார். இவரது பணி எப்போதும் போற்றப்படும்.

## வைகரையில் ஓர் குரல்

வைகறையில் தொண்டை கிழியக் கத்தி
தட்டி துயிலெழுப்பி
என்னைப் போலவே உன்னையும்
உறவுக்காய் இரை தேட வைத்தேன்
உறவுக்காய் இரை தேடி வை
தேடாமல் உறங்கிடாதே

உடலோடு உயிர் சில காலம் என
உணர்ந்து உணர்வோடு உலகறிய
நீ தள்ளாடி நடக்க முன்னே
உறவுக்காய் இரை தேடி வை
தேடாமல் உறங்கிடாதே

உன்னால் முடிந்தளவு
உறவுக்காய் இரை தேடி வை
தூறும் மழைத் துளி போல்
தூவி விடு பூச் செடிகள் கூட
மொட்டுக் கண்களை அகலத் திறக்கட்டும்
உறவுக்காய் இரைதேடி வை
தேடாமல் உறங்கிடாதே.

ச.பார்த்தி
கல்லூரி

## விழித்தெழு மனிதா!



தரணியிலே தனிமையில் பிறந்த மனிதா
தகுதி பாராட்டி தனிமைப்படுத்தும்
குணம் தான் ஏன் உனக்கு


சுவாசிக்கும் காற்றுத் தொடக்கம்
செல்ல இருக்கும் சுடுகாடு வரை
எல்லோர்க்கும் ஒரே இடம் தான்
- என்பதை மறந்து விடாதே

நீ வாழ்வில் வளங்கள் பல - சேர்க்கலாம்
ஆனால் அதை வாழ வழி
இல்லாதவர்களுக்கு - வழங்கு
அப்போதே உன் வாழ்வின் அர்த்தம் புரியும்

ப.பிறியாந்தி
தரம் - 13 கலைப்பிரிவு
மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோபா. பாலசுந்தரம்
கிழக்குப்பல்கலைக்கழகம்

ஒரு சமூகத்தின் முன்னேற்றம், சமூக நகர்வு, சமூக வளர்ச்சி அபிவிருத்தி போன்ற பல விடயங்களுக்கும் பொதுவாகவும், அடிப்படையாகவும் அமைவது கல்விதான் என்பதை எவரும் மறுக்க முடியாது. யுனெஸ்கோவின் பிரகடனத்தின்படி அனைவருக்கும் கல்வி என்பது (Education for all) ஒரு நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் பொருந்தும் வகையில் கட்டாயக் கல்வியை வழங்குவதில் பாடசாலைகளின் பங்களிப்பு அளப்பரியதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு கட்டாயக் கல்வி அதனை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றுக்கான தீர்வுகள், முடிவுரை என்பவற்றை உள்ளடக்கியதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கட்டாயக் கல்வி (Compulsary Education)**

கட்டாயக் கல்வி என்பது 5-14 வயதுக்கிடைப்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் பெற்றுக் கொள்ளும் கல்வியாகும். இருந்த போதிலும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் (2003) 122 முன்மொழியப்பட்ட பரிந்துரையின் படி 5-16 வயது வரையான பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி கட்டாயக் கல்வி எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1939ம் ஆண்டின் 31ம் இலக்கக் கல்விச் சட்டம் 5-14 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளின் கல்வியை கட்டாயமாக்கியதுடன் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தவறிய பெற்றோர்களைத் தண்டனைக்குட்படுத்தியது. 1943ம் ஆண்டு வரையும் கட்டாயக் கல்வி எழுத்தில் மட்டும் தான் இருந்ததே தவிர அமுல் செய்யப்படவில்லை. அதனைத் தொடர்ந்து 1978ல் தான் கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்தும் பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. பின்னர் 1997ல் தேசிய கல்வி ஆணைக்குழுவானது கல்வியை கட்டாயமாக்குவதற்கு ஒழுங்கு விதிகள் திட்டவட்டமாக ஆக்கப்பட வேண்டும் என விதந்துரை செய்ததற்கமைய அமைப்பு ரீதியான கட்டாயக் கல்விச் சட்டம் விசேட வர்த்தக மானியில் 1003/5 இலக்கம் கொண்டு 2007ம் ஆண்டு November மாதம் 25ம் திகதி பிரசுரிக்கப்பட்டு, 1997 December ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1998 January 1ம் திகதி தொடக்கம் ஒழுங்கு விதிகள் நாடு முழுவதிலும் அமுல் நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் முழுமையான வளர்ச்சிக்குக் கல்வி எல்லோருக்கும் கொடுக்கப்படல் வேண்டும். அதிலும் 5-14 வயதில் பெற்றுக் கொள்ளும் கல்வியானது தொடக்கக்கல்வி (Elementary Education), தொழிற்கல்வி (Vocational Education), மேல் நிலைப் பள்ளிக் கல்வி (Higher Education), திறந்த வெளிக்கல்வி (Open University and Distance Education) என்பவற்றுக்கு அடிப்படையாகவும், அத்திவாரமாகவும் அமைவதால் இப் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகத்தினர் அனைவரும் அதற்குரிய வழியை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மாணவர்கள் அக் கல்வியைக் கற்றுக்கொள்வது அவசியமாகும்.

**பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள்**

மண்முனை தென்மேற்குக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகள் கட்டாயக் கல்வியை அமுலாக்கவதில் பல்வேறு வகையான சவால்களை எதிர்நோக்குகின்றன. அவை பாடசாலைச் சூழல், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன.

**மாணவர்கள் தொடர்பானவை**

மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமூகமளிக்கும் போதே கற்றல் கற்பித்தலில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இப்பிரதேசப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீதம் குறைவாகவுள்ளது. குறிப்பாக பருவகாலத் தொழிலின் போது பாடசாலைக்கு வராமை, மாணவர்கள் கல்வி மீது அக்கறை செலுத்தாமை, மாணவர்களுக்கு அடிக்கடி சுகயீனம் ஏற்படுதல், வறுமையின் நிமிர்த்தம் தந்தையுடன் பிள்ளைகள் கூலி வேலைக்குச் செல்லுதல், பிள்ளைகளுக்கு கல்வி பற்றிய முன்மாதிரி இன்மை, மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத நிலைமையில் உள்ளமை, மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது கற்றலுக்கு தயார் நிலையுடன் வராமை, பாடசாலைகளில் வழங்கப்படும் வீட்டு வேலைகளை உரிய தினத்தில் பூர்த்தி செய்து ஒப்படைக்காமை, வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்கள் குறைந்தளவே ஆர்வம் செலுத்துதல், மாணவர்கள் வீடுகளில் சுயமாகக் கற்காமையினால் பாடத்தின் மீதான வெறுப்பு அதிகமாகக் காணப்படல். இதனால் காலப் போக்கில் அதிகரித்த மாணவர் இடைவிலகலுக்கு வழிவகுக்கின்றது. இவ்வாறான மாணவர்கள் சார்பாக பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதால் பாடசாலைகளில் தொடர்ச்சியான கற்பித்தலை மேற்கொள்ள முடியாமல் அதிபர், ஆசிரியர்கள் பெரும் சவாலுக்கு முகம் கொடுக்கின்றனர்.

**பாடசாலைச்சூழல், ஆசிரியர்கள் தொடர்பானவை**

கற்றலென்பது மனித வாழ்க்கையில் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை இடம் பெற்றாலும் முறையாக வகுக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு கல்வியை வழங்கும் நிறுவனம் பாடசாலையென்றால் அது தவறாகாது. இவ்வாறு பிள்ளைகளிடம் கற்றலை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பாடசாலைகளே சில வேளைகளில் அவர்களின் கற்றலுக்கு பாதகத்தை விளைவிப்பதாக அமைந்து விடுகின்றது. இந்தவகையில் பாடசாலையில் நிலவும் மகிழ்ச்சியற்ற கற்றல் சூழல், பாடசாலைச்சூழல் மாணவர்கள் விரும்பும்படியாகக் காணப்படாமை, பாடசாலைகளில் போதியளவு பௌதீக வளங்கள் இல்லாமை, நவீன முறையிலான கற்றல் கற்பித்தலுக்குரிய சாதனங்கள், ஆய்வுகூட வசதிகள் இல்லாமை, பெரும்பாலான பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்குழு கட்டாய வரவுக் குழு அமைக்கப்பட்டிருந்தாலும் ஒரு சில பாடசாலைகளில் இக்குழுக்கள் அமைக்கப் படாமையும் சில பாடசாலைகளில் இவை வினைத் திறனுடன் செயலாற்றாமையும் பிரச்சினையாகும்.

இதே போல் பிரதான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ளமை. (குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்) இப்பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், பணியாற்றும் அதிபர்களில் பெரும்பாலானோர் நகர்ப்புறங்களிலிருந்து நாளாந்தம் வருகை தருபவர்களாக உள்ளதால் மாணவர்கள் பற்றிய பின்புலத்தை அறியாதவர்களாக உள்ளனர். இதனால் மாணவர்களின் அறிவு, திறனுக்கேற்ப கற்றல், கற்பித்தலை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

இப்பிரதேசப் பாடசாலைகளில் முன் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் அதிகமாகக் காணப்படுவதோடு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர் மாணவர் உறவுநிலை திருப்திகரமாக அமையாதுள்ளமையும் பிரச்சினையாகும். அத்தோடு கட்டாயக் கல்வி வயதுக் குட்பட்ட மாணவர்களுக்குரிய முறையில் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் கையாள முடியாதுள்ளமை. பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைப்பது கடினமாக உள்ளமை போன்ற பல்வேறு வகையான சவால்களுக்கு கட்டாயக் கல்வி அமுலாக்கத்தின் போது முகங் கொடுக்கின்றனர்.

## பெற்றோர் தொடர்பானது

கல்வி விருத்திக்குப் பொரளாதாரம் பின்னணியாக அமைகிறது. இப்பிரதேசத்தைப் பொறுத்த வரையில் கடந்த 30 தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம், அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இடப்பெயர்வுகள் போன்றவற்றால் மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் தாக்கம் இன்றும் கூட பாதிப்பை ஏற்படுத் துகின்றது. இதனால் பெற்றோர்கள் போசாக்கான உணவு, மருத்துவ வசதிகள், சீருடை என்பவற்றை உரிய நேரத்தில் வழங்காமை, பிள்ளைகளின் பாடசாலைத் தேவைகள் நிறைவேற்றப்படாமை, தேவையான பாடசாலை உபகரணங்கள், கணிப்பீட்டுப் பொருட்கள், பரீட்சைக் கட்டணங்கள் என்பவற்றை வழங்குவதில் பெற்றோர்கள் கவனம் செலுத் தாமையினால் ஆசிரியர்களின் தண்டனைக்குப் பயந்தும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் விடுவதால் கல்வி வழங்குவதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

அத்தோடு பெற்றோருக்கு பாடசாலைக கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மை, கல்வி பற்றியும், பிள்ளையின் எதிர்காலம் பற்றியும் பெற்றோரின் அக்கறையீனம், குடும்ப வறுமை காரணமாக பிள்ளைகளை பருவகால தொழிலில் ஈடுபடுத்தல், கல்விக்கு முன்னுரிமை வழங்காமை, குடும்பத்தலைவரிடம் காணப்படும் குடிப்பழக்கம் போன்றவற்றால் பிள்ளைகளின் கற்றல் பாதிப்படைகின்றது. இதனால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் விடுவதால் கட்டாயக் கல்வியை அமுலாக்குவது பெரும் சவாலாக அமைகின்றது.

## அவற்றுக்கான தீர்வுகள்

கட்டாயக் கல்வியை அமுலாக்குவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களில் மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமூகமளிக்காமல் இருப்பதும், மாணவர்களில் பலர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படுகின்றமை பெரும் சவாலாகும். இதற்கு பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு, பெற்றோரை பிள்ளைக ளின் பால் அக்கறை உள்ளவர்களாக இருப்பதற் கான வழிமுறைகளையும் எடுத்து ரைத்தல் வேண்டும். அத்தோடு மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புக்களிலிருந்து தொழித்திறன் விருத்திக்கான பிரத்தியேக செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதோடு, ஒவ்வொரு ஆசிரியர்களும் 2 பிள்ளைகள் வீதம் பொறுப்பெடுத்து அவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு பாடசாலை செல்வதற் கான ஊக்கம் அதிகமாகக் காணப்படும் போதே கட்டாயக் கல்வியை வழங்குவதில் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்தவகையில் மாணவர்கள் இடைவினை கொள்ளும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு கற்பித்தல் செயற்பாட்டின் போது நவீன கற்பித்தல் துணைச் சாதனங்களை யும் பாடத்துக்கேற்ற விதத்திலான கற்பித்தல் நுட்பங்களையும் கையாளல் வேண்டும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் போது ஆசிரிய மாணவர் உறவு திருப்திகரமாக அமையும் போதே கற்பித்தல் வெற்றி பெறும். இப்பிரதேச பாடசாலைக்கு வருகை தரும் ஆசிரியர்கள் நகர் பிரதேசத்திலிருந்து வருவதனால் சமூகத்தை பாடசாலைக்குள் உள்ளீர்க்கும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படவதுடன் கற்பித்தல் செயற்பாட்டை பாடத்திட்டத்தின் அடிப்படையிலிருந்து அப்பாற் சென்று மாணவர்களது அறிவாற்றலுக்கு அமைவாக கற்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, ஆசிரியர் மாணவர்கள் சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்கான நேர அட்டவணையை முன்கூட்டியே தயாரித்தல் வேண்டும்.

பாடசாலையுடன் சமூக இடைத்தொடர்பு கள் அதிகரிக்கும் போதே பாடசாலையின் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகவும், அதன் மூலம் சமுதாயம் தரமான வினைத்திறனை அடைய முடியும். இப்பிரதேசப் பாடசாலைகளுக் கிடையிலான பெற்றோரின் இடைத்தொடர்பு குறைந்தளவே காணப்படுகின்றது. இதற்கமைய பாடசாலையுடன் பெற்றோரை இணைப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல், பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் பெற்றோர்களை பங்காளியாக்குதல், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

பிரதான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்துக் கொள்ளும் முகமாக தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதுடன், ஓய்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற திறமையான ஆசிரியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல், அவர்களுக்கு கல்விக்கு ஒத்துழைப்பு வழங்கும் Unicef, Save the Children, World Vision போன்ற அரசுசாரா







நிறுவனங்களின் உதவியை இயன்ற வரை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

மண்முனை தென்மேற்குக் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட கல்விப் பணியாளர்களுடன் சுமூகமான உறவைக் கையாண்டு மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களையும் கற்பித்தல் சாதனங்களையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கட்டாயக் கல்வி குழு மூலம் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் பெற்றோர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளல், பாடசாலைகளில் வழிகாட்டல், ஆலோசனைச் சேவைப் பிரிவை நிறுவி மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல் போன்றவாறான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் மாணவர்களை பாடசாலைக்கு தொடர்ச்சியாக சமூகமளிக்கச் செய்ய முடியும்.

## முடிவுரை

உலக சந்தைப் போட்டி நிலையை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றாக இன்றைய கல்வியின் போக்கு காணப்படுகின்றது. இதனால் அனைவரும் கல்வியை கற்றுக்கொள்வது அவசியமாகும். மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெற்றோரின் வறுமை நிலை, அக்கறையீனம், பிள்ளை கற்பதற்கான ஊக்குவிப்புக்களை வழங்காமை போன்றவற்றால் பிள்ளைகள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு செல்வதற்கு தடையாக உள்ளது. அதோ போல் பாடசாலைகளில் போதுமானளவு பௌதீக, மனித வளங்கள் இல்லாமை, கட்டாயக்கல்வி வயதுக்குரிய முறையில் திறமையாக கற்பித்தல் நுட்பங்களையும், செயற்பாடுகளையும் கையாள முடியாதுள்ளமை போன்றவற்றால் ஆசிரியர்களும், மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் பல பிரச்சினைகளை கையாளுகின்றனர். இதனால் பாடசாலைக்குச் செல்லாத மாணவர் தொகை அதிகரித்தும் காணப்படுகின்றது.

இந்த வகையில் பெற்றோர்கள் கல்வி பற்றிய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதோடு, ஆசிரியர்கள் பிள்ளைகள் விரும்பும் படியான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு, கல்விப் பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் போன்றோர் பிள்ளையின் சேவையை இனங்கண்டு அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் வறுமை நிலையிலுள்ள பிள்ளைகளும் கட்டாயக் கல்வியைப் பெற்றுக்கொள்வதோடு தனிமனித விருத்தி, சமூக விருத்தி என்பனவும் ஏற்படும். இவ்வாறான தீர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் செயற்படும் போது கட்டாயக் கல்வியை அமுலாக்குவதிலுள்ள சவால்களை வெற்றி கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2011 மண் கமழும் மங்கல விழா

## ஏற்படுத்தியிருக்கும் மாற்றமும் மாற்றத்திற்கான சூழலும்

உதவி. நெற்றிலிருந்து

கலையும், இலக்கியமும் சமூகத்தின் பண்பாடு - மொழி - கலாசாரம் என்பவற்றின் மாறாத இயங்குதலுக்கும் வரலாற்றுப் பதிவுகளுக்கும் அவசியமானவையாகும். இவை சமூகத்தில் மாற்றத்தையும் மாற்றத்திற்கான சூழலையும் ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகும். அதுவும் கிராமியச் சூழலில் அதன் தாக்கம் அதிகமாகவே அமையும். கடந்த 27.03.2011ம் திகதி படுவான்கரைப் பிரதேசத்தைச் சார்ந்த பட்டிப்பளைப் பிரதேசத்தில் பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் மண்கமழும் மங்கல விழாவினை நடாத்தியது. இதில் ஆய்வரங்கு, மெல்லப்பறித்தல் நூல் வெளியீடு, கலைஞர் கௌரவிப்பும் விருது வழங்கலும், கலை நிகழ்வுகள் என நான்கு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இவ்விழா இப்பிரதேசத்தில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றமும் மாற்றத்திற்கான சூழலும் பற்றியதாகவே இங்கு நோக்கப்படுகிறது.

படுவான்கரைப் பிரதேசத்தில் மூன்று பெரும் பிரதேசப் பிரிவுகள் உண்டு. அவற்றுள் ஒன்றே பட்டிப்பளைப் பிரதேசப்பிரிவு. பெரும்பாலும் விவசாயத்தை நம்பி சீவியம் நடாத்துகின்ற மக்கள் வாழ்வதனால் இப்பிரதேசத்தை விவசாயக் கிராமங்கள் என்றும் அழைப்பர். மட்டக்களப்பின் ஆன்மாவைத் தேடவேண்டுமாயின் படுவான்கரைப்பிரதேசத்தில் தான் தேடவேண்டும் என பேராசிரியர் மௌனகுரு அவர்கள் இவ்விழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் போது கூறியிருந்தமை இங்கு நினைவுகூரத்தக்கது. சடங்கும் சம்பிரதாயமும் கலந்து செய்யப்பட்டது இப்பிரதேச மக்களின் பண்பாடு கிராமியக் கலைகளை ஈன்றெடுத்த தனித்துவம் மிக்கது இப்பிரதேசம். கிராமியக் கலைகளைக் கட்டிக்காத்த பெருங்கலைஞர்கள் வாழ்வதும் இம்மண்ணில்தான். கூத்து, கரகாட்டம், கும்மி, கோலாட்டம், வசந்தன் என்று பல கலைகள் கோயில் வழிபாட்டோடும் சம்பிரதாயத்தோடும் சேர்ந்து வளர்ந்தன. தமிழர் பண்பாட்டின் மூலத்தினையும் வரலாற்றினையும் இத்தகைய கலைகளைப் போற்றி வளர்ப்பதனூடாக காத்துக்கொள்ள முடியும். சினிமா தோற்றுவித்திருக்கும் கவர்ச்சியும் சமஸ்கிருத மயமாக்கமும் நாகரீக மோகமும் நம் பாரம்பரிய கலை மரபுகளை பின்னடையச் செய்து கொண்டிருக்கும் சூழலில் கடந்த வருடம் நடந்த மண்கமழும் மங்கல விழா முக்கியமானது. மருவிக்கொண்டிருக்கின்ற மறந்துகொண்டிருக்கின்ற கிராமியக் கலைகளை ஒருமுறை பார்க்க சந்தர்ப்பம் வந்துவிட்டதே என்ற மகிழ்ச்சி இவ்விழாவினைக் கண்டுகளித்த பார்வையாளர்களின் முகத்தில் தெரிந்தது.

சினிமாப் பாடல்களைப் பாடித்திரிந்தவர்களின் வாய்கள் கிராமியப்பாடல்களை முணுமுணுக்கத் தொடங்கியுள்ளன. நாகரீக மோகத்தால் தூக்கியெறியப்பட்டு விட்டோமோ என்று மனம் நொந்து போயிருந்த கிராமியக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட கிராமியக் கலைச்சுடர் விருதும் கௌரவிப்பும் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தின. அத்துடன் 1997ம் ஆண்டு கொம்புமுறி விளையாட்டினூடாக 'கொம்பு' மலரினை வெளியிட்ட பின்பு இதுவரை பிரதேச கலாசார பேரவையினால் மலர் வெளியீடோ கலைஞர் கௌரவிப்போ இடம்பெறவில்லை. மண்மீதும் மொழிமீதும் கலையம்சம் மீதும் ஆத்மார்த்த ஈடுபாடு எல்லோருக்கும் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. வாழ்நாளை கலைக்காக அர்ப்பணித்து வாழ்ந்த கலைஞர்களுக்கு ஒன்றியத்தின் இச்செயற்பாடு நிச்சயம் மன மகிழ்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியிருக்கும். அதுமட்டுமின்றி இவைதாம் நம் தேசத்தின் கலைகள் இவற்றைப் போற்றிக் காக்க வேண்டும் என்ற மனநிலையினையும் இளம் சமூகத்தினரிடையே இவ்விழா ஏற்படுத்தியது.

விழாவில் ஒரு பகுதியாக காலையில் இடம்பெற்ற ஆய்வரங்கு இப்பிரதேசத்தில் ஒரு முதல் முயற்சியாகும். பெரும்பாலும் பல்கலைக்கழகங்களில் இடம்பெறுகின்ற

> 1997ம் ஆண்டு கொம்புமுறி விளையாட்டினூடாக 'கொம்பு' மலரினை வெளியிட்ட பின்பு இதுவரை பிரதேச கலாசார பேரவையினால் மலர் வெளியீடோ கலைஞர் கௌரவிப்போ இடம் பெறவில்லை. மண்மீதும் மொழி மீதும் கலையம்சம் மீதும் ஆத்மார்த்த ஈடுபாடு எல்லோருக்கும் இருக்கு மென எதிர்பார்க்க முடியாது.

ஆய்வரங்குகள், அரிதான சந்தர்ப்பங்களிலேயே பிரதான நகர்களில் இடம்பெறுவது வழக்கம். கிராமங்களில் இடம்பெறுவதில்லை. இதற்கு அப்பால் இப்பிரதேசம் சார்ந்த நான்கு விடயங்களை மையப்படுத்தி அத்துறைகளில் அனுபவமுள்ளவர்களை இணைத்து செய்யப்பட்ட இவ்வாய்வரங்கு உண்மையில் ஒரு மாற்றத்துக் கான சூழலினையே சுட்டிக்காட்டியது. உயர் நிலைப்படுத்தப்பட்டதாக - அதிகார வர்க்கத்தோடு தொடர்பு பட்டதாக இருந்து வந்த ஆய்வரங்கு, சாதாரண மக்களும் பங்கெடுக்கக் கூடியதாக - ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களுடன் பொருந்தி அமைந்திருந்த தன்மை எல்லோரையும் கவர்ந்திருந்தது. மண்கமழும் மங்கல விழாவில் மிக முக்கியமான பகுதியாக அமைந்திருந்த 'மெல்லப்பறத்தல்' நூல் வெளியீடு எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. பல பணி செய்திருக்கிறோம் என்று வாய்ச் சொல்லில் வீர உரை பகர்வதை விடுத்து செய்த பணியை எதிர்கால சமூகமும் ஊக்கம் பெற்று ஆக்கம் படைக்கும் விதமாய் நூலாக - ஒரு ஆவணமாக உதவியின் நண்பர்களும் ஒன்றியத்தினரும் செய்த முயற்சி பலரதும் பாராட்டைப் பெற்றது. நூலின் ஆக்கங்களை எழுதிய மாணவர்கள் - இளம் படைப்பாளர்கள் மாத்திரமின்றி வாசித்துக்கொண்ட அனைவரதும் மனதில் பெரும் மாற்றத்தை இந்நூல் ஏற்படுத்தியது. படைப்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று படைப்பாளர்களையும் அவர்களின் உறவினர்களையும் சந்தித்து உரையாடிய போது அவர்களின் மன கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்தின. என்னால் இதைச் செய்திருக்க முடிந்திருக்கின்றது என்பதே ஆச்சரியமாக உள்ளது. இப்போதுதான் எனது திறமை எனக்கே தெரிந்திருக்கிறது என்று சிலர் கூறினர். எனது முதல் படைப்பே நூலில் வெளிவந்தமை அளவு கடந்த சந்தோசத்தை ஏற்படுத்தியது. இது போன்று நானே பல ஆக்கங்களை எழுதி அவற்றை ஒன்றாகச் சேர்த்து வெளியிடவுள்ளேன். என்று இன்னும் சிலர் கூறினர். இனிவரும் சந்தர்ப்பங்களில் நாமும் ஆக்கங்களை எழுதுவோம் என்று இந்நூலில் ஆக்கங்களை எழுதத் தவறிய பலரும் கூறியமை அனைத்தும் மாற்றத்துக்கான சூழலையே படம் போட்டுக் காட்டுகின்றது.

யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தத்தி னாலும் காலம் காலமாக மகிழ்வான வாழ்வை இழந்ததோடு மொழி வெளிப்பாட்டுத் திறனையும் இழந்து தவித்தோர்க்கு இந்நூல் வெளியீட் டுக்கான உதவி உண்மையில் மிகப்பெரிய உதவி. படுவான்கரைப் பிள்ளைகளுக்கு இத்தனை திறமைகள் உண்டா என்று ஆச்சரியப்படும் படியாக - ஒரு காரியம் காலப்பதிவோடு நடந்தேறி யிருக்கிறது.

படுவான்கரை என்பது விவசாயக் குடிமக்கள் வாழ்வது. ஏழ்மை நிலையில் வாழும் மக்கள் அவர்கள் உணவுப்பழக்கம் தொடக்கம் உடை அணிவது உட்பட அனைத்திலும் நாகரீகம் அற்றவர்கள் என்னும் பார்வை நகர்ப்புறத்தில் சில நண்பர்களிடையே உண்டு. பட்டிக் காட்டாக் களுக்கு முட்டாசிக் கடையைக் காட்டின மாதிரி படுவான் கரை ஆக்கள் மாதிரி என்று வழங்கும் சொற்றொடர்கள் இவற்றை எடுத்துக்காட்டும். நகரப் பகுதியிலிருந்து இப்பிரதேசத்திற்கு வந்து கடமையாற்றும் சிலரிடமும் இத்தகைய பார்வைகள் உண்டு. இவர்களை நம்பி எதனை யும் ஒப்படைக்க முடியாது. இவர்கள் எதனையும் சிறப்பாகச் செய்ய மாட்டார்கள் என்றெல்லாம் படுவான்கரை மக்களைப் பற்றி படிமம் கட்டியிருந்த போலிமுகங்கள் சிறப்பாக நடந் தேறிய இவ்விழாவினூடாக ஆச்சரியப்பட் டுப்போயின. சமூகத்தில் மாற்றம் என்பது நிச்சயம் வேண்டும். மாறாத எதுவும் வளராது என்பார்கள். படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு எழுச்சி ஏற்பட்டுள்ளது. மண்கமழும் மங்கல விழா அதற்கு தூண்டுதலாய் அமைந்துள்ளது. இந்த மாற்றத்தினையும் மாற்றத்திற்கான சூழலினையும் அனைவரும் உண்மையாக உணர்ந்து இளையோர் தம்வாழ்வை வெல்லப்பறக்க வழிவிடுவது சாலச்சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேராசிரியர் மா. செல்வராஜா

## கல்விச் சுடர் விருது

மட்டக்களப்பு முனைக்காட்டில் மாணாகப்போடி - சங்குபதி தம்பதியினருக்கு மகனாக 14.10.1948ல் பிறந்த பேராசிரியர் மா.செல்வராஜா மட்டக்களப்பு மண்ணுக்கு அளப்பரிய கல்விப்பணியாற்றி வருகிறார்.

பாடசாலைக் கல்வியை தாழங்குடா உரோமன் கத்தோலிக்கமிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, தாழங்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சிவானந்தா வித்தியாலயம் என்பவற்றில் பெற்று 1969ல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வாகி 1974இல் இளம் கல்வி மாணி சிறப்புப் பட்டத்தினை (B Ed - Hons) பெற்றார். 1974ல் குருநாகல் மாவட்டத்திலுள்ள பொல்ககாயாய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி முதல் நியமனத்தைப் பெற்று ஆசிரியத் தொழிலை தொடங்கி பின் பிரபலமான பல பாடசாலைகளில் ஆசிரியர், அதிபர் பதவிகளை வகித்துள்ளார். பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே முதுகல்விமாணி (M Ed) கல்வித்துறை முதுதத்துவமாணி (M phil) ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டார். தேசிய கல்வி நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டி ருந்த 1990-1998 காலப்பகுதியில் உலக வங்கியின் அனுசரணையில் லண்டன் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் இணைந்து (1991-1992) கல்வி முகாமைத்துவம் மற்றும் நிருவாகத் துறையில் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

1996ல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக நியமிக்கப்பட்டு 1998ல் சிரேஷ்ட விரிவுரையாளரானார். தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை, கலாசார பீடாதிபதியாகவும் கல்வி பிள்ளை நலத்துறைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவராகவும் விளங்குகிறார்.

1978ல் சூறாவளி பாரிய அழிவுகளை ஏற்படுத்தியது. படுவான்கரைப் பிரதேசம் கல்வி, பொருளாதார நிலைகளில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இச்சூழலில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தி படுவான்கரை மண்ணை முன்னேற்றும் பொருட்டு 1979ல் ஒளிக்கல்லூரி என்னும் இலவசமாக கல்வி வழங்கும் கல்லூரியை நிறுவினார். அதனூடாக பல ஆசிரியர்களை இணைத்து கல்விச்சுடர் ஏற்றினார். இவரின் இப்பணியில் பலமும் ஆளுமையும் மிக்க கல்விச் சமூகம் உருவாகியது. இன்றுவரையும் ஒளிக்கல்லூரி என்னும் நாமம் நிலைத்து நிற்கின்றது. வறிமாணவர்கள், கல்வி வாய்ப்பினைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கிய வர்களைக் கருத்தில் கொண்டு கல்விப் பணியாற்றி யமைக்காக பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் "கல்விச் சுடர்" விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. முருகேசு தயாநிதி

### மகிழை மகேசன் நினைவு விருது

அம்பிளாந்துறையில் 1971ல் பிறந்த முருகேசு தயாநிதி (முருகு தயாநிதி) தற்போது நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றுகிறார்.

கலைமாணி *(B A)*, கலைமுதுமாணி *(M A)*, கல்விமுதுமாணி *(M. Ed)*, முதுதத்துவமாணி *(M. phil)*, கல்வி டிப்ளோமா *(PGED)*, போன்ற தகுதிகளைப் பெற்றுள்ள இவர் ஓர் ஆய்வாளராகவும், கவிஞராகவும், கலைச் செயற்பாட்டாளராகவும், சமூகப் பணியாளராகவும் விளங்குகின்றார்.

இவரது நூல்கள்

'படிக்கும் போது' - கவிதை நூல் (2007)

அம்மன் காவியம் - (2008)

அம்மன் அம்மானை - (2008)

இவர் அம்பிளாந்துறை பாடசாலை வரலாறு, மட்டக்களப்பு மாவட்டத்தில் மாரியம்மன் வழிபாடு, ஒளிக்கல்லூரியும் மா.செல்வராசாவும், மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பரிகாரியார்கள் ஒரு தேடல் என்று 25ற்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். சூரசம்மாரம் கூத்தேடு ஓர் ஆய்வுப் பதிப்பினை 2011ல் மேற்கொண்டுள்ளார். பல புதிய கலை வடிவங்களையும் எழுதியுள்ளார்.

பிரதேச பண்பாட்டம்சங்களை ஆய்வினூடாக வெளிப்படுத்தி வருகின்றமையைப் பாராட்டி, மட்டக்களப்பு தமிழியல் ஆய்வுக்கு வளம் சேர்த்த கலாபூசணம் க.மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) அவர்களின் நினைவாக இவருக்கு மகிழை மகேசன் நினைவு விருது 2011.03.27ம் திகதி நடாத்தப்பட்ட மண்கமழும் மங்கல விழாவின் போது வழங்கப்பட்டது.



## திரு. தெ. பிலவேந்திரன்

### கிராமிய கலைச்சுடர் விருது (தபேலா)

கொக்கட்டிச்சோலையில் வசித்து வரும் தெய்வநாதன் பிலவேந்திரன், (1955.01.25) தன் தந்தையின் பொழுது போக்காகக் காணப்பட்ட மிருதங்கம், தபேலா வாசித்தல் போன்றவற்றில் சிறுவயதிலிருந்தே அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தார். பல இசை மேடைகளில் பங்குபற்றி பலரதும் மனதில் இடம் பிடித்தவர். பல கௌரவங் களைப் பெற்றுள்ளார். இவரது திறமையைப் பாராட்டி இவருக்கு 2011ல் நடாத்தப்பட்ட மண் கமழும் மங்கல விழாவின் போது இசைவாத்திய துறை சார்ந்து (தபேலா) கிராமியச் சுடர் விருது வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. செல்லத்துரை முருகுப்பிள்ளை

### கிராமிய கலைச்சுடர் (கவிதை)

மண்முனை தென்மேற்குப்பிரதேசத்தில் முனைக்காட்டுக் கிராமத்தில் 1965.03.15ல் பிறந்த செ.முருகுப்பிள்ளை தற்போது அரசடித்தீவுக் கிராமத்தில் இல்லற வாழ்வைத் தொடர்ந்து வருகிறார். மட்/மாவடிமுன்மாரி அ.த.க பாடசாலையின் பிரதி அதிபராக உள்ள இவர் அடிப்படையில் ஓர் கவிஞராவார். நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். வானொலிகளிலும் இவரது கவிதைகள் பல ஒலிபரப்பாகியுள்ளன. நினைவஞ்சலிக் கவிதைகளை எழுதுவதில் தனிமுத்திரை பதித்தவர். அரசடித்தீவு இளங்கதிர் கலா மன்றத்தில் இணைந்து பல தெய்வ நிலைப் பாடல்களை இசையுடன் பாடி நன்மதிப்பைப் பெற்றுள்ளார். பாடல்களை மிகவும் நயத்துடன் பாடக்கூடிய ஆற்றல் இவருக்கு உண்டு. நீண்டகாலமாக தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் கற்பித்து வருகின்றார். இவர் எழுதிய 'தானாகத் தோன்றிய லிங்கம் தான்தோன்றி அப்பனாகப் போற்றிடும் லிங்கம்...' என்னும் பாடல் இவருக்கு மிக்க பெருமை தேடிக்கொடுத்தது. கவிதைத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள பங்களிப்பினை வாழ்த்தி இவருக்கு 2011 மண்கமழும் மங்கல விழாவின் போது கிராமியகலைச்சுடர் விருது வழங்கப்பட்டது.



## திரு. வெற்றிப்போடி சின்னத்தம்பி

### கிராமியக் கலைச்சுடர் (சித்த மருத்துவம்)

மட்டக்களப்பு பண்டாரியாவெளியில் பிறந்த (1937.04.02) வெற்றிப்போடி சின்னத்தம்பி ஆயுள்வேத சித்த வைத்தியராக பணியாற்றி வருகிறார். மூன்றாம் தரம்வரை கல்வி கற்ற இவர் 13 வயதிலிருந்து தன் தந்தையின் அனுபவத்தினூடான பரம்பரைவாசியாக இப்பணியைச் செய்து வருகின்றார். விசவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் என்பவற்றில் பெயர் பெற்றவர். ஆற்றிவரும் சேவை காரணமாக பலராலும் பாராட்டப்பட்டவர்.

இவரது பணியினைப் பாராட்டி இவருக்கு 2011ம் ஆண்டு கிராமிய கலைச்சுடர் விருது சித்த மருத்துவத்திற்காக வழங்கப்பட்டது.



## திருமதி. மாணிக்கம் அழகிப்போடி

### கிராமியக் கலைச்சுடர் விருது (நாட்டு மகப்பேற்று வைத்தியம்)

1934ல் கொக்கட்டிச்சோலையில் பிறந்த அழகிப்போடி மாணிக்கம் 40 வருடங்களுக்கு மேலாக மருத்துவிச்சியாக அளப்பரிய பணி ஆற்றியுள்ளார். வைத்திய வசதிகள் மிகவும் குறைந்த படுவான்கரைப் பிரதேசத்தில் பலருக்கு மகப்பேற்று வைத்தியம் செய்து பலரது உயிரைக் காப்பாற்றியுள்ளார். மென்ரசா சென்று அதனூடாக தனது கலையை விருத்தி செய்துள்ளார். சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்த இவரை வாழும் போதே வாழ்த்தும் நோக்குடன் 2011ல் இவருக்கு மண்கமழும் மங்கல விழாவின் போது கிராமியக் கலைச்சுடர் விருது வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. முருகுப்பிள்ளை குணரெத்தினம்

### கிராமிய கலைச்சுடர் விருது [கவிதை]

அம்பாறை மாவட்ட கோமாரியில் (பாணமைப்பற்றில்) முருகுப்பிள்ளை மாரிமுத்து தம்பதியினருக்கு மகனாக 1959.03.12ல் பிறந்த இவர் தற்போது மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் வாழ்ந்து வருகிறார். இளங்கலைமாணி (B A), முதுகலைமாணி (M A), பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGED), போன்ற பட்டங்களைப் பெற்ற இவர் நீண்டகாலம் தமிழ்ப்பாட ஆசிரியராக கடமையாற்றிய இவர் 2009.07.16 முதல் நிறைவேற்று அதிபரானார். தற்போது கச்சக்கொடிசுவாமிமலை பாடசாலையில் அதிபராக கடமையாற்றுகிறார் கவிதைகள், நாடகங்கள், வில்லுப்பாடல்களை எழுதியுள்ளதோடு ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நாடகங்களிலும் கூத்துக்களிலும் பங்கேற்றுள்ளார். கலை பண்பாட்டுக் கழகத்திற்காக இவர் எழுதிய மண்ணின் மைந்தர்கள் நாடகம் இவருக்கு முதலாம் பரிசைக் பெற்றுக் கொடுத்தது. பல கவியரங்குகளிலும் விவாத அரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார். ஆசிரியர் பணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக இலங்கை அரசின் அதியுயர் விருதுகளில் ஒன்றான 'வித்தியா கீர்த்தி சிறிசம்மான விருது' 2005ல் இவருக்கு வழங்கப்பட்டது.

கவிதைத் துறையில் இவர் ஆற்றிய பணியினைப் பாராட்டி இவருக்கு கிராமியக் கலைச்சுடர் விருது வழங்கப்படுகிறது.



## திருமதி. செம்பாப்போடி ராசம்மா

### கிராமிய கலைச்சுடர் விருது [நாட்டு மகப்பேற்று வைத்தியம்]

1942ல் கொக்கட்டிச்சோலையில் பிறந்த செம்பாப்போடி ராசம்மா கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக மருத்துவிச்சியாக சேவை செய்துள்ளார். ஆரம்ப காலத்தில் தற்காலிகமாக மேற்கொண்டு பின்னர் சத்துருக்கொண்டான் பயிற்சி நிலையத்திற்குச் சென்று பயிற்சிகளைப் பெற்று தமது இக்கலையை விருத்தி செய்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற சூழலில் வைத்திய வசதிகள் அற்றிருந்த படுவான்கரைப் பிரதேசத்தில் மருத்துவிச்சியாக சேவை புரிந்த இவரை வாழ்த்தி கிராமியக் கலைச் சுடர் விருது வழங்கப்படுகிறது.



## திரு. ஞானமுத்து பேரின்பம் [துரையப்பா]

### ஆன்மீகத் தொண்டர் விருது

மட்டக்களப்பு பட்டிப்பளையில் பிறந்த ஞானமுத்து பேரின்பம் (துரையப்பா) நீண்டகாலமாக ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு வருகின்றார் 1969-1975 வரையான காலப்பகுதியில் கிராமசபை தவிசாளராக இருந்துள்ளார்.14 வயது தொடக்கம் இற்றைவரைக்கும் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு வருகின்றார். பல ஆலயங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளை வகித்து வந்துள்ளார். பட்டிப்பளைப் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவராகவும், பட்டிப்பளைப் பிரதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஆலோசகராகவும் மேலும் பல அமைப்புக்களின் தலைவராகவும் உறுப்பினராகவும் உள்ளார். ஆலயங்களுக்குச் சென்று தேவார பாராயணங்களைப் பாடுவதிலும் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டு உரைகளை நிகழ்த்துவதிலும் சிறந்த பணி ஆற்றி வருகிறார். இவரது சேவையினைப் பாராட்டி இவருக்கு ஆன்மீகத் தொண்டர் விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திரு. சின்னத்தம்பி விநாயகமூர்த்தி (செல்லத்தம்பி)

## கிராமிய கலைச்சுடர் விருது (விசவைத்தியம்)

மட்டக்களப்பு பண்டாரியா வெளியில் 1948.04.28ம் திகதி பிறந்த சின்னத்தம்பி விநாயகமூர்த்தி (செல்லத்தம்பி) தற்போது அம்பிளாந்துறையில் வாழ்ந்து வருகின்றார். பரம்பரை வழியான விசவைத்தி யத்தை தனது 16 வயதில் இருந்து செய்துவரும் இவர் இத்துறையில் கிட்டத்தட்ட 38 வருட கால நிறைந்த அனுபவம் உடையவர். இதுவரையும் 4000 பேருக்கு மேல் விச வைத்தியம் செய்துள்ளார்.

விசவைத்தியத் துறையில் இவர் ஆற்றிவரும் பணியினைப் பாராட்டி இவருக்கு கிராமியக்கலைச் சுடர் விருது வழங்கப்பட்டது.



## திரு. வேலாட்சி வல்லிபுரம்

## கிராமிய கலைச்சுடர் விருது (கூத்து)

மட்டக்களப்பு மகிழடித்தீவைச் சேர்ந்த வேலாட்சி வல்லிபுரம் கூத்துக் கலையின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். 1939.03.04ம் திகதி பிறந்த இவர் தனது 13வது வயதிலிருந்தே கூத்துக்கலையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். இது தவிர கரகம், கும்மி, காவடிப்பாடல், வசந்தன் போன்றவற்றிலும் மிகுந்த ஈடுபாடுடையவராக விளங்கியுள்ளார்.

பல கூத்துக்களில் ஆடிய இவர் அல்லி நாடகம், நொண்டி நாடகம், சாமேந்திரன், சாரங்கரூப நாடகம், சத்தியவான் சாவித்திரி, வீர அபிமன்யு வாள பீமன் நாடகம், ஸ்ரீ வள்ளி திருமணம், அனுவுருத்திரன் நாடகம், அலங்காரபேன் நாடகம், இரணிய சங்காரம், அங்க சுந்தரி நாடகம், 17ம், 18ம் போர் போன்ற பல கூத்துக்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். 2002ல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூசணம் விருதைப் பெற்றுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி இவருக்கு கிராமிய கலைச்சுடர் விருது வழங்கப்பட்டது.



## திரு. சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம்

## ஆன்மீகக் குரல் விருது

மட்டக்களப்பு களுதாவளையில் பிறந்த சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் தற்போது முதலைக்குடாவில் வசித்து வருகின்றார். 1938.10.30ம் திகதி பிறந்த இவர் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர், 1989ம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராகவும் கொத்தனி அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

ஆலயங்கள் பலவற்றில் முக்கியமான பொறுப்புக்களில் இருந்துள்ளார். தற்போதும் இருக்கிறார். ஆலயங்களுக்குச் சென்று ஆன்மீகச் சொற் பொழிவுகளை நடாத்துதல் ஆலயங்களில் திருவாசகமுற்றோதல், பஞ்சபுராணம் பாடுதல், விரத காலங்களில் புராணபடலம் பாடுதல் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்வதோடு இரங்கல் உரைகளையும் நிகழ்த்தி வருகின்றார். இவரது இச்சேவையைப் பாராட்டி இவருக்கு ஆன்மீகக்குரல் விருது வழங்கி கௌர விக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. தம்பியப்பா பேரின்பராசா

## கிராமிய கலைச்சுடர் விருது (இசை நாடகம்)

மட்டக்களப்பு அரசடித்தீவில் பிறந்த தம்பியப்பா பேரின்பராசா (1977.10.27) ஓர் துடிப்புள்ள கலைஞராவார். மட்/களுவுந்தன்வெளி வித்தியாலயம், மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் என்பவற்றில் பாடசாலைக் கல்வியைப் பெற்ற இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (B A) பட்டத்தினைப் பெற்றார். தற்போது மண்முனை தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளராக பதவி புரிகின்றார்.

அரசடித்தீவு இளங்கதிர் கலா மன்றத்தின் தலைவராக இருக்கும் இவர் 25க்கு மேற்பட்ட இசை நாடகங்களை மேடையேற்றியுள்ளார். பாடல்களையும் கதை வசனங்களையும் எழுதி அவற்றுக்கு இசையையும் வழங்கி பலரையும் பல சந்தர்ப்பங்களில் வியக்க வைத்துள்ளார். புராண இதிஹாச பாத்திரங்களை இன்றைய சமூகத்தளத்தில் வைத்து ஆர்வத்துடன் பார்க்கக்கூடிய வகையில் அவற்றை அளிக்கை செய்வதிலும் சிறப்புடையவர். இவரது இசை நாடகங்களில் 'பாலைவனம்', 'மணமில்லா மன்னவன்', 'ஏங்கும் இதயம்', 'செய்நன்றி' லவ்வீகத்திலிருந்து தெய்வீகத்திற்கு போன்றவை பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டவை.

இன்றைய காலத்திற்கேற்ப இத்துறையை வளர்க்க வேண்டுமென்னும் வகையில் இவருக்கு கிராமிய கலைச்சுடர் விருது வழங்கப்படுகிறது. இவர் தயாரித்த இசை நாடகங்கள் பிரதேசத்திற்கு அப்பால் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டுள்ளதோடு இறுவட்டுக்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.



## திரு. கதிராமப்போடி சின்னத்தம்பி

## கிராமிய கலைச்சுடர் விருது (கூத்து)


மட்டக்களப்பு முனைக்காட்டில் வாழ்ந்து வரும் கதிர்காமப் போடி சின்னத்தம்பி சிறந்த கூத்துக் கலைஞராவார். இதுவரை 10ற்கு மேற்பட்ட கூத்துக்களைப் பழக்கியுள்ளார். கடோக்கியன் போர், குருசேத்திரன் போர், சராசந்தன் போர், அஞ்சனா யுத்தம் போன்றவை அவற்றுள் சில. 2004ம் ஆண்டு மட்/முதலைக்குடா மகாவித்தியாலய மாணவர்களுக்கு இவர் பழக்கிய கூத்து மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இவரது பணியினைப் பாராட்டி இவருக்கு கூத்துப் பிரிவுக்கான கிராமியக் கலைச்சுடர் விருது வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி சிறப்புற வாழ்த்துக்களும் அனுசரணையும்



வேள்ட் விஷன்
பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தி திட்டம்

World Vision

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல. : 065 2227170